பக்கங்கள்: பதினாறு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 சித்திரை 25 வெள்ளிக்கிழமை (08.05.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 163

மாநகர சபை
யாழ்ப்பாணம்.

## ஆயுதங்களைக் கீழே வைத்துவிட்டு

# சரண் அடைந்து விடுமாறு

# புலிகளுக்கு அழுத்தம் கொடுங்கள்!

### சர்வதேச நாடுகளுக்கு ஜனாதிபதி அழைப்பு



கொழும்பு, மே. 8

ஆயுதங்களைக் கீழே வைத்துவிட்டு சரணடையுமாறு, தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு சர்வதேச நாடுகளே அழுத்தம் கொடுங்கள்!

தமது விருப்பத்துக்கு மாறாக விடுதலைப்புலிகளால் மனிதக் கேடயங்களாக தடுத்து வைக்கப்பட்டிருக்கும் மக்களை விடுவிக்குமாறும் புலிகளுக்கு அழுத்தம் கொடுங்கள்!!

இவ்வாறு சர்வதேச நாடுகளுக்கு நேற்று அழைப்பு விடுத்தார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

வெளிநாட்டு இராஜதந்திரிகள் மத்தியில் தற்போதைய நிலைவரம் குறித்து நேற்று ஆற்றிய விசேட உரையின் போதே அவர் இந்த அழைப்பை - வேண்டுகோளை - விடுத்தார்.

இலங்கையின் இன்றைய யதார்த்த நிலையைப் புரிந்து கொண்டு உதவுமாறு சர்வதேச நாடுகளிடம் வேண்டுகோள் விடுத்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ -

உலக நாடுகளை தமது தேசங்களில் உள்ள விடுதலைப்புலிகளின் சர்வதேச முன்னணி அமைப்புகள் மீதும் நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக்கொண்டார்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

### பயணிகள் கப்பல் சேவை இன்று இடம்பெறும்

யாழ்ப்பாணம், மே 8

காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை இன்று வெள்ளிக்கிழமை இடம் பெறவிருக்கிறது. யாழ். அரச அதிபர் கே.கணேஷ்

(16 ஆம் பக்கம் பார்க்க).

### கொழும்பில் நேற்றுத் தேடுதல் 22 தமிழ் இளைஞர்கள் கைது

கொழும்பு, மே 8

கொழும்பில் நேற்றுக் காலை இடம் பெற்ற தேடுதல் நடவடிக்கையில் நூற்றுக்கும் அதிக மான தமிழர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர் எனத் தெரிவிக்கப் படுகிறது.

22 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவுக்கு ஒரு வாரத்தின் பின்னர் நேற்று 25 மெ.தொன் உணவுப் பொருள்

### மத்திய பகுதியில் சண்டை; அதனால் அபாயநிலை

ஜெனிவா, மே8

முல்லைத்தீவு மக்கள் பாதுகாப்பு வலயத்தில் சிக்கியுள்ள மக்களுக்கு ஒருவாரத்திற்குப் பின்னர் 25 மெற்றிக் தொன் உணவு மற்றும் மருந்துப் பொருள்கள் நேற்று எடுத்துச் செல்லப்பட்டு அங்கு விநியோகிக்கப்பட்டன.

அத்துடன் அங்கிருந்து காயமடைந்தோர் மற்றும் நோயாளிகள் என 495 பேர் கப்பல் மூலம் நேற்றுக் கூட்டிச் செல்லப்பட்டனர்.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் தென்னாசிய நடவடிக்கைகளுக்குப்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## எமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் ஐ.சி.ஆர்.சிக்கு பாதுகாப்பு வழங்கப்படும்

### விடுதலைப் புலிகள் தரப்பில் தெரிவிப்பு

கொழும்பு, மே 8

செஞ்சிலுவைச் சர்வதேச குழு தனக்குரிய பணிகளை எமது கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் மேற்கொள்வதற்கு நாம் சகல பாதுகாப்பையும் அளிப்போம் - என்று விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர் என இணையத்தளச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கொழும்பிலுள்ள செஞ்சிலுவைச் சர்வதேச குழுவின் தலைமையலுவலகத்திற்கு

(16 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணம், வவுனியாவில் உள்ளூராட்சித் தேர்தல்; இந்த மாத முற்பகுதியில் நியமனப் பத்திரங்கள் கோரப்படும்

### ஜனாதிபதி நேற்றுத் தகவல்

கொழும்பு, மே 8

யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா மாவட்டங்களில் உள்ள உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தலுக்கு நியமனப் பத்திரங்கள் இந்தமாத முற்பகுதியில் கோரப்படவிருக்கின்றன.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

வெளிநாட்டு ராஜதந்திரிகள் மத்தியில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர்

(16 ஆம் பக்கம் பார்க்க)

### இந்திய அரசின் உதவியுடன்

## புல்மோட்டையில் இயங்கும் தள வைத்தியசாலை செட்டிக்குளம் பகுதிக்கு இடம்மாற்றப்படும்

கொழும்பு, மே 8

மோதல் இடம்பெறும் பிரதேசங்களில் இருந்து இடம்பெயர்ந்து வரும் மக்களுக்கு சிகிச்சை அளிக்கவென புல்மோட்டையில் இந்திய அரசின் உதவியுடன் இயங்கி வரும் தள வைத்தியசாலை, வவுனியா, செட்டிக்குளம் பகுதிக்கு இடம்மாற்றப்பட உள்ளது.

இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் செயலாளர் டாக்டர் அத்துல கொஹந்த லியனகே தெரிவித்துள்ளார்.

இதேவேளை -

(16 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் கடைசிக் காவல் அரணையும் கைப்பற்றி விட்டதாகப் படையினர் அறிவிப்பு

கொழும்பு, மே 8

முல்லைத்தீவில் முள்ளிவாய்க்கால் பகுதியில் அமைந்திருந்ததாகக் கருதப்படும் விடுதலைப்புலிகளின் கடைசிச் சுரங்க காவலரணும் கைப்பற்றப்பட்டுவிட்டது என இராணுவத் தரப்பு அறிவித்துள்ளது.

வெள்ளைமுள்ளிவாய்க்காலுக்கு தெற்கே விடுதலைப்புலிகளால் அமைக்கப்பட்டிருந்த கடைசிச் சுரங்கக் காவலரண் படையினரால் கடும் சண்டையின் பின் நேற்று கைப்பற்றப்பட்டுள்ளது.

அந்தப் பகுதியில் நடந்த கடும் சண்டையில் பல படையினர் காயமடைந் துள்ளனர் என்றும் இராணுவத் தரப்பு கூறியுள்ளது.

58ஆவது படையணிக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நேற்று முழு நாளும் இடைவிடாது நடைபெற்ற கடும்

(16 ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே

7 ஆம் 10 ஆம் பக்கங்களில்

கல்விச்சுடர்

தரம் – 05 புலமைப்பரிசில் மாணவருக்கான தயார்படுத்தல் பரீட்சைத் தொடர்

## வன்னியில் இராணுவத்தினர் மீது புலிகள் தற்கொலைத் தாக்குதல்!

கொழும்பு, மே 8

வன்னியில் விடுதலைப்புலிகளிடம் எஞ்சியிருக்கும் பகுதியைக் கைப்பற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள படையினருக்கு எதிராக அதிகளவான தற்கொலைத் தாக்குதல்கள் இடம் பெறுகின்றன என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளின் பகுதிகளை நோக்கி முன்னேறி வரும் படையினர்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கு வருவது குறித்து ஐ.நா. செயலர் முடிவு இல்லை!

நியூயோர்க், மே 8

இலங்கைக்கு விஜயம் மேற்கொள்வது குறித்து ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ-மூன் இன்னமும் தீர்மானிக்கவில்லையென அவரது பேச்சாளர் நேற்று முன்தினம் புதன்கிழமை நியூயோர்க்கில் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் யுத்தத்தின் பிடியில் சிக்குண்டுள்ள மக்களின் உயிர்களைக் காப்பா

(16 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்த்திருவிழாக்கள் இன்று காலையில்...

## வல்வை முத்துமாரிஅம்மன் ஆலயத்தில்

யாழ்ப்பாணம், மே 08

வல்வை முத்துமாரி அம்மன் ஆலயத் தேர்த்திருவிழா இன்று காலை 7.45 மணிக்கு இடம்பெறவுள்ளது.

காலை 5.30 மணிக்கு மூலஸ்தான அபிஷேகம் 7 மணிக்கு வசந்த மண்டபப் பூசை என்பன இடம்பெற்று 7.45 மணிக்கு சுவாமி தேரில் ஆரோகணித்து பக்தர்களுக்கு அருள் பாலிப்பார். (203)

(சிறப்பு மலர் 8 ஆம் பக்கத்தில்)

★ ★ ★

## சீரணி அம்மன் ஆலயத்தில்

யாழ்ப்பாணம், மே 08

சீரணி நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானத்தில் வருடாந்தப் பெருந்திருவிழாவில் இன்று இரதோற்சவம் இடம் பெறவுள்ளது.

முற்பகல் 9 மணிக்கு வசந்த மண்டபப் பூசை இடம் பெற்று 10 மணிக்கு அம்பாள் தேரில் ஆரோகணித்து அருள் காட்சி அளிப்பார்.

நாளை காலை 10 மணிக்கு தீர்த்த உற்சவம் நடைபெறும். (1)

(சிறப்பு மலர் 9 ஆம் பக்கத்தில்)

# செஞ்சிலுவை நடத்திய வரைதல் போட்டி; வெற்றி பெற்றோருக்கு இன்று பரிசளிப்பு

யாழ்ப்பாணம்,மே 8

உலக செஞ்சிலுவை தினத்தை ஒட்டி யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட வரைதல் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு இன்று பிற்பகல் 2 மணிக்கு செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளை பணிமனையில் இடம்பெறவுள்ளது.

இந்தப் போட்டியில் இரவீந்திரன் மேனன் (ஹாட்லி), முதலாம் இடத்தையும், நடேசமூர்த்தி கவிதரன்(வேலணை, மத்திய கல்லூரி) 2 ஆம் இடத்தையும் ரி.கிருசாளினி, செல்வம் பிரியங்கா (திருக்குடும்பக் கன்னியர் மடம்) ஆகியோர் 3 ஆம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

மேலும் 22 மாணவர்களுக்கு பரிசு, சான்றிதழ் ஆகியன வழங்கப்படவிருக்கின்றன. அவர்களின் பெயர் விவரங்கள் செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளை பணிமனை விளம்பரப் பலகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. (1)

# கோப்பாயில் இன்று செஞ்சிலுவையினர் சிரமதானம்

யாழ்ப்பாணம், மே 8

உலக செஞ்சிலுவைச் சங்க தினத்தை முன்னிட்டு இன்று வெள்ளிக்கிழமை காலை 7.30 மணிக்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்க கோப்பாய் பிரிவினால் கோப்பாய் அரசினர் வைத்திய சாலையில் சிரமதானம் மேற்கொள்ளப்படவுள்ளது.

கோப்பாய் ஆஸ்பத்திரி வழாகம் துப்புரவு செய்தல், கோப்பாய் ஆஸ்பத்திரி வீதியில் உள்ள பாதீனியங்கள் ஆழிப்பு ஆகியன சிரமதானம் மூலம் மேற்கொள்ளப்படும் இச் சிரமதானத்தில் இலங்கை செஞ்சிலுவைச் சங்க அங்கத்தவர்கள் தொண்டர்கள் இளை ஞர்வட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். இச் சிரமதானத்தை இலங்கைச் செஞ்சிலுவைச்சங்க யாழ். மாவட்டக் கிளையின் உப தலைவரும் கோப்பாய் பிரிவின் செயலாளருமான வைத்திய கலாநிதி லயன் வை.தியாகராஜா ஆரம்பித்து வைப்பார். (1)


# அறிவித்தல்

பருத்தித்துறை தும்பளை நெல்லண்டை அம்மன் கோயில் தரும பரிபாலன சபை

## 65ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம்

மேற்படி விடயமாக 2009.05.01ஆம் திகதி உதயன் பத்திரிகையில் 12ஆம் பக்கத்தில் வெளிவந்த அறிவித்தலில் ''பிர மாணங்களில் மாற்றம், திருத்தம் சம்பந்தமான விடயங்களை 17.05.2009க்கு முன் கடித மூலம் செயலாளருக்கு அனுப்பிவைக்கவும்'' என்ற சொற்கள் தவறுதலாக இடம்பெற்றுவிட்டன என்றும் இச்சொற்கள் இத்தால் நீக்கப் படுகின்றன என்பதையும் அறியத்தருகின்றோம். ஏற்பட்ட தவறுக்கு வருந்துகிறோம்.

ஆ.நவரத்தினசாமி, தலைவர். ச.வீரகத்திப்பிள்ளை, செயலாளர்.

தும்பளை நெல்லண்டை அம்மன் கோயில் தரும பரிபாலனசபை.

யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்

## அவசர கலந்துரையாடல்

மேற்படி எமது சங்க அங்கத்தவர்கள் அனைவரும் 10.05.2009 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தவறாது கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம். முக்கிய குறிப்பு: கூட்டம் குறித்த நேரத்திற்கு ஆரம்பமாகும் என்பதனால் கிளைத்தலைவர்கள் தமது கிளை அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ள ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தலைவர். செயலாளர்.

## படிவம் - விற்பனையாகிறது

N.S.B. MANAGEMENT TRAINEE (GRADE) III - II

பூபாலசிங்கம் புத்தகசாலை

இல.4,ஆஸ்பத்திரி விதி, யாழ்ப்பாணம்.


# மரண அறிவித்தல்கள்

## இராஜசிங்கம் ஜெகசிங்கம் (பொறியியலாளர்)

துன்னாலை வடக்கு, வெல்லிக்கந்தோட்டத்தைச் சொந்த இடமாகவும் கிருலப்பனையை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட இராஜசிங்கம் ஜெகசிங்கம் (பொறியலாளர்) கடந்த 05.05.2009 செவ்வாய்க்கிழமை கொழும் பில் அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராஜசிங்கம் மற்றும் திருமதி தங்கம்மா இராஜசிங்கம் (காந்திமதி) தம்பதிகளின் புதல்வரும் அராலி மத்தி காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - நல்லம்மா தம்பதியினரின் மருமகனும் சிவனருள் தேவியின் (ஆசிரியை, டி.எஸ்.சேனநாயக்க ம.வி) அன்புக் கணவரும் ஜெயந்தசிங்கம், அஜயந்தசிங்கம் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜோதிமதி, ஜெயசிங்கம், விஜயசிங்கம், உருபசிங்கம், அபயசிங்கம், பிரபுசிங்கம், பகவசிங்கம், உதயசிங்கம், இராஜகீதா ஆகியோரின் அன்புச் சகோதரரும் இராஜலட்சுமி, தேவிகருணாகரி, லோகேஸ்வரி, சத்தியபாமா, தவமலர், சிவசக்தி, சுபத்திரா, குகராஜா, மகாதேவி காலஞ்சென்ற பரமநாதன் மற்றும் கனகலிங்கம், அருணகிரிநாதன், சிதம்பரநாதன், குமரகுரு, சிவசுந்தரம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு நாளை (09.05.2009) சனிக்கிழமை பி.ப. 2 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று கல்கிசை மயானத்தில் மாலை 5 மணிக்கு தகனஞ் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

55/2, பலபொக்கண வீதி,
கிருலப்பனை.
மற்றும் அராலி மத்தி,
வட்டுக்கோட்டை.
தொ.பே.: 0776378351

தகவல்:
திருமதி சிவனருள்தேவி ஜெகசிங்கம். (மனைவி)

## சிவபாக்கியலட்சுமி நாகலிங்கம்



ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் புன்னாலைக்கட்டுவன் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சிவபாக்கியலட்சுமி நாகலிங்கம் நேற்று (07.05.2009) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா தம்பதியினரின் ஏகபுத்திரியும் சின்னத்தம்பி தம்பதியினரின் மருமகளும் காலஞ்சென்ற நாகலிங்கத்தின் அன்பு மனைவியும் செல்வரட்ணம் (கொழும்பு), குணரட்ணம் (இயக்குநர், ஆனைப்பந்தி நேர்சிங்ஹோம்), பரமானந்த மூர்த்தி(கனடா), காலஞ்சென்ற ராணி மற்றும் சிதம்பரநாதன் (கொழும்பு), முருகையா (ஊரெழு), விநாயகமூர்த்தி (ஏழாலை), காலஞ்சென்ற கணேசப்பிள்ளை (ஏழாலை) மற்றும் புவனேஸ்வரி (ஏழாலை), நடேசன் (நாவலப்பிட்டி), பாக்கியலட்சுமி; (ஏழாலை), ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஜெயதேவி (கொழும்பு), செல்வராணி (ஆயுள்வேத வைத்தியர் புன்னாலைக் கட்டுவன்), மனோசாந்தி (கனடா), சரஸ்வதி (கொழும்பு), கண்மணி (ஊரெழு), பேரம்பிகன் (கனடா) காலஞ்சென்ற அகிலாண்டேஸ்வரி, காலஞ்சென்ற சீனிவாசகம், மற்றும் கந்தவனம் (ஏழாலை) ஆகியோரின் மாமியாரும் தர்ஷினி (வைத்திய அதிகாரி, ஆதாரவைத்தியசாலை/ மந்திகை), தமேந்திரா (பொறியிலாளர், கொழும்பு), சலூஜா (பல் வைத்தியர், கனடா), மனோஜா (சட்டத்தரணி, அமெரிக்கா) ஆகியோரின் பேர்த்தியும், ப்ரஹான், மிருதன் (கனடா) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (08.05.2009) வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விலங்கன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பலாலி வீதி,
புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
சுன்னாகம்.

தகவல்:
நா.குணரட்ணம் (மகன்)

## நூலகம் அபிவிருத்தி கூட்டம் நாளை

மண்டுவில், மே 08

சாவகச்சேரி நகரசபையின் பொது நூலகம் மற்றும் மீசாலை, நுணாவில் கிளை ஆகியவற்றின் நூலக அபிவிருத்தி ஆலோசனைச்சபைக் கூட்டம் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு சாவகச்சேரி பொது நூலகத்தில் நடைபெறவுள்ளதாகவும் சகல அங்கத்தவர்களையும் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்குமாறும் சபையின் செயலர் திருமதி குணமணிதேவி ஆறுமுகம் அறிவித்துள்ளார். (1-59)




# இடம் பெயர்ந்தோரின் விவரம் உரிய நேரத்தில் பார்வைக்கு

யாழ்ப்பாணம்,மே 08

வன்னியில் இருந்து இடம் பெயர்ந்து வந்து நலன்புரி நில்யங்களில் தங்கியுள்ளவர்களின் பெயர் விவரங்கள் பூரணப்படுத்தப்பட்டு முடிந்தவுடன் பொருத்தமான சந்தர்ப்பத்தில் அது பொதுமக்கள் பார்வைக்காக வெளியிடப்படும் என அரச அதிபர் கே.கணேஷ் அறிவித்துள்ளார்.

இதுவரை விவரங்கள் பார்வைக்கு வெளியிடப்படவில்லை என்றும், நலன்புரி நிலையங்களில் உள்ள மக்களின் விவரங்கள் யாழ்.செயலகத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளதாக ஏற்கனவே வெளியிடப்பட்ட செய்தி சரியானதல்ல என்றும்- அரச அதிபர் கே.கணேஷ் நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

# அலுவலகம் இடம்மாற்றம்

யாழ்ப்பாணம், மே 8

யாழ்.கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் அலுவலகம் இடம்மாற்றப் பட்டுள்ளது.

இந்த அலுவலகம் 317, பிரதான வீதியிலிருந்து தற்போது 396, பிரதான வீதி, பஸ்ரியன் சந்தியில் அமைந்துள்ள கட்டடத் தொகுதிக்கு கடந்த மாதம் (மக லாம் திகதியில் இருந்து மாற்றப் பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. (204)

# மரண அறிவித்தல்

## திருமதி இராசேந்திரம் மேரி றோசலின்



கொய்யாத்தோட்டம், பழைய பூங்கா வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசேந்திரம் மேரி றோசலின் நேற்று (07.05.2009) வியாழக்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிங்கராயர்- அன்னம்மா தம்பதிகளின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற சுவாம்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இராசேந்திரத்தின் அன்பு மனைவியும் மேரி சுசிலா, இம்மானுவல்(ஜேர்மனி), சித்திரா (நோர்வே), பிரான்சிஸ்(மனோ-கனடா), ஆகியோரின் அன்புத் தாயாரும் இம்மானுவல் ஜோசப் (முன்னாள் காசாளர், M.D.குணசேனா அன் கம்பனி, கொழும்பு), சாவித்திரி(ஜேர்மனி), போல் குணரட்ணம் (நோர்வே), கௌரி(கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஞானப்பிரகாசம் (டீசல் மெக்கானிக்-வாஸ்ஜயா), பொன்மணி (கனடா), ஆனந்தராசா(பற்றிக்) யேசுதாசன் (யேராசா-முன்னாள் சாரதி, பெருந்தெருக்கள் திணைக்களம்), S.L.மரியநாயகம் (கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சம்மேளனம்), மாட்டின்(பால்ராசா- நீர்கொழும்பு), றோஸ்மலர் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான புஸ்பராணி, ஜோசப் மற்றும் புலோமினி (கிளி) அஞ்சலா, ராஜினி, சறோஜினி ஆகியோரின் அன்பு மைத்துனியும் சுபாசினி, றொகான்(லண்டன்), சுதர்சன் (H.N.B. யாழ்ப்பாணம்) யூடினிஜோன்சன் (கனடா), டிலான், டிலக்சன்(ஜேர்மனி), ஜெனிபா, செபான்(நோர்வே), ஆகாஸ், ஆர்த்திக், ஆரபிகா(கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அனோ ஜனின்(லண்டன்), அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்தில் இருந்து நாளை (09.05.2009) சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு எடுத்துச் செல்லப்பட்டு புனித மரியன்னை பேராலயத்தில் இறுதி இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும் .

இந்த அறிவித்தலை அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

66, பழைய பூங்கா வீதி,
கொய்யாத் தோட்டம்,
யாழ்ப்பாணம்.

தகவல்:-
இம்மானுவல் ஜோசப் (மருமகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# 'வெசாக்' கொண்டாடும் தகுதி உண்டா?

இன்று 'வெசாக்' பண்டிகைத் திருநாள். அத்துடன் சித்திரா பௌர்ணமி தினமும் கூட.

இலங்கைத் தீவின் இரு பெரும் மதங்களான பௌத்தத்துக்கும் இந்து சமயத்துக்கும் போற்றுதற்குரிய - மிக முக்கிய - நோன்பு நாள்கள் இவை.

இந்த வெசாக் தினம் பௌத்தர்களால் போற்றிப் பூஜிக்கப் படுவதற்கு முக்கிய காரணம் உண்டு. பௌத்த சீலத்தை உலகுக்குப் போதித்த கௌதம புத்தர் நேபாளத்தின் எல்லைப்புறத்தில் அவதரித்ததும், அரசமரத்தடியில் ஞானோதயம் பெற்றதும், அன்பு மார்க்கத்தைப் போதித்து பரிநிர்வாணம் அடைந்ததும் இந்த வெசாக் புண்ணிய தினத்தில்தான்.

சித்தார்த்த கௌதமரின் சிந்தனையில் இத்தினத்தில் ஒரு சிறு பொறியாகப் பட்டுத் தெறித்த ஞானம், தெளிந்த ஞானக் கடலாகப் பின்னர் பரந்து வியாபித்து, விசாலித்து, உலகைப் பற்றிப் பிடித்து, வழிப்படுத்தி, நெறிப்படுத்தியது என்பதால் இத்தினம் மகத்துவமானதாகின்றது.

உயரிய வாழ்க்கை நெறியை - பஞ்ச சீல மார்க்கத்தை - உலகுக்கு ஈந்த ஓர் அவதரிப்பை பெரு மகிழ்வோடு கொண்டாடுவது - அதுவும் அந்த உயரிய மார்க்கம் தழைத்து, பரவி, நிலைநிறுத்தப்பட்டிருப்பதாக உரிமை கோரும் ஒரு தேசம் அதைக் கொண்டாடுவது - பொருத்தமானதுதான். ஆனால் இந்த உயரிய நிகழ்வைக் கொண்டாடி அனுஷ்டிக்கும் தகுதியும், தகைமையும், உரிமையும் இந்த இலங்கைத் தீவுக்கு இன்று உண்டா என்பதுதான் இன்றைய் பிரதான கேள்வியாகும்.

சுமார் இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் கௌதம புத்தரிடம் இருந்து வெளிப்பட்ட இந்த அறிவியல் அதிர்வு இன்றுவரை உலகை வளப்படுத்தி, வழிப்படுத்தி, வலுப்படுத்தும் ஓர் உயரிய மார்க்கமாகப் போற்றப்படுகிறது அது பெருமைக்குரிய விடயமாகும்.

மனிதத்துவம் பற்றியும், ஒழுக்கமான வாழ்க்கை குறித்தும் ஞான சீலர் புத்தரிடமிருந்து வெளிப்பட்ட சிந்தனைகளும், போதனைகளும், அதை நடைமுறை வாழ்வில் வளமுறப் பயன்படுத்தி அனுபவ வாயிலாக அதை வெளிப்படுத்திய அவரின் வழிகாட்டல்களும் ஆசியாவின் கிழக்கேயும் மேற்கேயும் பெரும் புயலாகப் பற்றிப் பரவிப் பிடித்து நிலைகொண்டன. இலங்கையில் மட்டுமல்லாமல், கொரியா, ஜப்பான், சீனா, தாய்லாந்து எங்கும் அவரின் போதனைகளும் அவர் நெறிப்படுத்திய உயரிய மார்க்கமும் இன்னும் ஆழமாக நிலைபெற்று சுடர்விட்டுப் பிரகாசிக்கின்றன.

இன்று உலகில் தார்மீக சிந்தனையையும் சீரிய வாழ்வியல் முறைகளையும் போதிக்கும் மார்க்கங்களுக்குள் - மதங்களுக்குள் - மிக உயர்ந்ததாகப் போற்றப்படும் அளவுக்கு பௌத்தத்தின் கோட்பாடுகளும், சிந்தனைகளும், வழிகாட்டல்களும் அது வலியுறுத்தும் அறநெறித் தத்துவங்களும் விஞ்சி விளங்குகின்றன.

கருணை, சமத்துவம், சமரசம், அன்பு, பரிவு, நேசம், குரோதமின்மை, பழிவாங்காமை, அரவணைப்பு, கண்ணியம், கட்டுப்பாடு போன்ற சமாதான - அமைதி - வாழ்வுக்கு அடிப்படையான பண்பியல்புகளைக் கடைப்பிடிப்பதை மட்டுமே பௌத்தம் போதித்தது. குரோதத்தையும், விரோதத்தையும், கொலை வெறிப் போக்கையும், கொடூரத்தையும் நோக்கி மனிதத்துவத்தை அது வழிப்படுத்தவில்லை. யுத்த வெறியை அது வரவேற்கவில்லை.

சித்தார்த்தரின் உயரிய விழுமியங்களை அடிப்படையாகக் கொண்ட பௌத்தநெறி அஹிம்சையையும், அன்பையும், சாத்வீகத்தையும் அரவணைத்துச் செல்ல வலியுறுத்திய அதேசமயம், தன் நெறியைப் பரப்புவதற்கேனும் மேலாதிக்கத்தை ஒரு வழியாகக் கொள்ள அது கூறவில்லை. யுத்தத்தை வெறுத்து சமாதானத்தை நிலைநாட்டத் தனது ஞான வழிகாட்டலைப் பயன்படுத்தினார் சித்தார்த்தர். யுத்த வெற்றி மூலமும், ஆக்கிரமிப்பு மற்றும் அடக்குமுறைகள் மூலமும் அதிகாரத்தைத் தக்க வைக்கும் கொலை வெறிக் கலாசாரத்தை அவர் நமக்குப் போதிக்கவில்லை. அதனை அவர் வெறுத்தார்.

ஆனால், இன்று அவரின் ஞான சீலத்தைப் பரப்புபவர்களாகத் தம்மைக் காட்டிக்கொள்ளும் தென்னிலங்கைத் தலைவர்கள் யதார்த்தத்தில் என்ன செய்கின்றார்கள்?

கௌதம புத்தர் எதை வெறுத்து ஒதுக்கினாரோ, அதனை அவரின் நெறியை - மார்க்கத்தை - நிலை நிறுத்தும் செயற்பாடாகக் காட்டிக்கொண்டு முன்னெடுக்கின்றார்கள் நவீன சித்தார்த்தர்கள்! என்னே கொடூரம் இது.....?

உயர்ந்த அறநெறி மார்க்கம் என்று முழு உலகமுமே வியந்து போற்றி, ஏத்தி மகிழும் பௌத்த தர்மம் உலகில் பரப்பப்படுவதற்கும் நிலைநிறுத்தப்படுவதற்குமாக ஒரு வாள் கூட நிமிர்த்தப்படவில்லை. ஒரு துளி இரத்தம் கூட சிந்தப்படவில்லை. ஆனால் இன்று இங்கு நடப்பது என்ன?

பௌத்தம் என்ற பிரபஞ்ச நெறி, இந்தத் தீவில் தான் பரவி நிற்பதாகக் கூறப்பட்டாலும், அது உண்மையாகவும், உணர்வு பூர்வமாகவும் இங்கு உணரப்படவேயில்லை என்பதுதான் வேதனைமிக்க யதார்த்தமாகும்.

வானேந்திய சிங்கக்கொடியை, பௌத்த - சிங்களப் பேரினவாதத்தின் மேலாதிக்கச் சின்னமாக முன்நிறுத்தி, பௌத்த சீலத்தையும், சமயத்தையும் பரப்புவதாகக் கொள்ளும் பேதமை இத்தீவில் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்றது.

திட்டமிட்ட குடியேற்றங்கள் மூலமும், புத்தரின் சிலைகளை ஆங்காங்கே நிலைநிறுத்துவதன் மூலமும் பௌத்தத்தைப் பரப்புவதாகக் கொள்ளும் ஒவ்வாதபோக்கு இங்குதான் அரங்கேறுகின்றது.

பௌத்த மதத்துக்கு முதன்மைத்தானம் வழங்கப்படும் விதத்தில் தனது அரசியல் சாசனத்தில் தனியாக - இரண்டாவது அத்தியாயத்தில் - 'பௌத்த சாசனத்தைப் பாதுகாத்தலும் பேணி வளர்த்தலும் அரசின் கடமையாக இருக்கவேண்டும்' - என்று உறுதிப்படுத்தியிருக்கும் இத் தேசத்தில்தான், அந்த பௌத்த சாசனத்தைப் பேணும் பெயரால் - பௌத்தத்தின் உயரிய நெறிக்கு விரோதமான - கொடூர யுத்தமும், கொலை வெறியும் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்றன.

பௌத்த மதத்தின் அடிப்படைக் கோட்பாடுகளையும், வாழ்நிலைப் பண்புகளையும், மேன்மைச் சிறப்புமிக்க விழுமியங்களையும், மாண்புமிக்க மகத்துவ வழிகாட்டல்களையும் மறந்து, துறந்து, ஒதுக்கிவிட்டு, அவற்றுக்கு மாறாக பௌத்த - சிங்கள தேசிய வாதத்தைப் பலாத்கார வழியிலும், கட்டாயப்படுத்தல் மூலமும், பௌத்தம் வெறுத்து ஒதுக்கும் ஆயுத கலாசார வெறிப் போக்கு மற்றும் கொடூர யுத்தம், கொலைவெறி ஆக்கிரமிப்பு ஆகியவை மூலமும் முன்னெடுக்க முயல்கிறது தென்னிலங்கை.

காருண்ய சீலர் புத்தபகவான் இன்று இங்கு இருப்பாரானால் வன்னியில் பௌத்த சீல ஆட்சியின் பெயரால் இன்று அரங்கேறும் மனிதநேயமற்ற - சமரசம் துறந்த - குரோதத் தனமான - அடக்குமுறை அவலங்களைக் கண்டு மனம் கொதித்துப் போவார். தாம் போதித்த உயரிய நெறி, மக்கள் அழிவுக்கான வழிகாட்டலாகப் பயன்படுத்தப்படுகின்றது என்பது கண்டு விசனப்பட்டுப் போவார். இத்தகைய இழிசெயலைப் பின்பற்றும் மக்கள் கூட்டத்துக்குத் தமது அவதரிப்பையும், ஞானம் பெற்ற சிறப்பையும், பரிநிர்வாணம் அடைந்த பக்குவத்தையும் போற்றி மகிழும் தினத்தைக் கொண்டாடுவதற்கு என்ன அருகதை உண்டு என்று எண்ணி எண்ணி மனம் வெதும்புவார் அவர் என்பது உண்மை.

# மருந்துப் பொருள் தட்டுப்பாடு காரணமாக யுத்த வலயத்தில் உயிரிழப்புகள் அதிகரிக்கக் கூடும்

## ஐ.நா.பாதுகாப்புச் சபையின் அமெ.பிரதிநிதி எச்சரிக்கை

நியூயோர்க், மே 8

யுத்த வலயத்தில் மருந்துப் பொருள்களுக்கான தட்டுப்பாட்டின் காரணமாக பொதுமக்களின் உயிரிழப்புக்கள் உயர்வடையக் கூடும் என ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச்சபை அமெரிக்கப் பிரதிநிதி சூசன் ரைஸ் தெரிவித்துள்ளார்.



சர்வதேச மனித உரிமை சட்டங்களை மீறிச் செயற்படுவதாக இரண்டு தரப்பினர் மீதும் குற்றம் சுமத்தப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட உறுதிமொழியை மீறி வன்னியில் ஆட்லறித் தாக்குதல்கள் இடம்பெற்று வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான குழுவினர் யுத்த வலயத்திற்குச் செல்ல அனுமதிக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையை இலங்கை அரசாங்கம் நிராகரித்துள்ளமை பெரும் கவலையளிப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் மனிதாபிமான நிலைமை குறித்து ஐக்கிய நாடுகள் அமைப்பு கூர்ந்து கவனித்து வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை இராணுவம் ஆட்லறி தாக்குதல்களை நடத்துவதாகவும் விடுதலைப் புலிகள் பொதுமக்களை மனிதக் கேடயமாகப் பயன்படுத்தி வருவதாகவும் நம்பகரமான தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளதென அவர் தெரிவித்துள்ளார்.

யுத்தத்தில் ஈடுபட்டுள்ள சகல தரப்பினரும் பொதுமக்கள் பாதுகாப்பை கருத்திற் கொண்டு செயற்பட வேண்டியது மிகவும் இன்றியமையாததென சூசன் ரைஸ் சுட்டிக்காட்டியுள்ளார். (50)

# 268 வைத்தியர்களும் 500 தாதியர்களும் வடக்கு வைத்தியசாலைகளுக்கு அனுப்பப்பட்டனர்

கொழும்பு, மே.8

மோதல்கள் காரணமாக வடக்கில் இடம்பெயர்ந்துள்ள மக்களுக்குத் தேவையான சிசிக்சைகளை வழங்குவதற்காக 268 வைத்தியர்களும் 500 தாதியரும் வடக்குப் பிரதேசங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டீ சில்வா நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவர் இங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்:-

உள்நாட்டில் பற்றாக்குறையாக உள்ள துறைகளுக்கு வெளிநாடுகளிலிருந்து வைத்தியர்கள் அழைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் இலங்கை வைத்தியர்கள் சபையில் தற்காலிகப் பதிவை மேற்கொண்டுள்ளார்களா என்பதைக் கண்டறிய அரசாங்கம் கவனம் செலுத்துகின்றது.

அத்துடன் சுகாதார சே[illegible]களுக்காக வடக்குக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள உபகரணங்கள் உரிய இடங்களுக்குச் சென்ற[illegible]ந்துள்ளனவா என்பதையும் அரசு உன்னிப்பாக அவதானித்து வருகின்றது.

அறுவைச் சிகிச்சைக்காக அரசாங்க ஆஸ்பத்திரிகளில் நிலவும் நெருக்கடியை நீக்கும் வகையில் சுகாதார அமைச்சின் செலவில் 30 நோயாளிகள் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர ஆஸ்பத்திரிகளுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

கொழும்பு சிறுவர் ஆஸ்பத்திரியில் 600 மில்லியன் ரூபா செலவில் அறுவைச் சிகிச்சை நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (50)

# போர்நிறுத்தம் செய்துகொள்வது தொடர்பாக ரவிசங்கர் குருஜியுடன் பேசப்போவதில்லை

## இலங்கை அரசு திட்டவட்டமாக அறிவிப்பு

கொழும்பு, மே.8

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் போர் நிறுத்தம் ஒன்றைச் செய்துகொள்வது தொடர்பாக இந்தியாவைச் சேர்ந்த வாழும் கலை நிறுவனத்தின் தலைவர் ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் குருஜியுடன் எந்தவிதமான பேச்சுக்களையும் தாம் மேற்கொள்ளப்போவதில்லை என இலங்கை அரசாங்கம் திட்டவட்டமாக அறிவித்திருக்கின்றது.

விடுதலைப்புலிகள் அமைப்புடன் எந்தவித பேச்சுக்களையும் நடத்துவதில்லை என்ற அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் எந்தவிதமான சமரசத்துக்கும் இடமில்லை எனத் திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கும் அரசாங்க வட்டாரங்கள், இந்த விடயத்தில் மக்கள் மத்தியில் தவறான கருத்துக்களை உருவாக்குவதற்கு வாழும் கலை நிறுவனம் முற்படக்கூடாது எனவும் எச்சரித்திருக்கின்றது.

கடந்த மாதத்தில் கொழும்பு வந்த ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் குருஜி அரச தலைவர் மகிந்த ராஜபக்ஷவுடன் பேச்சுக்களை நடத்தியதாகத் தெரிவித்திருக்கும் இந்த வட்டாரங்கள் இருந்த போதிலும் போர்நிறுத்தம் ஒன்றுக்குத் தான் தயாராகவில்லை என்ற செய்தியை இந்தச் சந்திப்பின் போது அரச தலைவர் திட்டவட்டமாகத் தெரிவித்ததாகவும் குறிப்பிடு கின்றன.

இந்த வாரத் தொடக்கத்தில் ரவிசங்கர் குருஜியுடன் தொலைபேசி மூலமாகத் தொடர்புகொண்ட விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் இலங்கை அரச படைகளுடன் போர்நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்துவதற்கான அனுசரணையை வழங்குமாறு அழைப்பு விடுத்திருந்தமை கவனிக்கத்தக்கது.

இதனைத் தொடர்ந்தே இந்த விடயம் தொடர்பாக ரவிசங்கர் குருஜி இலங்கை அரசுடன் தொடர்பு கொண்டு போர்நிறுத்தம் தொடர்பான பேச்சுக்களை நடத்துவார் என வாழும் கலை நிறுவன வட்டாரங்கள் தெரிவித்திருந்தன.

இந்நிலையிலேயே போர் நிறுத்தம் தொடர்பாக ரவிசங்கருடன் பேச்சுக்களை நடத்தப்போவதில்லை என இலங்கை அரசு இப்போது திட்டவட்டமாக அறிவித்திருக்கின்றது. (50)

# சாவகச்சேரி நகரப் பகுதியில் காலாவதியான பொருள்கள் அழிப்பு

யாழ்ப்பாணம், மே 08

சாவகச்சேரி நகரப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்கள் மீது சுகாதாரப் பிரிவினர் நேற்று திடீர் பரிசோதனைகளை நடத்தினர்.

வர்த்தக நிலையங்களில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த காலாவதியான பெருமளவு பொருள்களைக் கைப்பற்றி வர்த்தகர்கள் முன்னிலையில் அழிக்கப்பட்டன. யாழ்.பிராந்திய உணவு மருந்துகள் பரிசோதகர் த.ம[illegible]தேவன் தலைமையில் பரிசோதனைகள் இடம்பெற்ற போது காலாவதியான பால்மா,நல்லெண்ணெய்,சோடியல்போன்ற பொருள்கள் கைப்பற்றி அழிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (203-207)

# இலங்கையில் யுத்தத்தில் பலியானோர் தொடர்பில் சரியான தகவல்களைப் பெறமுடியாமல் போனது ஏன்?

## ஐ.நா.செயலாளரிடம் ஊடகவியலாளர் கேள்வி

ஜெனிவா, மே 08

இலங்கையில் இடம்பெறுகின்ற யுத்தம் மற்றும் அதில் பலியான மக்களின் எண்ணிக்கை என்பவை தொடர்பில் ஏன் சரியான தகவல்களைப் பெற முடியவில்லை என ஐக்கிய நாடுகள் சபையிடம் கேள்விஎழுப்பப்பட்டுள்ளது.

பலஸ்தீன காஸா பிரதேசத்தில் பலியானோர் குறித்த தகவல்கள் வெளியான போதும் இலங்கையில் மாத்திரம் இவ்வாறான நிலை ஐக்கிய நாடுகள் சபைக்கு ஏற்பட்டுள்ளதென 'இன்னர் சிற்றி பிறஸ்' செய்தியாளர் கடந்த 5ஆம் திகதி ஐக்கிய நாடுகள் சபை யின் செயலர் பான் கீ மூனிடம் கேள்வி எழுப்பினார். எனினும் பான் கீ மூன் அந்தக் கேள்விக்கு நேரடிப் பதில் எதனையும் வழங்கவில்லை.

பான் கீ மூனின் இந்தச் செயற்பாடு ஐக்கிய நாடுகள் சபைக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் உள்ள உறவை வெளிப்படுத்துவதாகத் தமிழ்த் தரப்புகள் சந்தேகிக்கின்றன.

அத்துடன் இந்த நகர்வுக்குப் பின்னால் இந்தியாவின் அழுத்தம் உள்ளதாகவும் அந்தத் தரப்புகள் சந்தேகிக்கின்றன.

இதேவேளை தாம் இலங்கை ஜனாதிபதியுடன் தொலைபேசியில் உரையாடி இடம்பெயர்ந்தவர்களின் நிலை, மக்களை பாதுகாப்பு வலயத்தில் இருந்து மீட்பது மற்றும் அவர்களுக்கான உணவு நிலை என்பவை தொடர்பில் பேசியதாக பான் கீ மூன் குறிப்பிட்டார்.

மனிதாபிமானப் பணியாளர்களைப் பாதுகாப்பு வலயத்திற்குள் அனுமதிக்க வேண்டும் என்ற வலியுறுத்தலை தாம் விடுத்ததாகவும் பான் கீ மூன் குறிப்பிட்டார்.

இந்தநிலையில் ஐக்கிய நாடுகள் சபை விரைவில் இலங்கையின் உண்மை நிலையை அறிந்துவர மற்றும் ஒரு விசேட பிரதிநிதியை அனுப்ப வேண்டும் என 'இன்னர் சிற்றி பிறஸ்' செய்தியாளர் கோரினார். ஏற்கனவே அனுப்பப்பட்ட விஜய் நம்பியார் தமது பயண விவரங்களை வெளியிட மறுத்துவிட்டார்.

அத்துடன் அவர் இந்திய முன்னாள் இராணுவ அதிகாரியான சதீஸ் நம்பியாரின் சகோதரரும் இலங்கை அரசாங்கத்தின் உயர்மட்டத்தினரின் நம்பிக்கையை கொண்டவருமாவார்.

இந்தநிலையில் அவருக்குப் பதிலாக மற்றும் ஒருவரை அனுப்பி நிலைமையை ஆராய வேண்டுமென 'இன்னர் சிற்றி பிறஸ்' செய்தியாளர் கேட்டுக் கொண்டார். (50)

## நாளை

| | |
|---|---|
| சித்திரை 26 | 09.05.2009 |
| | சனிக்கிழமை |
| திதி: | பூரணை |
| | மு.ப. 09.50 வரை |
| நட்சத்திரம்: | விசாகம் |
| | பி.இ. 02.12 வரை |
| சுபநேரம்: | 02.54 - 04.24 |
| ராகுகாலம்: | 08.54 - 10.24 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூரியர் சேவை

கொழும்பு

மற்றும் சகல நாடுகளுக்குமான பொதிகள்

ஆவணங்கள்

- மிகவிரைவாக
- பாதுகாப்பாக
- குறைந்த கட்டணத்தில்
- மறைமுக கட்டணங்கள்

எதுவுமின்றி குறிப்பிட்ட முகவரியில்

ஒப்படைக்கப்படும்

ARRUL GLOBAL EXPRESS
01, பிறவுண் வீதி யாழ்ப்பாணம்
T.P : 021 222 6113

# Arrul Com

Communication & Browsing Centre

வெளிநாடுகளுக்கான இன்ரநெற் அழைப்புக்கள்

கனடா, அமெரிக்கா, சிங்கப்பூர், மலேசியா, இந்தியா மற்றும் ஐரோப்பிய நாடுகள் 5 /=

அரபு நாடுகள் 25 /=

வெளிநாடுகளிலிருந்து உங்களுடன் உரையாடுபவரை நேரில் பார்த்து கதைப்பதற்கு 5 /=

High Speed Internet Browsing

arrulcom@gmail.com

ARRUL GLOBAL EXPRESS
01, பிறவுண் வீதி யாழ்ப்பாணம்
T.P : 021 222 6113


# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மே 8

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டுப் பேரவையால் நடத்தப்பட்டு வரும் ஹொக்கிச் சுற்றுப் போட்டியில் இன்று இடம் பெறும் ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

* காலை - 9 மணி - யாழ்.பல்கலைக்கழக 'ஜி' அணி எதிர் வடமராட்சி ஹொக்கி அணி.
* பி.ப. 3 மணி - ஒல்ட் கோல்ட் எதிர் யங்.கென்றிஸ்.
* பி.ப. 4 மணி - கிறாஸ் கொப் பேர்ஸ் எதிர் உடற்கல்விப் பிரிவு டபிள்யு அணி.

(50-86)

* * *

யாழ்ப்பாணம், மே 8

கே.வி.ஸி.ஸி வெற்றிக்கிண்ணத்துக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் அரை இறுதியாட்டங்கள் இன்று வெள்ளிக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

* காலை 8.30 மணி - சென்றலைட்ஸ் எதிர் சென்ரல்.
* பி.ப. 1 மணி ஜொலிஸ்ரார் எதிர் யாழ். பல்கலைக்கழக அணி.

(50-86)

* * *

வலி.வடக்கு, மே 8

யாழ்.மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவினால் வட மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஆதரவுடன் யாழ். மாவட்ட பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் நாளை சனிக்கிழமை மு.ப. 8.30 மணி முதல் கரவெட்டி இமையாணன் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:-

* கோப்பாய் எதிர் பருத்தித்துறை.
* மருதங்கேணி எதிர் சாவகச்சேரி.
* கரவெட்டி எதிர் ஊர்காவற்துறை.
* சங்கானை எதிர் தெல்லிப்பழை.

(1-86)

# கண்ணீர் அஞ்சலி



தேசியசேமிப்பு வங்கி, யாழ்.கிளையின் முகாமையாளர் வி.அருளானந்தம் அவர்களின் பாசமிகு மாமனாரும் திருமதி துஷ்யந்தி அருளானந்தம் (வங்கி அதிகாரி, தே.சே.வங்கி, சாவகச்சேரி) அவர்களின் அன்புத் தந்தையாருமான

## தேசிங்கம் குணசிங்கம்

(இளைப்பாறிய விமானப்படை உத்தியோகத்தர்)

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ். தேசிய சேமிப்பு வங்கி
உத்தியோகத்தர்கள்.

# மரண அறிவித்தல்

## பொன்னம்பலம் சபாரெத்தினம்

வேலணை மேற்கு, வேலணை- 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் சபாரெத்தினம் (06.05.2009) புதன்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - கண்ணகை தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை- பூரணம் தம்பதியினரின் பாசமிகு மருமகனும், திலகவதியின் அன்புக் கணவரும், கௌசலாதேவி, காலஞ்சென்ற வரதராஜா மற்றும் கமலாதேவி, கலைச்செல்வி, ராமராஜா (ராஜன் -ஜேர்மனி) பத்மராஜா (செல்வன்-பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான பூரணம், அன்னம்மா, கனகரெட்ணம் ஆகியோரின் சகோதரனும், கேதீஸ்வரன், காலஞ்சென்ற இரத்தினசிங்கம், மற்றும் ரஞ்சிதமலர், தர்மராஜா, மேனகா (ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும், வாசுகி, ஜெயசுகி, யோகேந்திரா, பாலேந்திரா, கஜேந்திரா, மயூரி, ரேணுகா, ரமேஷ், ரஞ்சித்குமார், கோபி, சர்மிளா, லோஜிதா, சுதர்ஷனா, அஜந்தன், கலைராஜ், றஜிதா, றுபிதா, தனுஷ், (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேரனும், ராம்சிங், ராகுல், விதுஷா, சுபஸ்திகா, சுபானுகா ஆகியோரின் பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.05.2009) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக நண்பகல் 12 மணியளவில் அம்பலவி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வேலணை மேற்கு, வேலணை - 7.*
T.P. 077 4435050

தகவல்:
குடும்பத்தினர்.

# தென்மராட்சி பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச் சங்கத்தினால் நடத்தப்பட்ட அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு 07.05.2009ன் முடிவுகள்

01. முதலாவது பரிசு - துவிச்சக்கர வண்டி
பரிசு பெறும் இலக்கம் - 11320

02. இரண்டாவது பரிசு - D.V.D பிளேயர் (D.V.D. Player)
பரிசு பெறும் இலக்கம் - 12917

03. மூன்றாவது பரிசு - கையடக்கத் தொலைபேசி
பரிசு பெறும் இலக்கம் - 10891

பத்து ஆறுதல்பரிசுபெறும் இலக்கங்கள்

| | | | |
|---|---|---|---|
| 01. 03785 | 04. 00383 | 07. 05595 | 09. 13482 |
| 02. 02251 | 05. 05828 | 08. 04477 | 10. 05517 |
| 03. 00116 | 06. 00167 | | |

*சீட்டிழுப்புக்கு அனுசரணை வழங்கியோர்*

1. இந்திரன் ஜுவலறி, சாவகச்சேரி.
2. நலன்விரும்பி, மீசாலை.
3. ஸ்ரீஐங்கரன் வெதுப்பகம், சாவகச்சேரி.
4. றோயல் வெதுப்பகம், பெருங்குளம் சந்தி சாவகச்சேரி.
5. ஐங்கரன் வெதுப்பகம், கோப்பாய்.

நலன்புரிச்சங்க நிர்வாகம்.


24 ஆண்டுகால தனித்துவமிக்க பயிற்சி நிலையம்

# கலாலயா

பயிற்சியகம்

பெருமாள் கோயிலுக்கு அண்மையில், யாழ்ப்பாணம்.

மகளிருக்கான துரித குறுகிய கால பயிற்சிகள்

* **3 மாத கால** கேக் ஐசிங் (7 வகை. 25 அமைப்புகளில்), ஐசிங் பூக்கள், உணவு தயாரித்தல், கூந்தல் அலங்காரங்கள் (50 வகை), பப்றிக் வர்ணம் தீட்டுதல், பூவேலை, கைவேலை, Saree Works. *கூந்தல் அலங்கார பயிற்சிக்காலத்தின் நடுப்பகுதியில் Facials,* மணமகள் அலங்காரம், Manicure, Pedicure, முடி அயன் செய்தல், வெட்டுதல், சுருட்டுதல், நிறமூட்டுதல் வகுப்புகள் ஆரம்பமாகும்.
* தையலில் அடிப்படை அறிவு அற்றவர்களுக்கான **6 மாத கால** உடை தயாரித்தல் வகுப்புகள். ➥ மேற்படி பயிற்சிகள் முடிந்தபின்னர் சான்றிதழ்கள் வழங்கப்படும்.
* தையல் தெரிந்தவர்களுக்கான **2** வாரகால சாறி பிளவுஸ், சுரிதார் வகுப்புக்கள்

**புதிய வகுப்புக்கள் ஆரம்பம் : 11-05-2009 காலை 9.00 மணி**

*மேலும் விபரங்களை பி.ப 2.00 மணி வரை நேரில் அறிந்து கொள்ளலாம்.* பதிவாளர்.

# B.Sc. in Computer Science

## New Batch ஆரம்பம்

மேற்படிக் கற்கைநெறிக்கு விண்ணப்பித்தவர்களுக்கான
Weekend Batch 09-05-2009 9:00AM
Weekday Batch 11-05-2009 9:00AM
ஆரம்பம்

கற்கைநெறியின் முடிவில் சர்வதேச தரமுடையதும் (UK) இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினது அங்கீகாரமுடையதுமான சான்றிதழ் வழங்கப்படும்.

அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு சம்பள அதிகரிப்பிற்கும் பட்டப்பின் படிப்பிற்கும் அங்கீகாரமுடையது.

பட்டப்படிப்பின் பின்பு உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் M.Sc. போன்ற உயர் கல்வி கற்கும் வாய்ப்புடையது.

M.Sc. போன்ற உயர் கல்வி கற்கும் வாய்ப்புக்காக வெளிநாடு செல்ல விரும்புபவர்களுக்காக VISA ஒழுங்குகள் செய்து தரப்படும்

# B.Sc. in Multimedia First Year

எமது நிறுவனத்தில் முதலாம் வருடத்தைப் பூர்த்தி செய்த பின், 2ம், 3ம் வருடத்தை பின்வரும் நாடு ஒன்றில் பூர்த்தி செய்ய முடியும்.

<<<<UK, Canada, Netherlands, Malta, Malaysia, New Zealand>>>>

Nottingham College of London ஊடாக வெளிநாடு செல்வதற்கான Visa + Part Time Job செய்துதரப்படும்

# NORTH LANKA IIT

Main Street, Chankanai.
Tel:-+94(0)602214305
e_mail: northlankaiit@yahoo.com
Web: www.nliit.com

#113, Laxan Plaza, Navalar Rd., Jaffna.
Tel:-+94(0)602[illegible]
e_mail: rector@northlankaiit.com
Web: www.northlankaiit.com

# Tertiary Education in Indian Colleges

SEWATEP of Sewa Lanka Foundation invites applications for admissions to different Indian Colleges affiliated to Universities in city of Bangalore and Bharathiyar University (Tamilnadu) for Bachelor degree in Computer Science, Computer Application, Information Technolygy, Electronics and Communication, Mathematics, Physics, Chemistry, Bio Chemistry, Bio- Technology, Micro Biology, Fashion & Apparel Design, Catering& Hotel Management., Nursing, Pharmacy, Physiotherapy, Business Management, Commerce, Journalism, Psychology, English, Tamil, Education

Admissions for Engineering, Medicine (India or Nepal), Dental and Master Degrees are also available. O/L qualified students (with Science & Mathematics) can become engineers within a period of six years after completing 3 year Diploma courses. Even A/L Arts students could earn a degree in nursing after completing diploma in General Nursing & Midwifery.

Applicants could select the colleges based on their income level, affordability and their educational qualification. For further details & Application forms contact the under mentioned address/ District office SLF. The closing date is on 20th of May 2009

Director/ Consultant,
Sewa Lanka Tertiary Education Programme
Sisila Mawatha, (Opposite to
[illegible] Temple)
216/1 [illegible] Road, Maharagama

Tel: 0602166334, 0602166335 &
0777739261, Fax: 0112850622

Email: anavaloga22@gmail.com
gandhigram@sewalanka.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு கடன் வழங்கு முன்
# ஊடகத்துறையை மதிக்கும்படி அரசை வலியுறுத்தவேண்டும்
## நாணய நிதியத்திற்கு எல்லையற்ற பத்திரிகையாளர் கோரிக்கை

கொழும்பு,மே8

இலங்கை அரசு ஊடகச் சுதந்திரத்தை மதிக்கவேண்டுமென சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு கடன் வழங்குவதற்கு முன்னர் நிர்ப்பந்திக்கவேண்டும் என பாரிஸில் தலைமையகத்தைக் கொண்டு இயங்கும் எல்லைகளற்ற பத்திரிகையாளர்கள் நிறுவனம் கோரிக்கை விடுத்துள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிராக அரசு பெற்றுவரும் வெற்றியானது ஊடகங்களுக்கு எதிரான செயற்பாட்டையும் அதிகரித்துள்ளது என்று அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

இலங்கை அரசு தனது பொருளாதாரத்தை உறுதிப்படுத்துவதற்காக சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து 9 பில்லியன் அமெரிக்க டொலரைக் கடனாகப் பெற்றுக் கொள்ள பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருகின்றது.

இந்தக் கடனை வழங்குவதற்கு முன் அந்நாட்டிடமிருந்து ஊடக சுந்திரத்தையும் சட்டரீதியான ஆட்சிமுறையையும் மதித்து நடக்கும்படியான உறுதிப்பாட்டை பெற்றுக்கொள்ளவேண்டுமென்று எல்லைகளற்ற பத்திரிகையாளர் நிறுவனத்தின் செயலாளர் நாயகம் ஜீன் - பிராங்கொய்ஸ் ஜூலியர் சர்வதேச நாணய நிதியத்திற்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் தலைவர் டொமினிக்கு ஸ்ட்ராஸ் கானுக்கு எழுதப்பட்டுள்ள அக்கடிதத்தில் கால் நூற்றாண்டுக்கு மேலாக நடைபெற்றுவரும் போரில் இலங்கை இராணுவம் போராளிகளை அழித்தொழிக்கும் நிலைக்கு வந்துள்ள நிலையில் போர் நடைபெறும் பகுதிகளுக்கு ஊடகவியலாளர்கள் இன்னமும் அனுமதிக்கப்படாமல் இருந்து வருகின்றனர். மோதல் தொடர்பான உண்மை நிலவரங்களை சுதந்திர ஊடகவியலாளர்கள் உறுதிசெய்து கொள்ளமுடியாமல் இருக்கின்றது எனக் குறிப்பிட்டுள்ளார்.

மோதலில் சம்பந்தப்படாதவர்கள் அப்பகுதிக்குச் செல்வது மிக அபாயகரமாகும் என அரசு கூறுகிறது.

சர்வதேச மன்னிப்புச் சபையின் அறிக்கையொன்றின்படி 14 பத்திரிகையாளர்களும் ஊடகத்துறையில் பணிபுரிபவரும் 2006 ஆம் ஆண்டிலிருந்து அரச துணைப்படைகளினாலும் போராளிகளினாலும் கொல்லப்பட்டுள்ளார்கள் என்று சந்தேகிக்கப்படுகின்றது. வேறும் பலர் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்கள். சிலர் கொலை மிரட்டல் காரணமாக நாட்டை விட்டு ஓடிவிட்டார்கள். (ப)

# வலி.கிழக்கில் புகையிலைக்கு மவுசு

யாழ்ப்பாணம்,மே8

வலி.கிழக்குப் பிரதேசத்தில் அறுவடை செய்யப்படும் புகையிலைக்கு பெரும் மவுசு ஏற்பட்டுள்ளது.

நல்ல நிலையிலுள்ள புகையிலைக் கன்று ஒன்று 80 ரூபா தொடக்கம் 90 ரூபா வரை வியாபாரிகளால் கொள்வனவு செய்யப்பட்டு வருகின்றது.

இந்த முறை புகையிலைக் கன்றுகளில் ஏற்பட்ட நோய்த் தாக்கத்தினால் புகையிலை செய்கையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். எனினும் சில இடங்களில் புகையிலைக் கன்றுகள் நல்ல நிலையில் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (203-224)

# சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் நோயாளரின் எண்ணிக்கை அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,மே8

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை விடுதிகளில் என்றுமில்லாதவாறு நோயாளர் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால் பெரும் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளது.

மொத்தம் 50 கட்டில்களைக் கொண்டு ஆண்கள், பெண்கள், சிறுவர் ஆகிய விடுதிகளில் 400இற்கும் மேற்பட்டோர் தங்கி சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதனால் விடுதிகள், தரைகள், விறாந்தைகள், வாகன பாதுகாப்பு நிலையம் ஆகியவை நோயாளர்களால் நிறைந்து மரநிழல்களிலும் இரவுவேளையில் நோயாளர் படுத்துறங்குகின்றனர்.

பிரதேசத்தில் உள்ள எட்டு நலன்புரி நிலையங்களிலிருந்தும் நூற்றுக்கணக்கானோர் இவ்வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்படுவதால் பெரும் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளது.

நலன்புரி நிலையங்களுக்குச் செல்லும் நடமாடும் மருத்துவ சேவையினரால் மேலதிக சிகிச்சைக்குத் தினமும் ஒரு நிலையத்திலிருந்து குறைந்தது 50 நோயாளர்களும் உதவியாளர்களும் அம்புலன்ஸ் மூலம் அனுப்பப்படுகின்றனர்.

அம்புலன்ஸ் வண்டிகளில் சராசரி 25 இற்கும் மேற்பட்ட நோயாளர்கள் ஏற்றப்பட்டு வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்படுகின்றனர்.

வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வெளியேறுபவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளதால் எட்டு நலன்புரி நிலையங்களுக்கும் தலா இரு தடவைகள் கொண்டு செல்லப்படுகின்றனர்.

அம்புலன்ஸ் வண்டியில் இடம் கிடைக்காதவர்கள் வைத்தியசாலையில் தங்க வேண்டியுள்ளனர்.

இதனால் வைத்தியசாலையில் பெரும் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளதாக நோயாளர்கள் தெரிவித்தனர். (203-207)

# கண்காணிப்புக் குழுக் கூட்டம்

குருநகர்,மே8

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் கீழ் இயங்கி வரும் நிறுவனத் தலைவர்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்குமான மாதாந்த மாவட்டக் கண்காணிப்புக் குழுக்கூட்டம் எதிர்வரும் 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் மாநாட்டு மண்டபத்தில் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறும். (203-51)

# கைதடி முதியோர் இல்லத்தில் மாதாந்த ஒன்றுகூடல்

வண்ணை,மே.8

கைதடி, அரச முதியோர் இல்லத்தில் மாதந்தோறும் 10ஆம் திகதிகளில் முதியோர் ஒன்றுகூடல் நிகழ்வு நடைபெற்று வருகின்றது.

இந்த ஒன்றுகூடல் நிகழ்வில் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறுகின்றன.

இல்லத்தில் தங்கியுள்ள முதியவர்கள் கலந்துகொள்ளும் நிகழ்வுகளும் வெளியார் வழங்கும் நிகழ்வுகளும் மாதாந்தம் உள்ளக கலையரங்கில் இடம்பெற்று வருகின்றன.

இதேவேளை முதியோர் இல்லத்திற்கு இரண்டு தொலைக்காட்சிப் பெட்டிகளும் வழங்கப்பட்டிருக்கின்றன. ஆண்கள் மற்றும் பெண்கள் பிரிவுகளில் தலா ஒவ்வொரு தொலைக்காட்சிப் பெட்டி சேவையில் இருந்து வருகின்றது. (203-160)

# சமய சந்நிதிகளில்

நவாலி,மே8

வடலியடைப்பு, கலைவாணி வீதியில் அமைந்துள்ள மகாகாளி அம்மன் ஆலயச் சங்காபிஷேக நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 8மணிதொடக்கம் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. (204-100)

★ ★ ★

யாழ்ப்பாணம்,மே8

கோப்பாய் வெள்ளெருவைப் பிள்ளையார் ஆலய மணவாளக் கோல நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. (204)

★ ★ ★

பண்டத்தரிப்பு புனித பத்திமா அன்னையின் திருத்தலத் திருவிழா கடந்த 4ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

எதிர்வரும் 13ஆம் திகதி புதன்கிழமை காலை 5.45 மணிக்கு முதல் திருப்பலி நடைபெறும். காலை 7.30 மணிக்கு ஆயர் தலைமையில் திருநாள் திருப்பலியும் நண்பகல் 12 மணிக்கு நோயாளர்களுக்கான திருப்பலியும், பிற்பகல் 4 மணிக்கு மாலைத் திருப்பலியும் நடைபெறும். (204-112)

★ ★ ★

நவாலி,மே8

ஆனைக்கோட்டை கரைப்பிரான் ஆதி விநாயகர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.15 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 21ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் வெள்ளிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (204-100)

# முதலுதவிப் பயிற்சி

வடமராட்சி,மே8

வடமராட்சிக் கல்வி வலய ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் உலக சு[illegible] தார ஸ்தாபனமும் சர்வதேச ம[illegible] குழுவும் இணைந்து முதலுதவிப் பயிற்சியினை நடத்தவுள்ளன.

பாடசாலை ரீதியாக வழிகாட்டலும் ஆலோசனைக்குரிய ஆசிரியர், உடற்கல்வி ஆசிரியர் உட்பட மூவர் தெரிவுசெய்யப்பட்டு பயிற்சி வழங்கப்படவுள்ளது.

மாணவர்களில் தரம் 9 தொடக்கம் தரம் 12 வரையுள்ளவர்களில் 5 மாணவர்கள் இருபாலாரிலிருந்தும் தெரிவுசெய்யப்பட்டு பயிற்சி வழங்கப்படவுள்ளது. (203-236)

# சண்டிலிப்பாய் பிரதேசத்தில் 54 பேருக்கு பதிவுச் சான்றிதழ்கள்

நவாலி,மே8

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற பிறப்பு, இறப்புச் சம்பந்தமான நடமாடும் சேவையில் 54 பேருக்குப் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளதாகப் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் மா.முரளி தெரிவித்துள்ளார். (203-100)

# கைதடி முதியோர் இல்லத்தில் இலையான்கள் அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,மே8

கைதடி முதியோர் இல்லத்தில் இலையான்களின் தொல்லை என்றுமில்லாதவாறு அதிகரித்துக் காணப்படுவதாக இல்ல அத்தியட்சகர் என்.இராஜலிங்கம் தெரிவித்தார்.

இலையான்களின் தொல்லையால் இல்லத்தில் தங்கியிருக்கும் வயோதிபர்கள் சிரமப்பட்டு வருகின்றனர்.

அதிகரித்துக் காணப்படும் இந்த இலையான்களைக் கட்டுப்படுத்துவதற்கு அதற்கான கிருமிநாசினிகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் கூறினார். (203-224)

# தொழிற்பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம்

மானிப்பாய்,மே8

இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனம் (மொரட்டுவ) தேசிய தொழில் பயிலுநர் திட்டத்தின் கீழ் முழுநேர பயிற்சி வழங்கவுள்ளது.

2009ஆம் ஆண்டின் அனுமதிக்காக இருபாலாரிடமிருந்தும் பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

விண்ணப்பதாரர் 16-22 வயதிற்கு இடைப்பட்டவராக இருப்பதுடன் ஜி.சீ.ஈ. சாதாரண பரீட்சையில் தமிழ், கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்வேண்டும்.

அனுமதிப் பரீட்சையில் கூடுதல் புள்ளி பெறுபவர்கள் நேர்முகப் பரீட்சை மூலம் தேர்ந்தெடுக்கப்படுவர்.

மோட்டார் இயந்திரவியல், மில்றைற், வார்ப்பியல், வாயு சீராக்கல், குளிரூட்டல், வலு மின்சாரவியல், ஆயுத இயந்திரவியல், வாகன மின்சாரவியல், டீசல் இயந்திரவியல், வெல்டிங், வாகன உடல் திருத்தம், வர்ணம் தீட்டுதல் ஆகியவற்றில் பயற்சி வழங்கப்படும்.

விண்ணப்பதாரர் 02.06.2009ஆம் திகதிக்கு முன்னர் முகாமையாளர், மனித வளமும் நிர்வாகமும், இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனம், 582, காலி வீதி, கல்கிசை எனும் முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (203-95)



யாழ்.போதனா வைத்தியசாலையில் நீரிழிவுச் சிகிச்சை நிலையம் திறந்துவைக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி எஸ்.தேவநேசன் மங்கள விளக்கேற்றுவதை முதலாவது படத்திலும் நீரிழிவு சிகிச்சை நிலையத்தை யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் நாடா வெட்டித் திறந்துவைப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

வைத்திய கலாநிதி எஸ்.சிவன்சுதன், வைத்திய கலாநிதி எஸ்.பேரானந்தம், யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட சிரேஷ்ட பேராசிரியர் செல்வி வசந்தி அரசரத்தினம் ஆகியோர் உரையாற்றுவதை மூன்றாவது, நான்காவது, ஐந்தாவது படங்களில் காணலாம்.

(படங்கள்: லக்ஸ்மன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வைரவிழா

நல்லூர் தெற்கு, சனசமூக நிலையத்தின் 60 ஆவது ஆண்டு வைரவிழா இன்று வெள்ளிக்கிழமை நிலைய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கா.இரகுநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், பேராசான் அ.உபயசேகரம் பிரதம விருந்தினராகவும், யாழ். மாநகரசபை உத்தியோகத்தர் எஸ்.லோகசிவம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

(204)

# நுளம்பு பரவும் வகையில் சூழலை வைத்திருப்போர் மீது நடவடிக்கை

கொழும்பு, மே 8

நுளம்புகள் பரவுவதற்கு ஏதுவாக சுற்றுச்சூழலை அசுத்தமாக வைத்திருப்போருக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா நேற்று முன்தினம் நாடாளுமன்றில் கூறினார்.

சுகாதார அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு ஏற்ப குற்றவாளிகளாகக் காணப்படுபவர்கள் தண்டப்பணம் செலுத்த நேரிடும். அவர்கள் சிறைத்தண்டனைக்கும் உட்படுத்தப்படுவர் என்றும் அமைச்சர் கூறினார். நுளம்புகள் பரவுவதைத் தடுக்கும் சட்டத்தின் ஒழுங்கு விதிகளை அங்கீகரிக்கும் பிரேரணையைச் சபையில் சமர்ப்பித்து உரையாற்றியபோதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

தற்போதைய காலநிலை மாற்றமே உலகில் நுளம்புகள் பெருகிக் காணப்படுவதற்குக் காரணம். உஷ்ண அதிகரிப்புத்தான் இந்தப் பெருக்கத்திற்குக் காரணம். தற்போது நுவரெலியாவில் கூட உஷ்ணம் அதிகரித்து நுளம்புகள் பெருகியுள்ளன. தற்போது மலேரியா பாதிப்பும் சிறிது அதிகரித்து காணப்படுகின்றது. 2008 இல் 670 பேர் மலேரியாவால் பாதிக்கப்பட்டிருந்தனர். அவர்களில் 500 பேர் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் யுத்த நடவடிக்கைகளில் ஈடுபட்ட இராணுவத்தினர் ஆவர்.

டெங்கு, சிக்குன்குனியா போன்ற நோய்களும் இப்போது பரவியுள்ளன. இந்த நோய்களைப் பரப்பும் நுளம்புகள் அசுத்தமான நீரில்தான் உருவாகின்றன. இந்த நுளம்புகள் பரவுவதைத் தடுக்க ஒவ்வொருவரும் தமது வீடு, சுற்றுப்புறம் ஆகியவற்றை சுத்தமாக வைத்திருக்க வேண்டும். அவ்வாறு செய்யத் தவறுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். (சி)


## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம் 27 . 06 . 2003

மறைவு 19 . 04 . 2008



### செல்வி விஜயகுமார் இந்துஜா

எம் அன்பு மலர் இந்துஜாவே!
உந்தன் நறுடல் மறைந்து அகவை ஒன்றாயிற்றோ?
தினம் தினம் ஒலிக்கும் உந்தன் புன்னகையும்
காற்றலையில் தேன்குரலும் உந்தன் பாடலும்
நெஞ்சத்து உறவுகளை கொஞ்சி இழுக்கும்
உந்தன் ஒப்பற்ற குறும்பும்
அவனியே வியக்கும் உந்தன் கல்வித் திறனும்
இன்று எங்கு போனதோ தெரியவில்லை!
நீ இன்று எம்மை விட்டுப் பிரிந்து
ஓராண்டு உருண்டோடியிருக்கலாம்- ஆனால்
எம் நெஞ்சத்து உறவில்
நீ பல கோடி ஆண்டுகள் என்றும் அழியாது இருப்பாய்!

மயிலியதனை,
தொண்டைமானாறு. (84778)

சற்குணராசா (பெரியப்பா), சுபத்திரா (பெரியம்மா),
அருண், அருணா, அஜி, அசோக் (சகோதரர்கள்), அம்மம்மா, அம்மப்பா.



## மாபெரும் மாட்டு வண்டி சவாரிப் போட்டி

இடம்: நீர்வேலி சவாரித் திடல்
காலம்: 10.05.2009 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: பிற்பகல் 1 மணி
பிரவேசம்: இலவசம்
நடத்துநர்: புத்தூர் கிழக்கு
செ.தெய்வேந்திரமும் சவாரி ரசிகர்களும்.

(85097)



இழந்த சக்தியை மீண்டும் பெற்றிட பாவியுங்கள்
ரோயல் குளுக்கோஸ்
100% சுத்தமானது
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும்போது குளுக்கோஸ் என்று கேட்காமல்
ரோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்.
PACKED BY: ROYAL Industries Colombo 12 T.P. 0777277670
அனைத்துப் பார்மஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.




ஏக விநியோகஸ்தர்கள்:
ஸ்ரீ வா நறுமணப் பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.



## ஏழாம் ஆண்டு நினைவுகளில்....

அன்னை மடியில் 24 . 10 . 1950

அரக்கர் அழிப்பில் 26 . 05 . 2002



### அமரர் வைரவி சுபாஸ்

திதி: சித்திரா பௌர்ணமி

ஆலயம் சென்ற உம்மை
அரக்கர்கள் கொன்ற கொடுமை
ஆண்டுகள் ஏழு ஆனாலும்
ஆறாதையா அந்தத் துயரம்
இறைவன் இன்றுமுள்ளான்- அந்த
நீதியை நிலை நிறுத்துவான்- எங்கள்
தேவனே என்றும் நீர் நிம்மதியாய்ச் சாந்தி கொள்...!

மனநெகிழ்வுடன்:
குடும்பத்தினர்.

அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி. (85056)



## 90ஆம் நாள் நினைவஞ்சலி

முகிழ்ப்பு 14 . 03 . 1914

அழிப்பு 08 . 02 . 2009



### திருமதி குணரத்தினக் குருக்கள் இராசம்மா

கட்டுவனைப் பிறப்பிடமாகவும் இருபாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குணரத்தினக் குருக்கள் இராசம்மாவின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

'பஞ்சரத்தின பவனம்',
குருக்கள் வளவு, இருபாலை. (85068)

குடும்பத்தினர்.



Affordable and Internationally Recognised

JAFFNA

MBA

Master of Business Administration

Specialize in
Marketing
Human Resources
Information Systems
Finance

Sikkim
Manipal University

An integrative program designed to provide an advanced course in management for those seeking senior positions in industry, commerce and public services. The core subjects of the Manipal MBA are aimed at developing knowledge and skills in fundamental management disciplines, improving the decision making abilities of participants and producing managers of the highest quality.

The most accepted foreign MBA programme in Srilanka with over 500 students enrolled



Admissions now on
May 2009 intake

மேலதிக விபரங்களுக்கு நிரஜ் 077 9863666

FIRST BATCH SUCCESSFULLY COMPLETED IN JAFFNA

Manipal
INSPIRED BY LIFE

Manipal International Study Centre
IIS CITY CAMPUS
#200, Sivan Pannai Road, Jaffna.
T.P: 021 222 8060
Web: www.iiscitycampus.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# தரம் - 05 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான தயார்படுத்தல் பரீட்சைத் தொடர் - 2009

வினாத்தாள் - I நேரம்: 45 நிமிடங்கள்

* 01, 02 ஆகிய வினாக்கள் ஒவ்வொன்றிலும் உள்ள இரண்டு உருக்களிடையே மிக நெருங்கிய தொடர்பு உண்டு. அவ்விரண்டு உருக்களையும் குறிக்கும் எழுத்துக்களைக்கொண்ட கூட்டத்தைத் தெரிவுசெய்க.


01.





1) A யும், C யும். 2) D யும், F யும்.
3) A யும், E யும்.

02.





1) A யும், D யும். 2) B யும், D யும்.
3) A யும், F யும்.


* 03, 04 ஆகிய வினாக்களில் தரப்பட்டுள்ள உருக்களில் யாதாயினும் ஓர் உரு ஏனைய உருக்களில் இருந்து வேறுபட்டது. அவ் உருவின் கீழ்க் கோடிடுக.

03.



1) 2) 3) 4)

04.



1) 2) 3) 4)

* பின்வரும் பாடலை வாசித்து 05,06 ஆகிய வினாக்களுக்கான சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

கடமையை உணர்ந்து செயற்பட ஆசை!
கடின உழைப்பால் வென்றிட ஆசை!
மடைமையைக் கொளுத்த மனதினில் ஆசை!
மனிதனாய் வாழ்ந்து புகழ்பெற ஆசை!

05. எவற்றால் நாம் வெற்றியைப் பெறலாம்?
1) கடமையால். 2) மடைமையால். 3) கடின உழைப்பால்.

06. மனிதனாய் வாழ்ந்தால் எவற்றைப் பெறலாம்?
1) புகழ். 2) வெற்றி. 3) மடைமையைக் கொளுத்தலாம்.

07. உருவை நன்கு விவரிக்கும் விடையைத் தெரிவுசெய்க.




1) மின்சாரம் - சைக்கிள் - வெளிச்சம்.
2) மின்சாரம் - கார் - வெளிச்சம்.
3) மின்சாரம் - சைக்கிள் - ஒளி.

08. கீழே சம்பவங்கள் சில தரப்பட்டுள்ளன.
A - உணவு அருந்துதல். B - பல் துலக்குதல்.
C - நித்திரைவிட்டு எழுதல். D - பாடசாலைக்குச் செல்லுதல்.
E - நீராடல்.

மேலே தரப்பட்டுள்ள சம்பவங்களின் சரியான ஒழுங்குவரிசை யாது?


1) CBEDA 2) CBEAD 3) CBAED

09. தரப்பட்டுள்ள உருவை அவதானித்து வெற்றிடத்திற்குப் பொருத்தமான உருவைத் தெரிவுசெய்க.



1) 2) 3)


10. சதுர வடிவக் கடதாசியை சமச்சீராக இரண்டு தடவை மடித்து படத்தில் காட்டியவாறு கோட்டின் ஊடாக வெட்டினால் பெறப்படும் சரியான உருவின் கீழ்க் கோடிடுக.



1) 2) 3)


* பின்வரும் உருக்களில் தரப்பட்டுள்ள இலக்கங்கள் அமைந்துள்ள கோலத்தை அவதானித்து இடை வெளியில் வரவேண்டிய பொருத்தமான எண்ணின் கீழ்க் கோடிடுக.

11.





1) 11 2) 13 3) 15

12





1) 32 2) 24 3) 27

13. இவ்வுருவை ஆக்குவதற்குப் பயன்படுத்தப்பட்ட சிறிய சதுரமுகிகள் எத்தனை?



1) 23
2) 24
3) 27


* பின்வரும் தரவுகளை அவதானித்து 14,15 ஆகிய வினாக்களுக்கு விடை தருக.




14.  இன் பெறுமதி யாது?
1) ரூபா 15
2) ரூபா 12
3) ரூபா 10

15.  இன் பெறுமதி யாது?
1) ரூபா 10
2) ரூபா 12
3) ரூபா 15

* கீழே தரப்பட்டுள்ளது கனவுரு ஒன்றைச் செய்வதற்காக வெட்டப்பட்ட கடதாசி அட்டை ஆகும். அதனை அடிப்படையாகக்கொண்டு 16, 17 ஆகிய வினாக்களுக்கு விடை தருக.




கனவுருவை உருவாக்கிய பின்,

16. C என்ற எழுத்திற்கு எதிர்ப்பக்கத்தில் உள்ள எழுத்து யாது?
1) A 2) E 3) F


17. E என்ற எழுத்திற்கு எதிர்ப்பக்கத்தில் உள்ள எழுத்து யாது?
1) A 2) F 3) D

18. ஆலயத் திருவிழா ஒன்றிற்காக வீதியில் சிவப்பு, பச்சை, மஞ்சள், நீலம் என்ற ஒழுங்கில் நான்கு வர்ண மின் குமிழ்கள் மாறிமாறிப் பொருத்தப்பட்டன. ஆரம்பத்தில் சிவப்பு மின்குமிழ் பொருத்தப்பட்டது. எனில், 23 ஆவதாகப் பொருத்தப்பட்ட மின் குமிழின் நிறம் யாது?
1) பச்சை. 2) மஞ்சள். 3) நீலம்.

19. மகனின் வயதைப்போல நான்கு மடங்கு தாயின் வயதாகும். மகனினதும், தாயினதும் வயதுகளின் கூட்டுத்தொகை 55 ஆகும். தாயினது வயது எத்தனை?
1) 34 2) 44 3) 54

20. கமலுக்கு கமலி, அமலி என இரண்டு பேத்திகள் உள்ளனர். கமலியின் அப்பா அமல் ஆவார். அமலின் சகோதரன் விமல் ஆவான். விமலுக்கு கமல் என்ன உறவு?
1) சித்தப்பா. 2) மாமா. 3) அப்பா.

21. கீழே தரப்பட்டுள்ள குறியீடு ஏதோ ஒரு சொல்லைக் குறித்துநிற்கின்றது. அச் சொல் யாது?




1) கம்பஹா. 2) விகடகவி. 3) கதிரகம.

22. மாகாணம், மாவட்டம், வலயம் ஆகியவற்றைப் படம் குறித்துக்காட்டுகின்றது. இதில் மாவட்டம் எவ் எழுத்தினால் குறித்துக் காட்டப்பட்டுள்ளது?
1) A
2) B
3) C




23. பின்வரும் மாதிரி உருவை மடித்து அமைக்கத்தக்க கனவுரு எது?




1) 2) 3)

24. ஒருவர் ஒளிப்படம் ஒன்றைப் பார்த்துப் பின்வருமாறு கூறினார். ''எனக்குச் சகோதரர்களோ சகோதரிகளோ இல்லை. எனினும், இவரது தந்தை எனது தந்தையின் மகனாவார்.'' அவ்வாறெனின், ஒளிப்படத்தில் காணப்படுபவருக்கு அவர் என்ன உறவுமுறையில் உள்ளார்.
1) மகன். 2) தந்தை. 3) பேரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய

## தேர்த் திருவிழாச் சிறப்பு மலர் – 08.05.2009



### அருள்மிகு ஸ்ரீமுத்துமாரி அம்மன் கோயில் வரலாறு

பறங்கியர் காலத்துக்கு முன்னும் அவர்களுக்குப் பின்னர் நீராவிக்கப்பல்கள் வரும் வரைக்கும் தென் இந்தியாவுக்கும் வடஇலங்கைக்குமான தொடர்புகள் விஷேடமாக வல்வெட்டித்துறைத் துறைமுகம் ஊடாகவே மேற்கொள்ளப்பட்டு வந்தன. இலங்கைக்கு மிகவும் கிட்டவுள்ள இந்தியப் பாகம் கோடியாக்கரையாகும். கோடியாக்கரைக்கும் வல்வெட்டித்துறைக்குமான ஒழுங்கான தோணிப் போக்குவரத்து இருந்து வந்தமையால் தென் இந்தியத் தபால்கள் கோடியாக்கரையின் தோணியில் ஏற்றப்பட்டு வல்வெட்டித்துறை வந்தடையும். இப்படியாக கோடியாக் கரையில் தபாற்பொதிகள் வள்ளத்தில் ஏற்றப்படும் சமயம் ஒருநாள் ஒரு வயோதிப மாது வள்ளக்காரன் முன் தோன்றி தன்னையும் வள்ளத்தில் ஏற்றிச் சென்று இலங்கை கரையில் விட்டு விடும்படி கேட்டார். வள்ளக்காரன் வயோதிப மாதுவின் கோரிக்கையை ஏற்க மறுக்கவே வயோதிபமாது விடாமுயற்சியுடன் திரும்பத் திரும்ப வற்புறுத்த இலங்கைக் கரையில் எந்த இடம் போக உள்ளதாகவும் பெயர் என்ன என்றும் கேட்டனர். தான் வல்வெட்டித்துறைக்குப் போகவேண்டுமெனவும் தனது பெயர் கயிலைமலை மாதரசி என்றும் சொல்லியதையடுத்து அப்பெண் ஏற்றப்பட்டு வல்வெட்டித்துறை வந்து சேர்ந்தார். கரையில் இறங்கியதும் வயோதிப மாது வள்ளக்காரருக்கு ஆசி கூறிப் பிரிந்து சென்றார்.

இது நடைபெற்ற இரண்டொரு தினங்களில் தற்காலம் முத்துமாரி அம்மன் கோயில் கர்ப்பக்கிரகம் அமைந்துள்ள இடத்தில் இரவில் சிலநேரங்களில் ஒரு ஒளி தென்பட்டதையடுத்து வல்வை வாசியொருவர் அவ்விடத்திலுள்ள வேப்ப மரத்தடியில் ஒரு கொட்டிலை அமைத்து வழிபட ஆரம்பித்தார். இதுவே முத்துமாரி அம்மன் கோயில் உற்பத்தி எனக் கருதப் படுகின்றது.

ஓலைக்கொட்டகையில் பூஜிக்கப்பட்டு வந்த அம்பாளுக்கு 1400ஆம் ஆண்டில் கர்ப்பக்கிரகம் அமைக்கப்பட்டு அம்பாள் விக்கிரகம் ஸ்தாபிக்கப்பட்டு நந்தி பலிபீடம் என்பன நிறுவப்பட்டு தற்காலம் மணல்கிணறு என அழைக்கப்டும் கிணறே கோயில் பாவிப்புக்கென உபயோகிக்கப்பட்டதுடன் அர்ச்சகர் ஒருவர் நியமிக்கப்பட்டு இருவேளைப் பூசைகள் நடைபெற்று வந்ததாகவும் தெரியவருகிறது.

ஆங்கிலேயர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய 1795ஆம் ஆண்டு வேலாயுதர் புண்ணியர் என்பவரால் இக்கோயில் இராசிந்தான் மணல் என்னும் காணியில் வைரக்கற்களால் கட்டப் பட்டத்ாகவும் இவரே அக்காலப்பகுதியில் கோயிலின் மணியமாக இருந்துள்ளாரென்றும் தெரிய வருகிறது. 1796,1864,1884ஆம் ஆண்டுகளில் அரசினரால் கோயில்களைப் பற்றிய விவரங்களைக் குறித்து வைக்கப்படும் பதிவேடும் இந்த விவரத்தையே தெரிவிக்கின்றது. வேலாயுதர் புண்ணியர் என்பவர் எழுந்தருளி அம்மன், பிள்ளையார், சுப்பிரமணியர் விக்கிரகங்களைச் செய்வித்து சித்திரை மாதத்தில் 15 நாள்கள் உற்சவத்தினையும் நடத்தி வந்துள்ளார்.

வேலாயுதர் புண்ணியர் என்பவரையடுத்து வேலாயுதர் திருமேனியார்,ஞானமூர்த்தி சங்கரப்பிள்ளை,திருமேனியார் வெங்கடாசலம் பிள்ளை போன்றோர் மணியமாகப் பொறுப்பேற்றுக் கொண்டனர். வெங்கடாசலம் பிள்ளையவர்கள் ஆலயத்துக்குத் தென்புறமாக ஒரு திருக்குளத்தையும்,ஒரு மடத்தையும் உண்டு பண்ணியதோடு கோயிலின் சுற்று மதிலையும் அமைத்தார். 1867இல் வல்வை சிவன் கோயிலுக்கு சங்குஸ்தாபனம் செய்து கட்டடவேலைகள் தொடங்கியமையால் கோயில் பொறுப்பை 1868இல் வேறொருவரிடம் ஒப்படைத்து விலகிக் கொண்டார். 1904 ஆம் வருடம் ஆ. நாகமுத்து என்பவர் மணியமாக இருந்த போது சம்புரோட்சன கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது. இந்த நாகமுத்து என்பவரே தற்காலம் வீதியுலா வரும் எழுந்தருளி அம்பாளைச் செய்து கொடுத்தவராவர். இதன் பின்னர் வ.வ இராமசாமிப்பிள்ளை அவர்கள் மணியமாக இருக்கும் காலத்தில் பழைய கட்டடங்கள் இடிக்கப்பட்டு புதிதாக திருப்பணி வேலைகள் மேற்கொள்ளப்பட்டு 1935ஆம் வருடம் சம்புரோட்சன கும்பாபிஷேகம் நடத்திவைக்கப்பட்டது. இதனையடுத்த கும்பாபிஷேகம் 1967இல் நடைபெற்றதோடு இன்றைய தினம் அம்பாள் வீதியுலா வரும் சித்திரத்தேரும் 1979இல் அமைக்கப்பட்டது. அடுத்த கும்பாவிஷேகத்துடன் தம்ப மண்டபப் பகுதி முழுவதும் வில்லுப்பந்தல் அமைக்கப்பட்டு பல திருத்த வேலைகள் என்பன மேற்கொள்ளப்பட்டு 7.6.2002இல் கும்பாபிஷேகம் நடத்தி வைக்கப்பட்டது.

பா. மீனாட்சிசுந்தரம்.

### பிரதம சிவாச்சாரியாரின் அருளாசிச் செய்தி



சிவபூமியாம் யாழ்ப்பாணத்திலே வீரம் விளைந்த மண்ணாம் வல்வை நகரிலே காவல் தெய்வமாக அடியவர்களின் துயர்போக்கும் பொருட்டு எழுந்தருளி வீற்றிருக்கின்றாள் அன்னை முத்துமாரித்தாய்.

கோடிமாரித்தாயென எல்லோராலும் அழைக்கப்படும் அன்னை ஸ்ரீ முத்துமாரிக்கு இன்று தேர்த் திருவிழா. அழகான இரதத் திருவிழாவில் விநாயகப் பெருமான், சுப்பிரமணியப் பெருமான் ஆகியோருடன் பல்லாயிரக்கணக்கான அடியவர் புடை சூழ அண்ட சராசரங்களாக விளங்கும் கோடிமாரித்தாய் வலம்வரும் காட்சியைக் காணக் கண் கோடி வேண்டும்.

துன்ப சாகரத்திநின்றும் மீண்டு இன்ப வாழ்வு நல்க வேண்டும் என்று சர்வயோக மாதாவாகிய ஆதி பராசக்தியான முத்துமாரித்தாயை வேண்டி அருளாசி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன். வேண்டும் அடியவர் கட்டு அருள்மழை பொழிய தேரேறி பவனிவரும் இந்நாளில் அம்பாள் மக்களுக்கு சகல நலன்களுடன் அமைதியும் சாந்தி, சமாதானமும் நிலைக்கப்பெற்று இன்பமாய் வாழ அருள்வேண்டி ஆசி கூறுகின்றேன்.

அன்னையின் அருளாசிப் படி,

''சிவாகம சித்தாந்த ஞான தேசிகபானு''

''பிரதிஷ்டாலங்கார சித்தாந்த ஸாகரம்''

''பிரதிஷ்டா சிரோமணி''

சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர் (JP),

சிவாச்சார்ய பீடாதிபதி, அகில உலக சைவக் குருமார் சம்மேளனம்.

### அமைதியும் சுபீட்சமும் நிலவ அருள்பாலிப்பாய்



இந்து சமுத்திரத்தின் முத்தெனத் திகழும் இலங்காபுரியின் வடபால் யாழ்ப்பாணத்திலே வடமராட்சியின் கண் அமைந்திருக்கும் வல்வை நகரிலே வீற்றிருந்து அருள் பாலித்துக் கொண்டிருக்கும் அம்பிகைக்கு இன்று தேர்த்திருவிழா.

அகிலாண்ட கோடி பிரமாண்ட நாயகியான எல்லாம் வல்ல அன்னை கோடிமாரித்தாய் அவளின் எல்லை இல்லா அருட்பிரவாகத்தில் மூழ்கித்திளைக்க அவளருள் வேண்டும்.

இன்றைய தேர்த்திருவிழா எமது அல்லலகன்று அன்பும், ஆனந்தமும்,இன்பமும், மகிழ்ச்சியும் நிறைந்த நல்வாழ்வை எமக்கு நல்கி நாட்டில் அமைதியும், சுபீட்சமும், சமாதானமும் நிலவ அருள் பாலிக்க வேண்டுமாறு அம்பாளைச் சிந்தித்து, வந்தித்து, சேபித்து, போற்றி, துதித்து, பிரார்த்தித்து நிற்போமாக.

அம்பிகையின் அருள்வழி நடக்கும்,

பா.உதயகுமார், தலைவர், தர்மகர்த்தா சபை.

### காவல் தெய்வமாக வீற்றிருக்கும் மாரித்தாய்



ஆயிரம் கண்கொண்ட அன்னை ஆதிபராசக்தி வல்வை நகரில் காவல் தெய்வமாக வீற்றிருந்து தாணிவாழ் மக்களுக்கெல்லாம் அருள் பாலித்துக்கொண்டிருக்கும் கோடிமாரித்தாய் இன்று தேரேறி வலம் வருகின்றாள்.

இந்த புதுமைமிக்க ஆலய வீதியிலே எமது துன்பம், துயரம், தொல்லை அனைத்தும் அழித்து, ஒழிக்க ஐந்தொழில்களில் ஒன்றாம் அழித்தல் தொழில் புரிய விநாயகப் பெருமான், சுப்பிரமணியப் பெருமான் புடைசூழ அம்பிகையின் தேரோட்டம் நடக்கின்றது. நாம்படும் வேதனை, கஷ்டங்கள் யாவும் நீங்க அம்பாள் இரதத்தில் ஏறி ஆரோகணிக்கின்றாள்.

அம்பாள் தேரேறி வலம்வரும் இந்நன்நாளில் நாட்டில் அமைதியும், சமாதானமும், சபீட்சமும் எம்பெருமாட்டி அருளால் நல்கப்பெற்றுசீரும், சிறப்பும், பேறும் பெற்று மக்கள் அனைவரும் பெருவாழ்வு வாழப் பிரார்த்திப்போமாக.

அம்பிகையின் பாதங்கள் பணிந்து நிற்கும்,

பொ.ஈஸ்வரலிங்கம், செயலாளர்,

தர்மகர்த்தா சபை.

இயந்திரமயப்படுத்தப்பட்ட முறையில் கேக், பணிஸ், பிஸ்கட் வகைகள் மற்றும் பாண் வகைகள் வாகனத்தில் எடுத்துச் சென்று மக்களுக்கு விநியோகிக்கப்படும்.

வல்வை அம்பாள் வெதுப்பகம்

வல்வெட்டித்துறை

நிலையான வைப்புக்கு ரூபா 250,000/-க்கு மேற்பட்ட தொகைக்கு அறுபது மாதங்களுக்கு 24 % வட்டி வழங்குகின்றது.

மக்கள் மனமறிந்த வங்கி

மக்கள் வங்கி

வல்வெட்டித்துறைக் கிளை

தரமான பாண், பணிஸ் மற்றும் கேக் வகைகள் தயாரிப்பாளர்கள்

சீவரத்தினம் பேக்கரி

வல்வெட்டித்துறை

கோயில் பொருள்கள், ஆங்கில மருந்து வகைகள், ஆயுள் வேதப்பொருள்கள், கால்நடைகளுக்கான மருந்து வகைகள், பால்மா வகைகள் என்பவற்றைப் பெற்றுக்கொள்ள

ஸ்ரீ முருகன் மெடிக்கல் ஸ்ரோர்ஸ்

பிரதான வீதி, பருத்தித்துறை.

நிரூண் ஸ்ரோர்ஸ்

தொண்டைமானாறு வீதி, வல்வெட்டித்துறை

நவீன முறையில் குறித்த தவணையில் நகைகள் செய்து கொடுக்கப்படும்.

ஈஸ்வரி நகை அகம்

பிரதான வீதி, பருத்தித்துறை.

பாடசாலை உபகரணங்கள், பாட்டா வகைகள் மற்றும் பல்பொருள்களை ஒரே இடத்தில் பெற்றிட

பிரியங்கா மாளிகை

உடுப்பிட்டிச் சந்தி

தொலைபேசி அழைப்புகள், போட்டோக்கொப்பி என்பவற்றை சிறந்தமுறையில் பெற்றிட

ஈஸ்வரன் தொலைத் தொடர்பு சேவை

கிழக்கு வீதி, வல்வெட்டித்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீரணி நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம்

## சீரணி, சண்டிலிப்பாய்

# தேர்த் திருவிழாச் சிறப்புமலர் 2009

### தேவஸ்தான குருவின் ஆசியுரை



ஸ்ரீ சக்கர நாயகியாகிய அம்பிகையானவள் சக்தி பீடங்களில் ஒன்றாகி இலங்கைத் தீவின் யாழ் நகரின் கண்ணே சண்டிலிப்பாய் சீரணிப் பதியினிலே வீற்றிருந்து அருள்பாலிக்கும் சீரணி என்னும் திருத்தலத்தில் என்றும் பரிபூரணமாய் கோயில் கொண்டு விளங்கும் சர்வலோக நாயகியாம் நாகபூசணி அம்பாளின் வருடாந்த விரோதி வருஷ மகோற்சவத்தில் இரதோற்சவம் என்றழைக்கப்படும் தேர்த்திருவிழாவான இன்றைய தினத்தில் தேவி இரதம் ஏறி சகல மக்களின் துன்பங்களையும் நீக்கி சகல செல்வங்களையும் பெற்று பெருவாழ்வு வாழ ஸ்ரீ நாகபூசணி அம்பிகையை பிரார்த்தித்து ஆசி கூறி அமைகின்றேன்.

அம்பிகையை சரணடைந்தால் அதிக வரம் பெறலாம்.

**பிரம்மஸ்ரீ.கு.சோமாஸ்கந்தக்குருக்கள்**
(தேவஸ்தான குரு)

### கருணையுடன் காத்து, வேண்டும் வரங்களை அருளும் அன்னை



சண்டிலிப்பாய் சீரணியில் குடியிருந்து காக்கும் அன்னையின் இரதோற்சவ தினமான இன்று அலங்கார சொரூபியாக தேரேறி உலாவரும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். "அம்பிகையை சரணடைந்தால் அதிக வரம் பெறலாம்" இந்நாளில் நம்பிக்கை கொண்டு அன்னையிடம் தீராத நோய் தீர்க்க வரம் வேண்டியும், குழந்தை வரம் கேட்டும் மனத்துயர்களை நீக்க வரம் கோரி மக்கள் பிரார்த்திப்பார்கள். நம்பித் தொழுவார் வினை தீர்க்கும் நாயகி யாவரது கோரிக்கையும் ஏற்று வரம் அருள வேண்டியும் இடம்பெயர்ந்து இன்னலுறும் மக்களுக்கு நிம்மதியான வாழ்வை பெற இறைஞ்சுவதுடன் நாட்டில் சமாதானமும் சுபீட்சமும் பெற பிரார்த்திப்போமாக.

**றூபினி வரதலிங்கம்,**
பிரதேச செயலர், சண்டிலிப்பாய்.

### அடியவர்கள் அனைவரும் பாக்கியசாலிகளே!



சண்டிலிப்பாய் சீரணிப்பதியில் வீற்றிருந்து நாடிவரும் அடியவர்களின் வினையைப் போக்கி நலமளிக்கும் அன்னையவள் அழகிய சித்திரத்தேரில் அலங்காரமாகப் பவனி வரும் அழகுத் திருக்கோலத்தை கண்குளிரக் கண்டு தரிசிக்கின்ற அடியவர்கள் அனைவரும் பாக்கியசாலிகளே! இந்நன்நாளில் எம்மண்ணில் சாந்தியும் சமாதானமும் சுபீட்சமும் நிலவி, எல்லோரும் இன்புற்று வாழ அம்பிகையின் அருட்கடாட்சத்தை வேண்டி உளமார பிரார்த்திப்போமாக.

**திருமதி.புஷ்பமலர் சிவலிங்கம்,**
வலிகாமம் தென்மேற்கு, பிரதேச சபை
மானிப்பாய்.

### சீரணி அம்பாள் சீர் பெறவே வாரீர்



சித்தர்கள் கூடி வாழும் சீரணிப்பதியமர்ந்த ஸ்ரீ நாகபூசணித்தாய் அன்னையவள் சித்திராப் பௌர்ணமியில் தேர் ஏறி பவனி வரும் அற்புதக் காட்சி கண்கொள்ளாக் காட்சி ஆகும். தங்கமணித் தேரேறி தரணியிலே உலாவந்து வல்வினைகள் போக்கிடுவாள். பக்தர்கள் குறைதீர்த்து நல்வினைகள் நல்கிடுவாள். வேண்டுவோர்க்கு வேண்டுவன நல்கிடும் நாகபூசணி அம்பாள் அருட்கோலம் கண்டு நல்லாசி பெற்றிடுவீர். என்றும் நல்வாழ்வு வாழ்ந்திடுவீர்.

**இ.சிறிதரன்** (தலைவர்) இந்து இளைஞர் மன்றம்



### ஆலய வரலாறு

இலங்கையில் புகழ்பெற்ற யாழ்ப்பாண நகரத்தில் அமைந்துள்ள பதியில் வாழ் இன்புற்ற வேளாளகுலத்தைச் சேர்ந்த மணியகாரன் உடையார் பரம்பரையினராகிய இராமன் சீரணி என்னும் மண்ணில் சிறப்புற்று வாழ்ந்து வந்தார். அவர் மகன் இராமர் அவர் மகன் முருகேசு. முத்தர் இனசன வழியில் பெரிய சாஸ்திரியார் தெய்வானைப் பிள்ளை, அன்னப்பிள்ளை, நன்னிப்பிள்ளை, மயில்வாகனம், பெரியபிள்ளை, சின்னப்பிள்ளை, வேலர் ஆகியோருடன் இசைந்து வாழ்ந்து வந்தார். நாகபூஷணி அம்பாள் வாலாயம் பெற்ற முருகேசுவிடம் சோமவாரநாள் ஒன்றிலே நாகபூஷணி அம்பாள் கனவில் தோன்றி தான் இவ்விடத்தில் சீரணியில் எழுந்தருள வேண்டும் என்றும் தனக்கொரு கோயில் அமைக்கும்படி கேட்டதற்கு அமைய சைவ முறைப்படி ஒரு கொட்டகை அமைத்து அதில் பூசை செய்துவர வைத்திலிங்கம் அவர்களிடம் ஒப்படைத்தார். இம்முறைப்படி இன சன மக்கள் எல்லோரும் சேர்ந்து வழிபட்டு வந்தார்கள். காலம் காலமாக முருகேசு பரம்பரையினர் பரிபாலித்து வருகின்றனர்.

**த.பரஞ்சோதி** (ஆதீன கர்த்தா)

### ஆதீனகர்த்தாவின் ஆசிச்செய்தி

மண்ணை நம்பி உழுது விட்டு
வயலை நம்பி விதை விதைச்சு
உன்னை நம்பி நாமிருப்போம் சாமியே.
உழவர் நம்பி இருக்குமிந்த பூமியே
காடு வெட்டி களனி செய்து
கஸ்ரப்பட்டு விதை விதைச்சு
கதிர் மணியாய் சிரிக்குதிங்கே பாருங்கையா
கோபுரத்து சீமாட்டிக்கும்
குடிசை வாழும் மக்களுக்கும்
சோறு போட்டு காட்டும் கூட்டம் நாங்களடா
ஏறு நடை போட்டு இங்கே வாருங்கடா.

அகிய உலகையும் காக்கின்ற அரட்பெரும் சக்தியாகிய அகிலாண்டேஸ்வரி. சிறு உயிர்களையும் கோடான கோடி மக்கள் கூட்டத்தையும் தயவு தாட்சண்ணியத்தோடு பாதுகாத்து கொள்பவளும் முட்டையை சிறகிலிட்டு அரவணைக்கும் தாயை போல உயிர்கள் அனைத்தையும் தம்வசம் வைத்து அருள் பாலிக்கும் அம்பிக்கைக்கு முற்றமுழுதான வணக்கத்தை அளிக்கின்றேன்.

இராமன் சிறைவாசம் அனுபவித்தது போல் எம்மையும் சொல்லோணா துன்பத்துக்கு ஆளாக்கி எதுவித தீதுமின்றி காத்தருளும் தாயவள் பெருமை சொல்ல முடியாதது. எதுவந்த போதும் எம்மை பாதுகாத்து அரவணைத்து தன்னுடன் இணைத்து இன்பமாக வாழ் வழிகாட்டியிருக்கிறாள்.

எம் கனவுகளை கனவாக்கி வையத்துள் வாழ்வாங்கு வாழவைத்த தாயவள் துன்பமின்றி பணி செய்ய எமக்கு அருள்பாலித்திருக்கும் நிலையில், தோளோடு தோள் நின்ற உறவுகளையும், நண்பரையும் நாம் பிரிந்த வேதனையை சொல்ல முடியாதிருப்பினும் அம்பாள் அருளாள் நற்செய்தி கிடைத்து நல்லாசி பெற்று வாழ்வாங்கு வாழ தாயை வேண்டுகிறேன். இவ்வுலகில் பலர் மானிடராய் தோன்றி மாணிக்கமாய் மறையும் போது எம்மையும் அம்பிகை மாணிக்கமாய் வாழ வழிகாட்ட வேண்டி நிறைவு செய்கிறேன்.

**த.பரஞ்சோதி** (ஆதீன கர்த்தா)

### மகோற்சவ குருவின் ஆசிச்செய்தி

**"தேரினில் வலம் வந்து திருவருள் புரிவாய்"**



அன்னையாம் ஆதிபராசக்தியின் ஒரு வடிவமாக சீரணித் திருப்பதியில் நாகபூஷணி எனும் நாமம் கொண்டு வரம் வேண்டி வரும் அடியார்களுக்கு எல்லாம் வாரி வழங்கிய வண்ணம் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் அன்னை இன்று தேரேறி வலம் வருகின்றார். ஆன்மாக்களின் ஈடேற்றத்தின் பொருட்டு மனிதர்களின் ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களையும் நீக்கி, இன்னல்களைப் போக்கி பேரானந்தப் பெருவாழ்வு வாழ தேரரேறி வலம் வரும் நாகபூஷணி அம்மை நாட்டில் அமைதி, சமாதானத்தை நிரந்தரமாக நிலைக்க திருவருள் புரிய வேண்டும். நாகபூஷணி அம்பாள் எல்லோருக்கும் சகல சௌபாக்கியங்களையும் கொடுத்து எல்லோரும் இன்புற்றிருக்க இந்நன்நாளில் அன்னையை ஆராதிக்கின்றேன்.

"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க"

**பிரம்மஸ்ரீ.வை.ஜெயதீஸ்வரக்குருக்கள்**

### செஞ்சொற் செல்வரின் ஆசிச்செய்தி



சீர் நிறைந்த வாழ்வு தரும் சீரணி அம்மன் தேர்வலம் வரும் நாள் குறித்து வாழ்த்தி வணங்குவதில் ஆனந்தமடைகிறேன். ஆயிரம், ஆயிரம் பக்தர்கள் கூடி ஆனந்தக் கண்ணீர் சொரிந்து வடம்பிடித்து வாழ்வு கேட்கும் திருநாள். தீராத நோய்களை விரட்டும் தேவதேவி நாகபூஷணி நல்லருள் பாலிக்கும் நன்நாள் ஏழ்மையை விரட்டி, ஏழைகளின் எழில் வாழ்வை உய்விக்கும் அநாதரட்சகி அருள்மழை பொழியும் அற்புத நன்நாள். தேடிய செல்வம் எல்லாம் தேவி உனக்கே அர்ப்பணம் எனக்கருதி வாணிபம் செய்வோர் நற்காணிக்கை செலுத்த வரும் நாள் ஆடியும், பாடியும் அம்மா சரணம் என அடிதொழுது வணங்கும் மீளா அடியவர் கூடும் நாள். இத்திருநாள் காண ஒன்று கூடுவோம். அல்லல் போக்கும் அம்பாளின் நல்லருளால் நாடு நலம் பெறப் பிரார்த்திப்போம். எம்மண்ணில் எல்லோரும் இன்புற்று வாழ இனிய வரம் கேட்டு இந்நாளில் ஒன்றுபட்டுப் பிரார்த்திப்போம். எல்லாம்வல்ல சீரணி அம்மனின் திருத்தேர்விழா வையகத்தை வாழ்விக்க இறைஞ்சி வாழ்த்துக்கூறி அமைகிறேன்.

**ஆறு.திருமுருகன்**(அதிபர்)
ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, சுன்னாகம்


### அறங்காவலர் சபையின் வாழ்த்துச் செய்தி

சித்தர்கள் கூடியிருக்கும் சீரணி எனும் பதியில் அன்பர்கள் ஆசியுற்று இன்பத்தைத் தேடி ஓடி வருவோருக்கு அன்பால் அரவணைத்து அருள்புரியும் நாகபூசணித் தாய்க்கு புகலிடம் தேடி அலையும் உள்ளங்கள் அருள்புரியும் நிலா நிலா என்று அருள் புரியும் அம்பிகையே தங்கள் உள்ளங்களை சுருக்கி அம்பாள் அம்பாள் என்று உருண்டு பிரண்டு ஆதரிக்கும் தாயே எங்களைக் காப்பாற்றுவாயாக என்று எங்கள் இதய வீணைகளின் கதவுகளைத் திறந்து தெய்வ சிந்தனைகளை தந்து நல்வழிப்படுத்தி நாம் காணும் அறம், பொருள், இன்பம், வீடு என்பவற்றைப் பெறுவதற்கு அருள் பாலிப்பாயாக. தூய்மையான உள்ளத்தில் தான் எப்போதும் இறைவன் உறைவான்.

இப்படி எத்தனையோ காட்சிகள் நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. இதுபோல ஈரேழு உலகங்களுக்கும் தம் அருள் பெருகும் பெருமையைக் காணக்கூடியதாக உள்ளது. சோதி வடிவத்தில் காட்சியளித்துக் கொண்டிருக்கின்ற தாய்க்கு சித்திரா பௌர்ணமியில் தேர் ஏறி பவனிவரும் காட்சியைக் கண்டு எம் உள்ளங்கள் மலர்ந்து, அன்பு பெரும் வெள்ளத்தில் நீந்துகின்றோம். சோதிகடாட்சம் பெற்று அருள்புரியும் தாய்க்கு காணிக்கையாக எமது உள்ளங்களை அர்ப்பணிக்கின்றோம்.

**அறங்காவலர் சபையினர்**

**இதழாக்கம்**
**இந்து இளைஞர் மன்றம்**
**சீரணி, சண்டிலிப்பாய்**




## தேர்த்திருவிழாச் சிறப்புற வாழ்த்துவோர்

**கஜமுகன் ஸ்ரோர்ஸ்**
S.S தொலைத்தொடர்பகம் & பான்சி
சண்டிலிப்பாய் வடக்கு, சண்டிலிப்பாய்.

**மானிப்பாய் ப.நோ.கூ.சங்கம்**
கூட்டுறவு நகர் விற்பனை நிலையம்
பிரதான வீதி, மானிப்பாய்

**ஐங்கரன் மோட்டோர்ஸ்**
சந்தை முன்பாக, மானிப்பாய்.

**ஆசைப்பிள்ளை அன் சன்**
நகை மாடம்
இல.10, பஸ் நிலையம் சங்கானை.

**லீலா வெதுப்பகம்**
சீரணி, சண்டிலிப்பாய்

எலைட் சோடா, பிஸ்கட் வகைகள்
**கலாபா இன்டஸ்றீஸ்**
வல்லை வீதி, சங்கானை

**பிள்ளையார் ஸ்ரோர்ஸ் & இரும்பகம்**
வல்வை வீதி, தொட்டிலடி, சங்கானை.

**சுந்தர்சன்**
பிரதான வீதி, மானிப்பாய்

**சக்தி எலக்ரிக்கல்ஸ்**
சந்தைச் சதுக்கம், சங்கானை.

**கம்ஷா களஞ்சியம்**
சண்டிலிப்பாய் மேற்கு, சண்டிலிப்பாய்
கிளை : சீரணிச் சந்தி சண்டிலிப்பாய்

**நியூ சண்முகானந்தா ரெக்ஸ்**
23, (58) பெரிய கடை யாழ்ப்பாணம்

**ஐடியல் அக்கடமி**
தரம் 3 முதல் A/L வரை திறமையும் அனுபவமும்
வாய்ந்த ஆசிரியர் குழுவுடன்
தலைமையகம் : சீரணிச் சந்தி சண்டிலிப்பாய்.
கிளை 1 : இடைப்பிட்டி, காரைநகர்
கிளை 2 : நீராவியடி, யாழ்ப்பாணம், கிளை 3 : மானிப்பாய்

**உதயன் கட்டடப் பொருள் வாணிபம்**
பிரதான வீதி, சங்கானை.

**COMPUTER WORLD & PRINTERS**
7ம் கட்டை சங்கானை.

**YASO TEX**
பிரதான வீதி, நெல்லியடி.

**MANIYAM IMPEX**
No.75(121A). கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

**அம்பிகா கிறீம் ஹவுஸ்**
மலைவேம்படி, அளவெட்டி.

**பாக்கியரட்ணம் ஹாட்வெயார்ஸ்**
பிரதான வீதி, சங்கானை.

**தூரன் ரேடர்ஸ்**
130, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

**கந்தசாமி அன் சன்ஸ்**
பிரதான வீதி, சங்கானை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* ராஜா, பாலா, சிவா, வரதன் ஆகியோர் இல்ல மெய்வல்லுனர் போட்டிக்காக 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் பங்கு பற்றினர் அவர்கள் ஓடிமுடித்த நேரம் கீழே காட்டப்பட்டுள்ளது. அதனை அடிப்படையாகக் கொண்டு 25ஆம் வினாவிற்கு விடை தருக.


- ராஜா - 15 செக்கன்கள்
- பாலா - 13 செக்கன்கள்
- சிவா - 10 செக்கன்கள்
- வரதன் - 12 செக்கன்கள்

25. இவர்களில் 1ஆம், 2ஆம், 3ஆம், 4ஆம் இடங்களைப் பெற்றவர்கள் முறையே,
1) ராஜா, பாலா, வரதன், சிவா 2) சிவா, வரதன், ராஜா, பாலா
3) சிவா, வரதன், பாலா, ராஜா

26. ஒரு குறித்த எண்ணை ஆறால் பெருக்கி இரண்டால் வகுத்து வரும் விடையிலிருந்து மூன்றை கழித்தால் 18ஐ விடையாகப் பெறலாம் அந்த குறித்த எண் யாது?
1) 5 2) 7 3) 9


27. FACE என்ற சொல்லை மட்டை ஒன்றில் எழுதி முகம் பார்க்கும் கண்ணாடியில் பார்த்தபோது அது தோன்றும் விதத்தை கீழே உள்ள விடைகளில் தெரிந்து கோடிடுக.

1) ƎƆAꟻ 2) ƎƆAF 3) EꟻAƆ

28. 
இவ்வாறு வெட்டப்பட்ட தாளினால் உருவாக்கப்பட்ட திண்ம உருவின் விளிம்புகள் எத்தனை?

..........................................

29. தரப்பட்டுள்ள எண் சட்டம் அமைந்துள்ள ஒழுங்கை அவதானித்து அடுத்துவரும் எண் சட்டத்தை வரைக.




30. $36Cm^2$ பரப்பளவைக் கொண்ட சதுரவடிவக் காணித்துண்டு ஒன்றைச் சுற்றி 1m நீளத்திற்கு ஒரு கம்பம் வீதம் நாட்டப்பட்டது. எனின் காணியைச் சுற்றி நாட்டப்பட்ட கம்பங்கள் எத்தனை?


..........................................

* ஒரு சிறிய சதுரத்தின் பரப்பளவு 1 $Cm^2$ ஆகும். இதனை அடிப்படையாகக் கொண்டு 35ஆம் வினாவிற்கு விடை தருக.

31. நிழற்றப்பட்ட உருவின் பரப்பளவு யாது?



..........................................

32. 

பொருளின் நீளம் யாது?

..........................................

33. ராஜாவின் அப்பா தொழில் நிமித்தம் நான்கு வருடங்களுக்கு ஒரு முறை வெளிநாடு சென்று வருவது வழக்கம். இந்த வருடம் (2009ஆம் ஆண்டு) ராஜாவின் அப்பா 8ஆவது தடவையாக வெளிநாடு சென்றார் எனின், அவர் மூன்றாவது தடவை வெளிநாடு சென்றது எந்த ஆண்டிலாகும்?

* 250 Km நேரான நீளமுள்ள நெடுஞ்சாலை ஒன்றில் படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு A முனையிலிருந்து ஒரு மோட்டார் காரும் B முனையில் இருந்து இன்னொரு மோட்டார்க் காரும் அம்புக்குறி காட்டிய வழியில் மணிக்கு 50km வேகத்தில் பயணத்தை மேற்கொண்டது. இத்தரவுகளை அடிப்படையாகக் கொண்டு 34ஆம், 35ஆம் வினாக்களுக்கு விடை தருக.




34. இரண்டு மோட்டார் கார்களும் எத்தனை மணித்தியாலத்தின் பின்னர் ஒரே இடத்தில் சந்திக்கும்?

..........................................

35. A இல் இருக்கும் மோட்டார்கார் B என்ற இடத்திற்குச் செல்ல எத்தனை மணித்தியாலம் எடுக்கும்?

..........................................

36. இல்மனைட் மணலை ஏற்றிய லொறியின் எடை 7600Kg 800g. வெற்று லொறியின் எடை 3200Kg 400g எனின். இல்மனைட் மணலின் நிறை எவ்வளவு?

..........................................

**இவ்வினாத்தாளின் விடைக்குறிப்புக்களும் வினாத்தாள் 12 இன் பகுதி 11 உம் அடுத்தவாரம் வெளிவரும்......**

## தயார்படுத்தல் பரீட்சை -11, பகுதி-11 இன் விடைக்குறிப்புகள்

01 - 1. மரத்தில் இருந்த குருவியோட மழை பொழியுது, 2. மழைக்காலக் காட்சி, 3. சிலுசிலு, 4. மரங்களெல்லாம், 5. மழைநீர், 6. ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு குதித்தல், 7. தாய், 8. தரு, விருட்சம், 9. கன்று, 10. கூரை 02 - 1. ல், 2. ண, 3. ன, 4. ள் 03 - 1. அடிமேல் அடியடித்தால் அம்மியும் நகரும், 2. போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து. 04 - 1. அறிவித்தல், 2. அறிவுறுத்தல் 05 - 1. வீதிகளில் விற்கப்படும் தின்பண்டங்களை வாங்கி உண்ணக்கூடாது, 2. நாம் கொதித்தாறிய நீரையே பருகுதல் வேண்டும் 06 - 1. ஸ்துதி, 2. நகிட்டின்ன, 3. நெஹெ 07 - 1. இருங்கள்/ அமருங்கள், 2. சுகதுக்கம் எப்படி? 08 - 1. மேசை, 2. அதிபர், 3. பெட்டி 09 - 1. School, 2. Market 10 - 1. சரி, 2. சரி, 3. சரி, 4. சரி, 5. சரி 11 - 1 - 1, 2 - 4, 3 - 1, 4 - 2, 5 - 1, 6 - 3, 7 - 2, 8 - 3, 9 - 1, 10 - 2, 12 - 1. வல்லாரை, 2. கற்றாளை, 3. அகத்தி, 4. முந்திச்செல்லத்தடை, 5. வழிவிடவும், 6 - முன்னால் இடதுபக்கம் திரும்பவும் 13 - 1. 6410 - 146 = 6264, 2. ☒ 3. பேருந்து, 4. 0.4, 5. 1100, 6. 1.22, 7. (9+2), (11+2), (18+3), (26+5), 8. 65kg, 250g, 9. 1,4, 2,3, 10. 5/8 14 - 1. உருவில் நிழற்றிக்காட்டுக, 2. 10, 3. 60, 4. காற்பந்து, 5. 50+25 = 75,
15. நிகழ்காலத்தில் அமையப்பெற்றுள்ள பொருத்தமான வாக்கியங்கள்.

**எதிர்வரும் வியாழக்கிழமை கொழும்பு மாவட்ட பிரபல ஆசிரியர்கள் திரு.T.திலீப்குமார் & திரு.T.மன்மதகாந்தன் ஆகியோர் தொகுத்துவழங்கும் வினாத்தாள்-12 இன் பகுதி 11 வெளிவரும் என்பதை மாணவர்களுக்கு கல்விச்சுடர் அறியத்தருகின்றது.**

ஆக்கம்:-ஆசிரியர்கள்
**திரு.T.திலீப்குமார் &**
**திரு. T. மன்மதகாந்தன்.**
கொழும்பு.

**கல்விச்சுடர் தொடர்பான**
விமர்சனங்களுக்கும் கருத்துக்களுக்கும் பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்க.
021-2229944 / 071-6850005 / 071-4273035.


நெடுந்தீவு மகாவித்தியாலயத்தின் கலாசார விழா அண்மையில் நடைபெற்றது.
இதில் இடம்பெற்ற 'காத்தவராயன்' சிந்துநடைக் கூத்தின் ஒரு காட்சியைப் படத்தில் காணலாம். (படம்: [illegible])


வேலணை கிழக்கு மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட இலங்கை வங்கியின் ஊர்காவற்றுறைக் கிளைமுகாமையாளர் கு.சிவஞானசுந்தரம், சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலய அதிபர் ச.வாமதேவன் ஆகியோர் மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனைமுகாமைத்துவப் பயிற்சியின் ஆரம்பநாள் நிகழ்வு

யாழ்ப்பாணம்,மே 8

யாழ்ப்பாணக் கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவின் அனுசரணையுடன் நடைபெறும் மனைமுகாமைத்துவப் பயிற்சி நெறியின் ஆரம்பநாள் நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அச்செழு சமூக அபிவிருத்தி மன்ற மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் க.சின்னராஜன் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் யாழ்.வலய முறைசாராக் கல்விப் பிரிவின் உதவிக் கல்விப்பணிப்பாளர் மு.இராசநாயகம் பிரதம விருந்தினராகவும் யாழ்.வலய முறைசாராக் கல்விப்பிரிவைச் சேர்ந்த செயற்றிட்ட அதிகாரி ச.சிவானந்தன், ஆசிரிய ஆலோசகர் இ.இரவீந்திரன், அச்செழு மாதர் சங்கத் தலைவி திருமதி சறோஜினி சத்தியநாதன் ஆகியோர் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்வர். (203-204)


## எம்மைவிட்டு மறைந்துவிட்ட தாயை நினைவு கூர்ந்து அனுஷ்டிக்கும் விரதம் சித்திரா பௌர்ணமி விரதம்

இன்று சித்திரைப் பௌர்ணமி தினமாகும். இந்துக்களின் பௌர்ணமி விரதங்களிலேயே சித்திரைப் பௌர்ணமி விரதம் முக்கியமானதொரு விரதமாகக் கொள்ளப்படுகின்றது. பௌர்ணமி விரதம் தாயை இழந்தவர்கள், தாயை நினைத்து அனுஷ்டிக்கும் விரதமாகும்! அதேபோன்று தந்தையை இழந்தவர்கள், தந்தையை நினைத்து அனுஷ்டிக்கும் விரதமாக அமாவாசை விரதம் விளங்குகிறது! அமாவாசை விரதத்தில் ''ஆடி ஆமாவாசை' சிறப்பானதாகும்! அதேபோல் பௌர்ணமி விரதத்தில் 'சித்திரைப் பௌர்ணமி விரதம்' சிறப்பானதாக விளங்குகிறது. சித்திரைப் பௌர்ணமி தினத்தன்று பொதுவாக அம்மன் கோயில்களில் விஷேடமான பூசைகள், ஆராதனைகள் இடம்பெறுவது வழக்கம். வாழ்க்கைச் சிரமங்களின் மத்தியிலும் எமக்கு வயிறார அன்னமிட்டு கஞ்சியோ கூழோ தந்து எம்மை வளத்தெடுத்த தாய்க்

### இன்று சித்திரா பௌர்ணமி தினமாகும்

காக அவளது தியாக உணர்வுக்கு நன்றிக் காக கோயில்களில் கஞ்சி காய்ச்சி பசித்தோரை பசிதீர்க்க கஞ்சிவார்க்கும் வழக்கம் நிலவுவதாக எம்மால் உணர முடிகிறது! எம் பசி போக்கிய அன்னையை நினைத்து, ஒருபிடி அரிசியேனும் அம்மன் சந்நிதானத்தில் கொடுத்து, கஞ்சி காய்ச்சிப் படைப்பது சிறப்பான அம்சமாகும். மற்றும் இந்திரன் வியாழ பகவான் கிரகஸ்பதி குருவானவர், பாவம் தீர்க்க பூலோகம் வந்து சிவலிங்கம் அமைத்து அம்மன் செய்து வழிபட்டதால் காடு கடம்ப வனமாக மாறி, அது மதுரையாகியது. மதுரைக்கு தெற்கே திருக்குற்றாலம் நதி உற்பத்தியாகிறது. 'சித்திரா' என்ற நதி இந்நாளில் தோன்றியது என்றும் கூறப்ப டுகிறது. இந்த நாளில் அம்மனுக்குத் திருமணம் நடைபெறுமாம்! அந்த நேரத்தில் விஷ்ணு தன் தங்கைக்குச் சீர்கொண்டு வந்ததாகவும் கதை உள்ளது. இதைவிட, சூரியன் மற்றும் சந்திரன் காலத்தைக் கணக்கிடுபவர்கள் இது சித்திரை மாத நட் சத்திரத்தைக் குறிக்கிறது. ஒரு பௌர்ணமி அடுத்த பௌர்ணமித் திங்கள், சித்திரை வருடப்பிறப்பு முதலாம் திகதி! பிரம்மன் புதிதாக உலகத்தைப் படைக்கத் தொடங்குகிறார். சித்திர குப்தன் முதல் வருடத்தில் தனது கணக்கில் யாரையும் மரணத்தில் இருந்து தவறவிட்டிருந்தால் விதியின் கணக்கிலிருந்து தவறுதலாக விட்டிருந்தால்- அதற்கிடை யில் அந்த உயிரை தம் வசம் எடுத்து விடுவார் என்றும் கூறப்படுகின்றது. சித்திரகுப்தன் காலத்தை முடிப்பவர் அல்லவா? குப்தன் என்பதன் கருத்து ரகசியம் என்பதாகும். இரகசியமாக தன் பிழையை மறைத்து சித்திரையில் முடிப்பவர் என்பதால் 'சித்திரகுப்தன்' என்று இவருக்கு பெயர் வந்தது! இந்நாளில் தெற்குத் திசை யமனுக்கு உரிய திசையாக விளங் குகிறது. இந்தத் திசையில் யமனுக்கு கோலமிட்டுக் கும்பிடுவர். உண்மையில் 'சித்திரைப் பௌர்ணமி விரதம்' தாய்க்காக மட்டுமன்றி, அம்மன் திருமண நாளின் சிறப்பபையும், சித்திரகுப்தனிடம் மரண பயத்திற்காக வேண்டும் விரதமாகவும் அனுஷ்டிக்கப்படுகிறது. என்ற உண்மை அறிந்து மூவரையும் இந்நாளில் நினைத்து இந்த விர தத்தை அனுஷ்டித்து அருள் பெறுவோமாக.

**செல்வி சற்குணசிங்கம் நளாயினி**
**சுன்னாகம்.**



வண்ணை காமாட்சி அம்பாள் ஆலய தேர்த்திருவிழா நேற்று இடம்பெற்றது.
அம்பாள் தேரைநோக்கி எழுந்தருளி வருவதையும் தேரில் ஆரோகணித்து பக்தர்களுக்கு அருள்பாலிப்பதையும் படங்களில் காணலாம்.
*(படங்கள்: லக்ஷ்மன்)*

## யாழ்.பல்கலைக்கழகம் உதயமாக வித்திட்ட பெரியோர்களில் ஒருவர்

**இன்று (08.05.2009) யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முதல் துணைவேந்தர் பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்களின் எண்பத்தைந்தாவது பிறந்ததினம். அவரை நினைவு கொள்ளும் முகமாக கொழும்புத் தமிழ்ச்சங்கமும், பேராசிரியர் சு.வித்தியானந்தன் நினைவுக்குழுவும் இணைந்து பேராசிரியர் சு.வித்தியானந்தன் புலமை உரை நிகழ்வொன்றினையும் அவரால் எழுதப்பட்ட ஈழத்துப் பெரியார்கள் பற்றிய கட்டுரைத் தொகுதியொன்றினையும் ''வித்தியின் பார்வை யும் பதிவும்'' என்ற பெயரில் நூல் உருவாக்கி வெளியீடு செய்தும் வைக்கின்றார்கள். அதனை யொட்டிய கட்டுரை இது.**

ஈழத்தமிழர் வாழ்வில் காத்திரம்மிக்க தாக்குறவு செலுத்திய பேராசிரியர் சு.வித்தியானந்தன் (1924.05.08 - 1989-01.21) தனது இயக்கத்தை நிறுத்திக்கொண்டு இருபது வருடங்கள் கடந்துவிட்டன. அவரது எண்பத்தைந்தாவது பிறந்தநாளில் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து அவர் ஏற்படுத்திய வகிபாகம் குறித்து ஒரு மறுமதிப்பீட்டினை மேற்கொள்வது அவசியமானதாகும்.

நண்பர்களாலும் அவரது மாணவர்களாலும் ''வித்தி'' என அன்புகலந்த மதிப்புணர்வோடு அழைக்கப்பட்ட பேராசிரியர், யாழ்ப்பாண மாவட்டத்திற்குட்பட்ட தெல்லிப்பழையில் வழக்கறிஞரான சுப்பிரமணியத்தின் மகனாகப் பிறந்தார். தாயார் முத்தம்மா. வீமன்காமம் அவரை வளர்தெடுத்த கிராமம். மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் திருப்பணி, ஆடி அமாவாசையில் அன்னதானம் ஆசிய ஆன்மீக நாட்டத்தில் ஈடுபாடு கொண்ட அவரது குடும்ப முன்னோடிகள் ஆறுமுகநாவலர் செல்வாக்குக்குட்பட்டு கல்விக் கூடங்களையும் நிறுவியுள்ளார்கள்.

வீமன்காமம் தமிழ்ப்பாடசாலை (வித்தியன் பேரன் சின்னத்தம்பியால் தொடங்கப்பட்டு தந்தையால் விருத்தி செய்யப்பட்ட பாடசாலை இது), தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, பரியோவான் கல்லூரி, யாழ்.இந்துக்கல்லூரி, இலங்கை பல்கலைக்கழகம், இலண்டன் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் கற்றுத் தேர்ந்தவர் வித்தி. இலங்கைப் பல்கலைக்கழகத்தில் சுவாமி விபுலானந்த அடிகள் பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை ஆகியோர் இவரது ஆசிரியர்களாகத் திகழ்ந்தனர். இங்கு தமிழ் சிறப்புப் பாடமாகக் கற்று கலைமாணி-முதுகலைமாணி ஆகிய பட்டங்களைப் பெற்ற முதலாமவர் வித்தி. இலண்டனில் கலாநிதிப்பட்டம் பெற்றபோது அவருக்கு 26 வயது பூர்த்தியாகியிருந்தது. அக்காலத்தில் இத்தனை இளம் வயதில் இவ்வாறு உயர் பட்டபேற்றினை எய்தியோர் விரல்விட்டு எண்ணத்தக்கோரே என்பது சொல்லித்தெரிய அவசியமில்லாதது.

இவ்வாறு உருவாகும் ஒருவர் வெறும் புத்தகப் பூச்சியாக இருப்பதற்கான வாய்ப்பே அதிகம். தன்னைப்போன்ற புத்தகப் பூச்சிகளையே சமூகத்தில் பெரிதும் வளர்த்தெடுப்போராயும் விளங்குவர். மாறாகச் செயல்திறன் மிக்க மாணவர் பரம்பரையொன்று களப்பணிகள் வாயிலாகச் சமூக அசைவியக் கத்துக்குப் பங்காற்றி நிலைபேறான சாதனை களை நிறைவாக்குவதற்கான அடிப்படைகளை விதைத்துச் சென்றவர் வித்தி. ஏனையவர்களை இயக்குபவராகவன்றி தானே முன்னோடிப்பாத்திரம் வகித்துச் செயற்பட்டார். கலாநிதிப் பட்டப் பேற்றுக்காக பதிற்றுப் பத்தை ஆய்வுப் பொருளாக எடுத்தவர் அதனை ஆங்கில வடிவில் முடங்கிப்போக விடாமல், ''தமிழர் சால்பு'' எனும் தலை சிறந்த தமிழ் நூலாக மறுவரைவு செய்து தந்தார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகப் பணியாற்றிய வித்தி தனது மாணவியாக அறிமுகமான நுணாவிலைச் சேர்ந்த செல்வி கமலாதேவி நாகலிங்கம் அவர்கள் மீது காதல்கொண்டு 1957இல் மனைவியாக்கிக் கொண்டார். இவர்களுக்கு மூன்று மகன்கள் இரு மகள்கள் கிடைக்கப் பெற்றனர். ''பிள்ளைகளுக்கு சூட்டும் பெயர்களிலிருந்து ஒரு குடும்பத்தினர் விழுமியங்கள் எத்தகையவை என்பதை ஓரளவுக் கேனும் விளங்கிக்கொள்ளலாம். அருள்நம்பி, மகிழ்நங்கை, அன்புச்செல்வி, இன்பச்செல்வன், சிவமைந்தன் என்று வித்தி குடும்பத்தினர் தம்பிள்ளைகளுக்குப் பெயர் சூட்டினர். அவர்களுடைய அன்புள்ளத்தையும் தமிழ் ஆர்வத்தையும் சமயப்பற்றையும் பாரம்பரியப் பண்பாட்டுணர்வையும் காட்டுபவனாக அப்பெயர்கள் உள்ளன எனக் காட்டுவார் பேராசிரியர் சி.தில்லைநாதன்.

அவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் ஆனதன்பின் தன்னால் இயன்றளவில் யாழ்ப்பாண வளாகமாக இருந்த ஒன்றினை முழுமையான பல்கலைக்கழகம் ஆக்குவதற்கு அரும்பாடுபட்டு உழைத்தார். குறிப்பாக மருத்துவ பீடத்தை

### பேராசிரியர் சு.வித்தியானந்தன் நினைவு நாள் இன்று

கட்டியெழுப்புகையில் துறைசார் பேராசிரியர்களை வரவழைப்பதிலிருந்து வளங்களைப் பெறுவதுவரை பெரும் சவால்களை முகங்கொண்டு வெற்றிகரமாக நிறைவேற்றியிருக்கின்றார். ஆயினும் இறுதிக்காலத்தில் அவரால் கட்டியெழுப்பப்பட்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தோடு முரணுறும் துயரையும் சந்தித்தார். அந்த மனச்சுமையோடு 1989இல் அவர் மறைந்துவிட்ட போதிலும் அவரது நினைவைப் பல்கலைக்கழகம் நன்றியுணர்வோடு பதிந்து வைத்து பெருமைகொள்ள மறந்துவிடவில்லை. மிகப் பெரும் பொக்கிஷமாகத் திகழும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நூலகம் ''பேராசிரியர் சு.வித்தியானந்தன் நூலகம்'' என்று பெயரிடப்பட்டுள்ளமை பொருத்தப்பாடுமிக்க கைமாறு, இலங்கை தபால் திணைக்களம் 1997 நவம்பர் 11 அன்று வித்தியரின் முத்திரையை வெளியிட்டதன் வாயிலாக இலங்கைச் சமூகம் அவர் மீது கொண்ட




மதிப்புணர்வையும் வெளிப்படுத்தியுள்ளது.

அவர் பெறும் கௌரவம் கல்விப்புலத்தைக் கடந்தவியாபிதங்களையுடையது. ''தமிழர் சால்பு'' போலபின்னர் ஆய்வு நூல்களை அவர் எழுதவில்லை. பல்கலைக் கழக மாணவர்களது தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடியதாக அவ்வப் போது எழுதிய கட்டுரைகள் பின்னர் தொகுக்கப்பட்டுத் தனிநூல்களாயின. ஆழமிக்க ஆய்வு நூல்களாகத் தக்கன. பல்வேறு பணிகளால் அவ்வாறு ஆகாமல் கட்டுரை நூல்களுக்குள் அடங்கிப் போய்விட்டமை ஒருவகையில் தவிர்க்கவியலாததுதான். அப்படியும் நூலுரு பெறாத கட்டுரைகள் இன்னும் அதிகமுள. இத்தகைய கட்டுரை களைக் காணும்போது அவரது சமூகநோக்கு தெற்றேன விளக்கம் பெறக் காணலாம். இஸ்லாமிய தமிழ் கிறிஸ்தவ தமிழ் குறித்த அவருடைய பங்களிப்புகளில் அனேகமா னவை முன்னோடி செயற்பாடுகளாகும். இவற்றினூடாக விரிந்தகன்ற தமிழ் தேசியக் களத்தைப் பண்பாட்டுத் தளத்தில் கண்டு காட்ட வித்தி முயன்றுள்ளார்.

வித்தியரிடம் விபுலானந்த அடிகளது ஆன்மீக நாட்டமோ அவர் நிலைப்பட்ட தேசியமோ தாக்கம் செலுத்தியதை விடவும் திராவிடரியக்கத் தாக்கமே முனைப்புற்றிருந்தது. அதன்பேறாகவே தமிழர் சால்பினை உணர்த்தும் ஆய்விலே ஆழக்கால் பதித்தார்.

**முனைவர் ந.இரவீந்திரன்**
*சிரேஷ்ட கல்வியலாளர்.*



நல்லூர் கைலாசபிள்ளையார் ஆலயத் தேர்த்திருவிழா நேற்று இடம்பெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள். விநாயகப் பெருமான் தேரில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலிப்பதைப் படங்களில் காணலாம். *(படங்கள்: லக்ஷ்மன்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.பஸ் நிலையத்திற்கு முன்பாக இலங்கை வங்கியின் வரவேற்பு கருமபீடத் திறப்புவிழாவும், பணப்பரிமாற்ற சேவையின் ஆரம்ப நிகழ்வும் நேற்று முன்தினம் இடம்பெற்றன.

இலங்கை வங்கியின் ஓய்வுபெற்ற பிராந்திய உதவிப் பொது முகாமையாளர் எஸ்.பாலசுப்பிரமணியம் மங்கள விளக்கேற்றுவதை முதலாவது படத்திலும் இலங்கை வங்கியின் வட பிராந்திய உதவிப் பொது முகாமையாளர் என். சிவரட்ணம் வங்கிக் கிளையைத் திறந்து வைப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம். யாழ்.மேற்றரக்கிளை முகாமையாளர் எஸ்.ஆனந்த நடேசன், பஸ் நிலைய வங்கிக் கிளை முகாமையாளர் ஜே.சிவராஜசர்மா ஆகியோர் உரையாற்றுவதை மூன்றாவது, நான்காவது படங்களிலும் காணலாம். பிராந்திய உதவி முகாமையாளர் வாடிக்கையாளருடன் பணப்பரிமாற்ற சேவையை ஆரம்பித்து வைப்பதை ஐந்தாவது படத்தில் காணலாம்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் ஆரம்பித்து வைக்கப்பட்ட பணப்பரிமாற்ற நிலையத்தை யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி எஸ்.தேவநேசன் திறந்து வைப்பதையும் பணப்பரிமாற்ற நிகழ்வை போதனா வைத்தியசாலை நிர்வாக உத்தியோகத்தர் கே.பத்மநாதன் தொடக்கி வைப்பதையும் ஆறாவது, ஏழாவது படங்களிலும் காணலாம். *(படங்கள்: லக்ஸ்மன்)*

# விடுமுறையில் வெளிநாடு செல்லும் எம்.பிக்கள் அரசுக்கு எதிராகச் செயற்படுகின்றனராம்

## அமைச்சர் தினேஷ் குணவர்த்தன குற்றச்சாட்டு

கொழும்பு, மே 8

சில எம்.பிக்கள் நாடாளுமன்றத்தில் விடுமுறையைப் பெற்றுக்கொண்டு வேறுநாடுகளுக்குச் சென்று இலங்கை அரசுக்கும் அரசியல் யாப்புக்கும் முரணான வகையில் செயற்படுகின்றனர் என்றும் அவ்வாறானவர்களுக்கு விடுமுறை வழங்குவது ஒரு பாரதூரமான விடயமாகும் என்றும் கொறடா தினேஷ் குணவர்த்தன நேற்று முன்தினம் கூறினார்.

தமிழ் தேசிய கூட்டமைப்பு எம்.பி. சிவாஜிலிங்கத்துக்கு சபா நாயகரால் நேற்று முன்தினம் மூன்று மாத விடுமுறை வழங்கப்பட்ட போதே தினேஷ் குணவர்த்தன மேற்கண்டவாறு கூறினார்.

அவர் இதுதொடர்பாக மேலும் கூறியவை வருமாறு;-

நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்திற்கு வராமலிருப்பதற்காக அவர்களுக்கு விடுமுறை வழங்கப்படுவதைத் தடுக்கமுடியாது. அது அவர்களின் உரிமை.

ஆனால், சில எம். பிக்கள் இந்த விடுமுறையைப் பெற்றுக்கொண்டு வெளிநாடுகளுக்குச் சென்று எமது நாட்டு அரசியல் யாப்புக்கு முரணான வகையில் செயற்படுகின்றனர்.

இவ்வாறானவர்களுக்கு விடுமுறை வழங்குவது மிகவும் பாரதூரமான விடயம். இவர்களுக்கு விடுமுறை வழங்குவது சரியானதா என்று நாம் எண்ணிப்பார்க்க வேண்டும் - என்றார். (சி)

## மரம் நடுகை

கட்டைவேலி - நெல்லியடி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் மரம் நடுகையின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தும் நோக்கில் 40இற்கு மேற்பட்ட பயன் தரு மரங்களை நட்டுள்ளனர்.

சங்கத்தின் எல்லைப் பரப்புக்குள் உள்ள நெல்லியடி, கட்டைவேலி, துன்னாலை ஆகிய இடங்களில் உள்ள சங்கத்தின் சொந்தக் காணியில் இப்பயன்தரு மரங்கள் நடப்பட்டன.

அத்துடன் சங்க அங்கத்தவர்களுக்கும், பணியாளர்களுக்கும் 200இற்கும் மேற் [illegible] வழங்கப்பட்டுள்ளன. (203-236)


## தவறிவிட்டது

4ஆம் வட்டாரம், புங்குடுதீவு என்னும் முகவரியுடைய ஞானேஸ்வரன் றஜிதாடொறின் என்பவரது தே.அ.அ.(737433579V) இராணுவ அ.அ.(0901034535) என்பன 01.05.2009 அன்று சாவகச்சேரி மகளிர் கல்லூரிக்கும் பஸ் தரிப்பிடத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும்.

தொடர்பு: இ.ஞானேஸ்வரன்,
இல 5/15, இராசாவின்தோட்டலேன், யாழ்ப்பாணம்.
T.P: 0779585890 (84954)

## தவறிவிட்டது

வரணி இயற்றாலை, வரணி என்னும் முகவரியுடைய துரைசிங்கம் பத்மதாஸ் என்பவரது தே.அ.அ. (902842853 V), இராணுவ அ.அ.என்பன நவாலிக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் ஒப்படைத்துதவவும்.

தொடர்பு: தர்மேஸ்வரன் ஜெயந்தி,
நவாலி வடக்கு, நவாலி.
தொ.பே: 9478 (84925)

## CHUNNAKAM MEDICAL CLINIC
## சுன்னாகம் மெடிக்கல் கிளினிக்

K.K.S. ROAD, CHUNNAKAM

- யாழ்.போதனா வைத்தியசாலை வைத்தியர்களினால் (MBBS Doctor) தினமும் வைத்திய ஆலோசனைகள் நடைபெறுகின்றன.
- பெண்நோயியல், மகப்பேறு சம்மந்தமான ஆலோசனைகள், கற்பவதிகளுக்கான ஸ்கான் (Scan) ஞாயிற்றுக் கிழமை பி.ப. 2 மணிக்கு நடைபெறுகின்றது.
- பற்சிகிச்சை நிலையம் DENTAL CLINIC
- நவீன ஸ்கான் (Scan) செய்துகொள்ள முடியும்.
- மருத்துவப் பரிசோதனைகள் - Blood, Urine Test, ECG -
- மருந்தகம் - Pharmacy

## வாசல் தேடி வரும் வைத்தியசேவை
## DOOR TO DOOR MEDICAL CARE

நோயாளரை வைத்தியசாலைக்கு அழைத்து
வருவது சிரமமாக இருக்கிறதா
கவலையை விடுங்கள் உங்களுக்கு
உதவ நாங்கள் இருக்கிறோம்.

- உங்கள் வீட்டிலேயே வைத்திய ஆலோசனைகள் (யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியர்கள்)
- உங்கள் இடத்திலேயே மருத்துவ பரிசோதனைகளும் (Blood, Urine Test, ECG) மருந்துகளும்.

அழையுங்கள் - 077 8690156,
071 3056022

## வீடு விற்பனைக்கு

நாவலர் வீதி, கச்சேரி நல்லூர்ச் சந்திக்கு அருகில் கடையுடன் கூடிய சகல வசதிகளையும் கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 060 2214688/ 021 222 9119,
077 5184725 (சி/558359)

## பதினோராம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி இரத்தினம் சண்முகம்

தோற்றம்
22 * 04 * 1934

மறைவு
11 * 05 * 1998

திதி: சித்திரைப் பௌர்ணமி

பதியினைப் பிரிந்து சென்று - ஆண்டு
பதினோன்று ஆனதம்மா
விதி இதுவென எண்ணிவிட்டு
விலகி இருந்திட முடியவில்லை

கனிவோடு எமைக்காத்த காலத்தை - எண்ணி
கழிக்கின்றோம் எந்நாளும்
இனிவரும் காலங்களும் நெஞ்சில் இருந்து
இனித்திடுமே உம் நினைவு

உங்கள் நினைவுடன்:
மு.சண்முகம் (கணவர்), பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள். (85063)

57, மருதடி வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

## துயர் தீரா எம் நெஞ்சினால் நாம் தரும் நினைவு அஞ்சலி

தோற்றம் 40ஆம் ஆண்டு | 02 ஆம் ஆண்டு தோற்றம்

18 * 03 * 1909
மறைவு 08 * 05 * 1969





14 * 09 * 1923
மறைவு 16 * 04 * 2007

அந்தோனி சிறில் (ஓய்வுபெற்ற அதிபர்)
சிறில் கத்தரின் தவமணி

நித்திய வான் வீட்டில்
நிலைத்து வாழும் உங்களை
நித்தமும் நாம் நினைந்து
அஞ்சலி செலுத்துகிறோம்.

குடும்பத்தினர்.

[illegible] நவாலி தெற்கு, மானிப்பாய். (85054)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தில் அரங்கேறும் 'இந்து அழிப்பு' கொடூரத்தை மத்திய அரசு வேடிக்கை பார்ப்பது வியப்பளிக்கிறது

## விஷ்வ இந்து பரிஷத் தலைவர் பேட்டி



நாகர்கோயில்,மே 8

இலங்கையில் நடைபெறும் 'இந்து அழிப்பு' கொடூரத்தை மத்திய அரசு வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பது வியப்பை அளிக்கிறது - என்று விஷ்வ இந்து பரிஷத் இயக்கத் தலைவர் அசோக் சிங்கால் கூறியுள்ளார்.

நாகர்கோயிலுக்கு வந்துள்ள அவர் நேற்றுமுன்தினம் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தபோதே இதனைத் தெரிவித்தார். அப்போது அவர் மேலும் கூறியவை வருமாறு -

இந்தியாவில் பல்வேறு தீவிரவாதம் குறித்து நாம் கேள்விப்பட்டிருந்தாலும் இந்துத் தீவிரவாதம் என்ற வார்த்தையை நாம் ஒரு போதும் கேள்விப்பட்டதில்லை. ஆனால் ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு இந்து தீவிரவாதம் என்று கூறி இந்த நாட்டின் சாதுக்களையும், மகாத்மாக்களையும் இழிவுபடுத்துகிறது.

இதனால் மகாத்மாக்கள், சாதுக்கள் ஒன்றிணைந்து 'தர்ம ரக்ஷ மஞ்ச்' என்ற அமைப்பை உருவாக்கியுள்ளனர். இந்த நாடு எதிர் நோக்கியிருக்கும் அபாயங்கள் மற்றும் இந்துக்கள் எதிர்நோக்கி இருக்கும் ஆபத்துகள் குறித்து இந்துக்களிடையே மிகப் பெரிய அளவிலான விழிப்புணர்வை இந்த அமைப் பின் மூலம் ஏற்படுத்த திட்டமிட்டு உள்ள னர். இதற்காக அவர்கள் மும்பையில் கூடி ஆலோசனை நடத்தினர்.

அப்போது 11 அம்ச கோரிக்கையை உருவாக்கினர். அதில் மத சார்பற்ற நாடு என்று இருக்கும் இந்தியாவை ஆன்மீக நாடு என்று அறிவிக்க வேண்டும், நாட்டில் அதிகரித்துள்ள தீவிரவாதத்தை முடிவுக்குக் கொண்டு வந்து இந்துக்கள் கொல்லப்படுவதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும், ராமர் பிறந்த இடத்தில் அவருக்கு கோயில் கட்ட வேண்டும், ராமரால் கட்டப்பட்ட சேது பாலம் பாதுகாக்கப்பட வேண்டும், மதமாற்றம் முழுமையாக தடை செய்யப்பட வேண்டும் என்பவை அடங்கியுள்ளன.

இந்தியாவில் உள்ள பிரதான கட்சிகளான காங்கிரஸ், பா.ஜ.க. ஆகியவற்றுக்கு 11 அம்ச கோரிக்கையை கொடுத்தோம். பா.ஜ.கட்சி அதை ஏற்றுக்கொண்டு தனது தேர்தல் அறிக்கையில் வெளியிட்டுள்ளது.

இலங்கையில் நடப்பது தமிழர் பிரச்சினை அல்ல. அது இந்துக்கள் பிரச்சினை. அங்கு 500க்கும் அதிகமான இந்து கோயில்கள் இடிக்கப்பட்டுள்ளன. அங்கு இருந்து வீடுகளை இழந்து இந்துக்கள் வெளியேறி வருகின்றனர். இவற்றையெல்லாம் சோனியா காந்தி தலைமையிலுள்ள மத்திய அரசு வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கிறது.

இதுபோன்ற நிலை கிழக்கு பாகிஸ்தானில் நிலவியபோது, அப்போதைய பிரதமர் இந்திரா காந்தி இராணுவத்தை அனுப்பி வங்கதேசத்தை உருவாக்கினார். ஆனால் இப்போதைய அரசு இலங்கை யில் நடக்கும் இந்து அழிப்புக் கொடூரத் தை அனுமதித்து வேடிக்கை பார்ப்பது ஆச்சரியமாக இருக்கிறது - என்றார்.

# புலிகள் தமிழரைக் கேடயமாக பயன்படுத்தி வருகின்றனர்...!

## தி.மு.க. செயலர் அன்பழகன் குற்றச்சாட்டு

பண்ருட்டி,மே 8

விடுதலைப் புலிகள் தமிழர்களை தாக்குவதாலும் அவர்களைக் கேடயமாக பயன்படுத்துவதாலும் தமிழர்கள் அதிகளவில் இறக்கின்றனர் - என்று தி.மு.க. பொதுச் செயலர் க.அன்பழகன் கூறியுள்ளார்.

தி.மு.க. கூட்டணிக் கட்சியின் கடலூர் நாடாளுமன்றத் தொகுதி காங்கிரஸ் வேட்பாளர் கே.எஸ்.அழகிரியை ஆதரித்து பண்ருட்டியில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு -

காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி கட்சியின் எண்ணிக்கை அதிகமானால் மத்தியில் காங்கிரஸ் ஆட்சி அமையும், இதனால் இந்தியாவும், தமிழகமும் பலன்பெறும். இந்த அணியைத் தோற்கடிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் கம்யூனிஸ்டுகள் 3ஆவது அணி அமைத்து தவறான எண்ணத்தைப் பரப்புகின்றனர். சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என கூறிய வைகோ, ராமதாஸ் இன்று அத் திட்டத்தை தடை செய்ய நினைக்கும் அ.தி.மு.கவுடன் கூட்டணி வைத்துள்ளனர்.



இலங்கையில் போர் நிறுத்தம் செய்ய வேண்டும் என கருணாநிதி சட்டப்பேரவையில் தீர்மானம் எடுத்ததுடன், அனைத்துக் கட்சிக் கூட்டத்தையும் கூட்டினார். போரை நிறுத்தச் சொல்ல நமக்கு உரிமை கிடையாது, மத்திய அரசுதான் இலங்கை அரசைவலியுறுத்தும். அதற்காக கருணாநிதி முயற்சி எடுத்தார்.

விடுதலைப் புலிகள் தமிழர்களை தாக்குவதாலும் அவர்களைக் கேடயமாக பயன்படுத்துவதாலும் தமிழர்கள் அதிகளவில் இறக்கின்றனர். புலிகளைப் பாதுகாக்க நாம் நடவடிக்கை எடுக்க முடியாது - என்றார் அன்பழகன்.

# இந்தியாவில் வசீகரமான - நாகரிகமா அரசியல்வாதிகளில் ராகுல் முதலி

## கருத்துக்கணிப்பில் முடி



தேர்தல் சம... வசீகரமான - நாகரிகமான அரசியல் வாதிகளுக்கு மௌசு இருக்கும். அவர்களுக்காக கூட்டம் கூடும். இதே போல் சினிமாத் துறையில் இருந்து அரசியலுக்கு வந்தவர்களுக்கும் மௌசு இருக்கும்.

தற்போது நாடாளுமன்றத் தேர்தலில் இதை அடிப்படையாக கொண்டு இந்திய அரசியலில் மிகவும் வசீகரமான - நாகரிகமான அரசியல் வாதி யார் என இந்தியா முழுவதும் உள்ள 'பேஷன் டிசைனிங்' கல்வி நிறுவன மாணவர்களிடையே வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. 156 மையங்களில் உள்ள 14 ஆயிரம் மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

இந்த வாக்கெடுப்பில் ஆண் அரசியல் வாதிகளில் ராகுல்காந்தி முதலிடம் பிடித்துள்ளார். இவருக்கு அடுத்தப்படியாக முன்னாள் கிரிக்கெட் வீரர் சித்து அதிக வாக்குகள் பெற்று 2ஆவது இடத்தில் உள்ளார்.

சித்துவை விட ராகுல் காந்திக்கு கூடுதலாக 33 சதவீத வாக்குகள் அதிகம் கிடைத்துள்ளன. 19 வயது முதல் 23 வயதுடைய இளம் பெண்களில் 90 சதவீதம் பேர் ராகுல்காந்திதான் தங்களை வசீகரித்தவர் என்று கூறியுள்ளனர்.

இவர்களுக்கு அடுத்தபடியாக இளைய தலைமுறை அரசியல்வாதிகளான ஜோதிர் ஆதித்யா சிந்தியா, சச்சின் பைலட், காஷ்மீர் முதல்வர் உமர்அப்துல்லா ஆகியோர் தங்கள் தோற்றத்தின் மூலம் மாணவர்கள் மத்தியில் பிரபலமாகியுள்ளனர்.

பெண் அரசியல்வாதிகளில் நடிகை ஹேமமாலினி மாணவர்களை கவர்ந்தவராக முதலிடத்தில் உள்ளார். பிரசாரத்தில் காஞ்சிபட்டு உடுத்தி ஜொலிக்கும் அவருக்கே எங்களது ஆதரவு என்று 47 சத்விதம் மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

காங்கிரஸ் தலைவர் சோனியாவுக்கு 31 சதவீத வாக்குகளும், சமாஜ்வாடி எம்.பியும் நடிகையுமான ஜெயப்பிரதாவுக்கு 10 சதவீதமும், ராஜஸ்தான் முன்னாள் முதல்வர் வசுந்தராராஜே சிந்தியாவுக்கு 7 சதவீதமும் வாக்குகள் கிடைத் துள்ளன.



தேர்தல் பிரசாரத்தில் கடுமையாக மோதிக் கொண்ட பிரதமர் மன்மோகன் சிங்கும் அத்வானியும் நேற்றுமுன்தினம் நடந்த விழாவில் நேருக்கு நேர் சந்தித்துக் கொண்டனர்.

முன்னாள் பிரதமர் ஜவஹர்லால் நேருவின் தந்தை மோதிலால் நேருவின் பிறந்த நாளை முன்னிட்டு நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடந்த விழாவில் இருவரும் சந்தித்து பரஸ்பரம் வணக்கமும் வாழ்த்தும் தெரிவித்துக் கொண்டனர். அனல் பறக்கும் பிரசாரம் ஒருபுறம் இருந்தாலும் இருவரும் நேரில் அரசியல் நாகரிகத்தைக் கடைபிடித்தமை அனைவரையும் கவர்ந்தது.

# ஈழத்தில் தமிழர் கொல்லப்பட்டமையை யாரும் மன்னிக்க - மறக்க மாட்டார்கள்

## இயக்குநர் சீமான் குமுறல்

திண்டுக்கல், மே 8

இலங்கையில் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டதை யாரும் மறக்கவும், மன்னிக் கவும் மாட்டார்கள் - என்று இயக்குர் சீமான் பேசினார்.

தமிழ் ஈழ ஆதரவு இயக்கத்தின் பொதுக் கூட்டம் திண்டுக்கல் மணிக்கூண்டு அருகே நடந்தது. அதில் பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். அமலும் அவர் தெரிவித்தவை வருமாறு -

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நடிகர் மட்டும்தான். இங்கு இருந்துதான் அவரை இயக்குகிறார்கள். தமிழகத்தில் எங்களை சந்திக்க சோனியா காந்தியால் முடியவில்லை. அதனால்தான் இங்கு பிரசாரத்திற்கு வரவில்லை.

ஈழத்தமிழருக்காக நம் தேசத்தில் இவ்வளவு பெரிய போராட்டம் நடந்து வருகிறது. இப்பிரச்சினைக்காக காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி எந்த வருத்தமும் இதுவரை தெரிவிக்கவில்லை. இலங்கையில் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டு கொண்டிருக்கின்றனர். இங்கு இறந்த வீட்டில் வந்து நீங்கள் வாக்குக் கேட்கிறீர்கள்.

தமிழகத்தில் காங்கிரஸ் கட்சி 40 தொகுதிகளில் ஒன்றில் கூட வெற்றி பெற முடியாது. நீங்கள் அமைதிப்படையை இலங்கைக்கு அனுப்பி வைத்து அப்பாவித் தமிழர்களை கொடுமைப்படுத்தி கொலை செய்ததைத் தமிழர்கள் மறக்கவும், மன்னிக்கவும் மாட்டார்கள்.

இந்தத் தேர்தலில் காங்கிரஸ் கட்சியினர் 2 ஆயிரம் கோடி ரூபா பணம் செலவு செய்ய இருக்கின்றனர். வாக்குக்குப் பணம் கொடுத்தால் வாங்கிக் கொள்ளுங்கள். அந்தப் பணம் உங்களுடையது. ஆனால் காங்கிரஸுக்கு வாக்குப் போடாதீர்கள். அ.தி.மு.கவிற்கு வாக்குப் போடுங்கள். பணமா? தமிழ் இனமா என்பதுதான் இந்தத் தேர்தல்.

நமக்கு முதல் எதிரி சிங்களவர்கள். 2 ஆவது எதிரி காங்கிரஸ் கட்சியினர். அவர்கள் ஆட்சி அதிகாரத்தைப் பறிக்க வேண்டிய வாய்ப்பு உங்களுக்குக் கிடைத்திருக்கிறது. எனவே, இந்த முறை தேர்தலில் 90 முதல் 95 சதவீதம் வரை வாக்குப் பதிவாக வேண்டும். அவை அ.தி.மு.கவிற்கு சேரவேண்டும்.

நம் ரத்த சொந்தங்களுக்கு அ.தி.மு.க. கட்சி பொதுச்செயலாளர் ஜெயலலிதா தமிழ் ஈழம் அமைத்துத் தருவார். அதற்கு நாம் இந்த தேர்தலுக்குப் பின் அவருக்கு மின்னஞ்சல் மற்றும் பக்ஸ் மூலம் நன்றி தெரிவிக்க வேண்டும் - என்றார்.

# 10இல் சோனியா சென்னை வருவார்?



சென்னை, மே 8

தமிழகம், புதுவையில் தேர்தல் பிரசாரத்துக்காக காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி வரும் ஞாயிற்றுக்கிழமை சென்னை வருவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதையடுத்து சென்னை தீவுத்திடலில் அமைக்கப்பட்டுள்ள பிரம்மாண்ட பொதுக்கூட்ட மேடை அகற்றப்படவில்லை. தீவுத்திடல் பகுதி முழுவதும் பொலிஸாரின் தீவிர பாதுகாப்பு வலயத்துக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

சென்னை மற்றும் புதுச்சேரியில் சோனியாவின் பிரசார நிகழ்ச்சிகள் அனைத்தும் திடீரென புதன்கிழமை ரத்து செய்யப்பட்டன.

இதையடுத்து, கேரளம், ஆந்திரம், கர்நாடகம் மற்றும் வட மாநிலங்களில் இருந்து வந்த காங்கிரஸ் தலைவர்கள் பலர் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

இந்த நிலையில், மக்களவைக்கான 5ஆவது இறுதிக் கட்டத் தேர்தல் பிரசாரம் 11ஆம் திகதி திங்கட்கிழமையுடன் நிறைவடைகிறது. இந்த நிலையில், காங்கிரஸ் - தி.மு.க. கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து பிரசாரம் செய்ய சோனியாவின் சென்னை வருகையை கட்சியினர் மிகுந்த ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர்.

எனவே, சென்னைக்கு சோனியா காந்தி 9 அல்லது 10ஆம் திகதி வருவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதையடுத்து, தீவுத்திடலில் அமைக்கப்பட்டுள்ள குண்டு துளைக்காத மேடை மற்றும் பொதுக்கூட்ட ஏற்பாடுகள் அகற்றப்படவில்லை. ஆயுதம் தாங்கிய பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

தீவுத் திடலைச் சுற்றி, இரவு ரோந்து செல்லவும் பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

# அமெ. விமான நிலையத்தில் மம்முட்டி இரண்டு மணித்தியாலம் சிறைவைப்பு

## தீவிரவாதி என நினைத்து விசாரணை

திருவனந்தபுரம், மே 8

தீவிரவாதி என நினைத்து அமெரிக்க விமான நிலையத்தில் நடிகர் மம்முட்டி 2 மணிநேரம் சிறைவைக்கப்பட்டார்.

மம்முட்டியின் நெருங்கிய நண்பர் ஸ்டேன்லி அமெரிக்காவில் தங்கியுள்ளார். இவர் நியூயோர்க் நகர கவுன்ஸில் தேர்தலில் போட்டியிடுகிறார். தனது நண்பருக்குத் தேர்தல் பிரசாரம் செய்வதற்காக மம்மூட்டி சென்னையில் இருந்து விமானம் மூலம் கடந்த 29ல் நியூயோர்க் சென்றார்.

ஜோன். எவ். கெனடி விமான நிலையத்தில் மம்மூட்டி இறங்கியதும் அவரது கடவுச்சீட்டு மற்றும் ஆவணங்களை பாதுகாப்பு அதிகாரிகள் பரிசோதித்தனர். இதையடுத்து திடீரென மம்முட்டியை அதிகாரிகள் பிடித்துச் சென்று தனி அறையில் அமரவைத்தனர். அவரிடம் பாதுகாப்பு துறையினர் விசாரணை நடத்தினர்.

தான் இந்தியாவில் பிரபல நடிகர் என்றும் தனது நண்பரின் தேர்தல் பிரசாரத்துக்காக வந்திருக்கிறார் என்றும் மம்முட்டி கூறினார். ஆனால் விமான நிலைய அதிகாரிகள் அதனை நம்பவில்லை.

இதையடுத்து, வெளியுறவுத்துறை இணை அமைச்சர் அகமது மற்றும் நியூயோர்க்கில் உள்ள இந்தியத் தூதரக அதிகாரிகளை நடிகர் மண் முட்டி தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார். இதையடுத்து தூதரக அதிகாரிகள் நியூயோர்க் விமான நிலையத்துக்கு விரைந்து சென்றனர்.



மம்முட்டியின் கடவுச்சீட்டில் அவரது முழு பெயர் முகமதுகுட்டி இஸ்மாயில் பனிபரம்பல் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. முகமது இஸ்மாயில் என்ற பெயரில் யார் வந்தாலும் அவரை பிடித்து விசாரிக்க வேண்டும் என்று அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து அரசுகள், விமான நிலைய பாதுகாப்பு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளது. இதனால் மம்முட்டியை தீவிரவாதி என நினைத்து அதிகாரிகள் படித்து விசாரித்துள்ளனர். இந்தியத் தூதரக அதிகாரிகள் பேச்சு நடத் திய பின் 2 மணிநேரம் கழித்து மம்முட்டியை விமான நிலைய அதிகாரிகள் விடுவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



நேற்று 07.05.2009 ஓய்வுபெற்ற

**திரு.ஆசைப்பிள்ளை பரமானந்தசிவம்**

கொழும்பு வடக்கு இ.போ.ச, மட்டக்குளி சாலையில் சேவையில் இணைந்து கொண்ட இவர் வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் சகல சாலைகளிலும் சாலைப் பரிசோதகராகக் கடமை புரிந்துள்ளார். தற்போது காரைநகர் சாலையில் சாலை உதவி முகாமையாளராக (செயலாற்று) கடமை புரியும் இவர் சபையில் 36 வருடகால சேவையின் பின் நேற்று (07.05.2009) வியாழக்கிழமையுடன் ஓய்வுபெற்றார். இவர் என்றும் நலமுடன் வாழ வாழ்த்துகின்றோம்.

வட்டு. மேற்கு, வட்டுக்கோட்டை. (84793) நண்பர்கள்.

# சேவைநலன் பாராட்டு



**திரு.மாரிமுத்து பரஞ்சோதி**

கொற்றாவத்தை, கரகத்தாம்புலம், பொலிகண்டியைச் சேர்ந்த திரு.மாரிமுத்து பரஞ்சோதி அவர்கள் தனது பள்ளிப்பருவத்தை திருகோணமலை சென்சேர்வியர் பாடசாலையில் ஆரம்பித்து 1966ஆம் ஆண்டு G.C.E (O/L) பரீட்சையில் சித்தியடைந்து 1971ஆம் ஆண்டு கொழும்பு மீதோட்டமுல்லை இ.போ.ச சாலையில் காப்பாளராக முதல் நியமனம் பெற்று கடமை செய்து பின் 1974ஆம் ஆண்டு திருகோணமலை இ.போ.ச சாலைக்கு இடமாற்றம் பெற்று மீண்டும் 1979ஆம் ஆண்டு பருத்தித்துறைசாலைக்கு இடமாற்றம் பெற்று 1998ஆம் ஆண்டு சாலைப் பரிசோதகராக பதவி உயர்வு பெற்று சேவை செய்தும் 2003ஆம் ஆண்டு மீண்டும் தரம் VIஇல் சிரேஷ்ட சாலைப் பரிசோதகராகப் பதவி உயர்வு பெற்று சாலையிலும், தொழிலாளர் மனதிலும் அதி உன்னத இடத்தைப் பெற்று 08.05.2009இல் தனது அறுபதாவது அகவையில் சேவையைப் பூர்த்தி செய்து சேவையிலிருந்து ஓய்வு பெறுகின்றார். இவர் மென்மேலும் சிறப்புற நெஞ்சார வாழ்த்துகிறோம்.

மாணிக்கர் மதியழகன் (ஆசிரியர்) வ/விபு.கல்லூரி)
மதியழகன் அனுஜா
மதியழகன் மேனுஜா
மதியழகன் விந்திகா

இல 141/1. 'வித்தகம்'
பூந்தோட்டம்,
வவுனியா.

(84967)

## UNIVERSITY OF JAFFNA, SRILANKA

MEDIA RESOURCE AND TRAINING CENTRE (MRTC) FACULTY OF ARTS
POST OF ADMINISTRATIVE AND FINANCIAL ASSISTANT (ON CONTRACT)

The media Resource and Training Centre is a joint venture of the University of Jaffna and the Institute of Further Education (FOJO), Sweden.

Applications are invited from suitable candidates for the post of Administrative and Financial Assistant (On Contract) in the Media Resource and Training Centre, University of Jaffna upto 29th May 2009

Qualifications:

i. A Degree from a recognized University in Commerce of Management Studies
ii. Should have good secretarial and inter personal skills
iii. Should have Computer Skills in MS Office, particularly spread sheets
iv. Should have good written and spoken English
v. Possesses minimum of one year experience in Administrative / Financial Managnment

Note:

1. Preference will be given to those who have postgraduate qualification in Management and have experience at senior managerial level at recognized Educational / Serivices organization
2. Administrative and financial Assistant will assist the Director of MRTC in all matters relating to financial and Office administration

Salary : Negotiable
Selection by interview
General Conditions:

This is a full- time assignment and intially it is for a period of one year from the date of commencement of the assignment. However, the assignment is renewable if the services rendered and work performance during the tenure of assignment is satisfactory.

The appointee will become a contributor to the Employees provident Fund (EPF) Media Resources and Training Centre will contribute the EPF and the Employees Trust fund.

Applications for the posts shall be sent to the senior Assistant Registrar / Academic Establishments. Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar/ Academic Establishments, University of Jaffna, Sri - Lanka, either in person or by post, on a payment of Rs.100/= per form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/ Postal Order drawn in favour of the Bursar, University of Jaffna together with a self - addressed stamped envelope of 23 X 10c.m in size.

Incomplete, illegible applications and applications received after the closing date will be rejected without intimation.

Registrar
2009.05.07

# சோதனை நடைபெறும் இடங்களில் பொதுமக்களுக்கு என்ன நடக்கிறது என்பதை உறுதியாகக் கூறமுடியாது

## ஐ.நா.வதிவிடப் பேச்சாளர் கோடன் வைஸ் தெரிவிப்பு

கொழும்பு, மே 8

சோதனை நடைபெறும் இடங்களில் ஐ.நா. பணியாளர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அனுமதியே வழங்கப்படுவதால் அங்கே மக்களுக்கு என்ன நடக்கின்றது என்பது குறித்து உறுதியாகக் கூறமுடியாது என இலங்கைக்கான ஐ.நா. வதிவிடப் பேச்சாளரான கோடன் வைஸ் தெரிவிக்கின்றார்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வரும் மக்கள் கடும் சோதனைக்கு உள்ளாக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டு வரும் குற்றச்சாட்டுக்கள் குறித்து கேட்கப்பட்ட போதே இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

அநேகமானோர் எந்தவித சிக்கல்களும் இன்றியே சோதனைச் சாவடிகளைக் கடந்து வருகின்றார்கள் .சிலர் தாம் விடுதலைப் புலிகள் என ஒப்புக் கொள்கின்றார்கள் .இன்னும் சிலர் விடுதலைப் புலிகள் என அடையாளம் காணப்பட்டுள்ளார்கள்.அவர்கள் மக்களிடமிருந்து பரிக்கப்பட்டு சிறைச்சாலைகளுக்கு அனுப்பப்படுவதாகவே நாம் அறிகின்றோம்.

என இது தொடர்பாக தெரிவித்துள்ள அவரிடம் பெண்கள் பாலியல் ரீதியாக துன்புறுத்தல்களுக்கு உள்ளாகுவதாக வெளியாகியுள்ள தகவல்கள் குறித்துக் கேட்ட போது,

"இதுபோன்ற குற்றச்சாட்டுக்கள் குறித்து நாம் அறிந்திருக்கின்றோம்.அதற்கு மேல் அது பற்றி எமக்கு எதுவும்தெரியாது .வவுனியா முகாமில் ஏற்கத்தக்க நிலைக்கும் குறைவான எண்ணிக்கையினரே அங்குள்ளனர்.மெனிக் பார்ம் - 02 இல் பெண்கள் குளிக்கும் இடங்களில் 30 பெண்களை நியமிக்கப் போவதாக அரசாங்கம் கூறியுள்ளது.இப்படிச் செய்யும் போது இதனை ஒப்பீட்டளவில் தவிர்க்க முடியும்.

இதனைத் தவிர பாலியல் குற்றச்சாட்டுக்கள் குறித்து புகார் செய்வதற்கு ஒரு புகார் மையத்தை அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும் .அது இராணுவ கட்டுப்பாட்டிற்கு அப்பால்பட்டதாக இருக்க வேண்டும் என அரசாங்கத்திற்கு நாம் யோசனை முன் வைத்துள்ளோம். இதன் மூலமே எவ்வித அச்சமுமின்றி பாதிக்கப்பட்டவர்கள் தமது புகார்களை தெரிவிக்க முடியும் .அரசும் இப்படியான நடைமுறையை அமுல்படுத்த முயற்சிப்பதாக நாம் அறிகின்றோம் .அதே நேரத்தில் இவை எல்லாம் குற்றச்சாட்டுக்கள் தான்.

இம் முகாம்களில் 2 லட்சம் பேர் வரை இருக்கின்றார்கள.இது இலங்கையிலுள்ள நடுத்தர நகரமொன்றின் மக்கள் தொகை .எனவே இது போன்ற நகரத்தில் நடக்கும் குற்றச்சமபவங்கள் இங்கும் நடக்கலாம் என நாம் எதிர்பார்க்கலாம்.நிச்சயமாக பாலியல் புகார்ளை நாம் நியாயபப்டுத்தவில்லை.அதே நேரத்தில் மிகப் பெரிய அளவில் பாலியல் துஷ்பிரயோகம் நடைபெற்றதாக எமக்கு ஆதாரங்களும் இல்லை. என இதற்கு பதிலளித்தார் இலங்கைக்கான ஐ.நா.வின் அலுவலக வதிவிடப் பேச்சாளர் கோடன் வைஸ் .

(50)

# பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பித்த மாணவரின் 59 பேரின் வதிவிடத்தை உறுதிப்படுத்தல்

யாழ்ப்பாணம், மே 8

பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பித்த மாணவர்கள் சிலரின் வதிவிடத்தை உறுதிப்படுத்த வேண்டியுள்ளதால் வாக்காளர் இடாப்பின் 4 வருடங்களுக்கான பிரதிகள் (2004 - 2007) பின்வரும் 59 மாணவர்களுக்கும் 15 ஆம் திகதிக்கு முன்னர் விநியோகிக்கும்படி தேர்தல்கள் ஆணையாளர் ஊடாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

குறிப்பிட்ட 59 மாணவர்களையும எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் யாழ்.செயலகத்தில் உள்ள யாழ் மாவட்ட தேர்தல்கள் அலு வலகத்தில் தொடர்பு கொள்ளுமாறு உதவித்தேர்தல்கள் ஆணையாளர் பொ.குகநாதன் கேட்டுள்ளார்.

மாணவர்களின் விவரம் வருமாறு:-

அன்ரன் மரியநாயகம் பிராங்கிளின் - அத்தியடி,புதுவீதி,யாழ்ப்பாணம், ஆரணி பிரபாகரன்- சிவன்வீதி, உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய், அருள் செல்வரத்தினம் மேரி கலிஸ்ரா- மத்தியூஸ் வீதி,யாழ்ப் பாணம், அருமைச்சந்திரன் மோகன்ராஜ்- பண்டிக்கந்தன்,கெருடாவில் தொண்டமனாறு, அருணாசலம் ஸ்ரீவ வேதவித்தியாசாகரர்- குமாரசாமி வீதி,கந்தர் மடம், யாழ்ப்பாணம், பாலசுப்பிரமணியம் கார்த்தீபன்- அனிஞ்சில்காடு,பொலிகண்டி, வல்வெட்டித்துறை, சந்திரசேகரன் கபில் ராஜ்- ஆனந்த வீதி, மானிப்பாய் ,யாழ்ப் பாணம், டசிகா தேவராஜா - சம்பியன் லேன், கொக்குவில் கிழக்கு கொக்குவில்,யாழ்ப் பாணம், ஞானசீலன் தர்சிகா- மருதடி,வீதி, யாழ்ப்பாணம், இந்திரநாதன் ஆதவன்- அருளம் பலம் ஒழுங்கை,பருத்தித்துறை வீதி,நல்லூர் வடக்கு யாழ்ப்பாணம், ஜஸ்மின் சர்மிலி ஜேசுதாசன்- சென்றீற்றா கோவில், இளவாலை யாழ்ப்பாணம், ஜோசப் ஜோசப்பின் தர்சினி - முருகமூர்த்தி கோவிலடி உடுவில் தெற்கு சுன்னாகம்,கலையரசி தர்மலிங்கம்- பாலாவி வடக்கு கொடிகாமம், கந்தசாமி விஜிகரன்- உரும்பிராய் தெற்கு யோகபுரம் உரும்பிராய், யாழ்ப்பாணம், கிருஸ்ண பிள்ளை ஸ்ரீதரன் - நாகர்கோவில் தெற்கு நாகர் கோவில், லூயிஸ் ஜஸ்மின் லக்ஸ்மலா- சென்யூட்லேன், இளவாலை, யாழ்ப்பாணம், மகேந்திரன் வாகீசன்- மனிப்பாய் வீதி யாழ்ப் பாணம், மதுரா நவரத்தினராஜா- சிறுப்பிட்டி, வடக்கு நீர்வேலி, மோகனதாசன் சஜீதா- தொல்புரம் மேற்கு வீராவத்தை, சுழிபுரம், நிரோஜினி கணேசமூர்த்தி- டச் றோட் உடுவில் மேற்கு சுன்னாகம், பாக்கியநாதன் யூலின் அனிற்றா - சென்ஜேம்ஸ் லேன் இளவாலை, யாழ்ப்பாணம், பசுபதி சுதேஸ்- நீர்வேலி வடக்கு நீர்வேலி, யாழ்ப்பாணம், பிரியதர்சினி மரி யதாஸ்- குளமங்கால், மல்லாகம், பொன்னுத்துரை யாழினி- கத்தாப்படி லேன் நுணாவில் மத்தி சாவகச்சேரி, புஸ்பராஜா கார்த்திகா- ஐயனார் கோவிலடி, கொக்குவில் மேற்கு கொக்கு வில், புவிதா விஜயகாந்தி- மாதகல் யாழ்ப்பாணம், இராஜமாணிக்கம் இராஜேந்திரன்- சிவன் வடக்கு, யாழ்ப்பாணம், இராஜதுரை ரமேஸ்- பாடசாலை ஒழுங்கை, அச்சுவேலி தெற்கு, யாழ்ப்பாணம், இராமநாதன் வித்யா- ஆடியபாதம் வீதி, கொக்குவில் மேற்கு கொக்குவில், ரமணி பொன்னையா- புலவர் வளவு, இமையாணன் மேற்கு உடுப்பிட்டி, இராசேந்திரன் செல்வக்குமார்- கற்பகப்பிள்ளையார் கோவிலடி உடுவில் கிழக்கு, உடுவில் சுன்னாகம், இரத்தினம் நிருபகரன்- சூராவத்தை வடக்கு, சுன்னாகம், ரத்தினம்வேல் சிவா- கெருடாவில் தெற்கு தொண்டமனாறு, சதாநேசன் இருதயயூலி- பருத்தித்துறை வீதி நெல்லியடி கரவெட்டி, செல்வ ராஜா பாமினி- கோவில் புரம் தெல்லிப்பழை கிழக்கு, யாழ்ப்பாணம், சிங்கராஜா அஜந்தன்- தொல்புரம் கிழக்கு, சுழிபுரம், சிதம்பரநாதன் செந்துரன்-டச்சு வீதி, தொல்புரம் மேற்கு, சுழிபுரம், சிவகௌமினி சிவநேஸ்வரம் - சங்கரத்தை வட்டுக்கோட்டை, சிவாஜினி சிவலிங்கம்- சுன்னாகம் மேற்கு, சுன்னாகம், சிவகடாட்சம் ஸ்ரீபிரதாப்- நாவலர் வீதி, யாழ்ப்பாணம், சிவகுமார் சிவனேஸ்வரன்- மயிலியதனை தொண்டமானாறு, சிவபாதம் சுவர்னன்- பலவத்தை பொலிகண்டி வல்வெட்டித்துறை, சிவபாதசுந்தரம் மீராஜினி கே.கே.எஸ் வீதி, தலையாழி, யாழ்ப்பாணம், தேவராஜா தவருபன்- லூவ் லேன் உடுவில், தேவரஞ்சன் ஜொய்ஸ் வினோதினி- சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலி, தில்லை திருச்சிற்றம்பலம் - பிறவுண் வீதி, யாழ்ப்பாணம், தில்லையம்பலம் கஜேந்திரகுமார்- ஆனைக்கோட்டை மேற்கு, தோமஸ் அமலதாசன் லூர்ஜினி-விபுலானந்தர் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம், துரைராஜா பிரசாந்தன், வாதரவத்தை, புத்தூர், துரைசிங்கம் ரேணுகா- கற்பகப் பிள்ளையார் கோயிலடி, சுன்னாகம், வல்லிபுரம் உஷாந்தன்- கம்பர்மலை,வல்வெட்டித்துறை, விஜயராசா விஜிதரன்- வல்வெட்டித்துறை, யோகராஜா அமிர்தராஸ்- சாவகச்சேரி, அருளானந்தம் கார்த்திகா - வவுனியா, சாள்ஸ் விஜயரெத்தினம் ஜெனிஸ்- மொரட்டுவ, கணேசலிங்கம் யோகேஸ்வரன் -வவுனியா, செல்லத்துரை யசோதரன் - வவுனியா, தேவராசா தயாபரன் -மிருசுவில், விஜிதா சிவப்பிரகாசம் - வவுனியா.

(203)

# மரண அறிவித்தல்

## அமரர் கந்தையா முத்துக்குமாரலிங்கம் (முத்து)



சித்திரமேழி, இளவாலையைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா முத்துக்குமாரலிங்கம் (ஆதம்ஜி லுக்மன்ஜி அன் சன்ஸ் வியாபார முகாமையாளர்) 06.05.2009 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - தவீகம் தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற வல்லிபுரம் - குணபூரணம் தம்பதியரின் மருமகனும் சரோஜினி தேவியின் அன்புக் கணவரும் மயூரதன், ஐங்கரன், தாரணி ஆகியோரின் பாசமிகு தந்தையும் சண்முகலிங்கம், மகேந்திரலிங்கம், காலஞ்சென்ற கணேசலிங்கம் மற்றும் சுதிராமணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் தன லட்சுமி, பாலசரஸ்வதி, Dr.சண்முகராசா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (10.05.2009) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணியளவில் கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் நடைபெற்று, பூதவுடல் பி.ப. 2 மணியளவில் கல்கிசை பொதுமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொழும்பு - 2370406, 7429845, 0777 341998

தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆப்கானும் பாகிஸ்தானும் இணைந்து அல் - குவைதாவுக்கு எதிராக நடவடிக்கை

## அமெரிக்க அதிபர் ஒபாமா வரவேற்பு

வாஷிங்ரன், மே 8

''அல்-குவைதாவுக்கு எதிரான போராட்டத்தை ஆப்கானும், பாகிஸ்தானும் கூட்டாக மேற்கொள்ள உடன்பாடு தெரிவித்துள்ளன.இது பெரிதும் வரவேற்கத்தக்க ஓர் உடன்பாடு ஆகும்'' என அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா வரவேற்பும், மகிழ்ச்சியும் தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி அஹ்மத் கர்சாய், பாகிஸ்தான் ஜனாதிபதி அஷிப் அலி சர்தாரி, அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா ஆகியோருக்கிடையிலான முத்தரப்பு மாநாடு வாஷிங்ரனில் புதன்கிழமை ஆரம்பமாகியது. முதல் நாள் அமர்வின் இறுதியில் பராக்ஒபாமா பத்திரிகையாளர் மாநாடொன்றில் பேசினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், ''இன்றைய பேச்சுகளில் இந்த இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளது. இது ஒரு காத்திரமான முடிவு. அல்-குவைதாவையும், அதன் தோழமை பயங்கரவாத கூட்டமைப்பையும் தோற்கடிப்பதே இக்கூட்டுப் போராட்டத்தின் தலையாய நோக்கமாகும்'' என்றார்.

''இவ்விரு நாடுகளிலும் சிவிலியன்கள் பாதிப்பு பெரிதும் தவிர்க்கப்படும். அதே வேளை, சிவிலியன்களுக்கான மேம்பாட்டுத் திட்டங்களுக்கும் உதவிகள் அளிக்கப்படும். தீவிரவாதிகளால் தத்தம் நாட்டின் இறையாண்மை, ஆட்புல ஒருமைப்பாடு, கட்டுக்கோப்பு, பாதுகாப்பு ஆகியவற்றிற்கு ஏற்பட்டுள்ள ஆபத்தை இவ்விரு தரப்பினரும் நன்கு உணர்கின்றனர்'' என்றும் ஒபாமா சுட்டிக்காட்டினார்.

''பாகிஸ்தான் மக்களோடும், ஆப்கானிஸ்தான் மக்களோடும் அமெரிக்கா இணைந்து நிற்கும். இப்பிராந்திய சிவிலியன்களின் வாழ்க்கைத் தர உயர்வுக்கும், இராணுவ அபிவிருத்திக்கும் ஒருங்கிணைந்த திட்டங்களையும் அமெரிக்கா நடைமுறைப் படுத் தும். இவ்விரு நாடுகளின் மக்களது வாழ்வாதாரங்கள் துரிதமாக பெருகுமானால் பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்டுவிடும்'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

''இந்த உயிரிழப்புகள் குறித்து நான் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்பாவிகளின் உயிரிழப்புகளைத் தவிர்ப்பதற்கு அமெரிக்கா மிக விழிப்புடனும், விவேகத்துடனும் செயற்படும்'' என அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் ஹிலாரி கிளின்ரன் தெரிவித்துள்ளார்.

மாநாட்டுக்கு முன்னர் பாகிஸ்தான் ஜனாதிபதி அஷிப் அலி சர்தாரி, அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் ஹிலாரி கிளின்ரனுடன் பேச்சு நடத்தினார். இதன் பின்னர் பத்திரிகையாளர் மாநாடொன்றிலும் பேசினார். அப்போது பாகிஸ்தானின் நிலைப்பாட்டை அவர் விளக்கினார்.

# எமது அணு ஆயுதங்கள் குறித்து அமெ. கவலைப்படத் தேவையில்லை

## பாக். ஜனாதிபதி கூறுகிறார்

வாஷிங்ரன், மே 8

''எங்கள் அணு ஆயுதங்கள் பாதுகாப்பாக இருக்கின்றன. அவை குறித்து அமெரிக்கா கவலைப்படத் தேவையில்லை'' என பாகிஸ்தான் ஜனாதிபதி அஷிப் அலி சர்தாரி வாஷிங்டனில் செய்தியாளர்கள் மத்தியில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அமெரிக்காவில் முத்தரப்பு மாநாடு ஆரம்பமாகியுள்ளது. அமெரிக்கா, ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் ஆகிய 3 நாடுகளின் தலைவர்கள் இதில் பங்குபற்றியுள்ளார்கள். இதில் கலந்துகொண்டுள்ள பாகிஸ்தான் ஜனாதிபதி சர்தாரி அங்கு நிருபர்கள் மத்தியில் பேசினார்.

அவர் தம் உரையில், ''பாகிஸ்தான் அரசு என் கட்டுக்குள்தான் இருக்கிறது. இராணுவமும், உளவுத்துறையும் என் கட்டுப்பாட்டில்தான் இருக்கின்றன. தலிபான் தீவிரவாதிகள் ஒருபோதும் பாகிஸ்தானின் கட்டுப்பாட்டை கைப்பற்றிவிட முடியாது'' என்றார்.

''எங்கள் நாட்டின் அணு ஆயுதங்கள் பாதுகாப்பாக உள்ளன. அவற்றின் பாதுகாப்பு குறித்து அமெரிக்கா கவலைப்படத் தேவையில்லை. அணு ஆயுதங்களைப் பொறுத்தவரையில் எவரும் கவலை கொள்ளத் தேவையில்லை. அவை குறித்து கவலைப்படுவதற்கு எதுவுமில்லை'' என்றும் அவர் கூறினார்.

''எங்கள் அணு ஆயுதங்கள் பற்றி எந்த அளவுக்கு அமெரிக்காவுக்கு தெரிய வேண்டுமோ அந்த அளவுக்கான தகவல்கள் மட்டுமே அதற்கு எங்களால் கொடுக்கப்படும். பாகிஸ்தானில் இப்போதைக்கு இராணுவப் புரட்சி நடப்பதற்கு வாய்ப்பு கிடையாது. எப்போதெல்லாம் இராணுவப் புரட்சி நடந்துள்ளதோ அப்போதெல்லாம் அமெரிக்கா அதை ஆதரித்துள்ளது. இப்போதைக்கு இராணுவப் புரட்சியை ஆதரிக்கும் நிலையில் உலக நாடுகள் இல்லை'' என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

# இலட்சக்கணக்கான சவப்பெட்டிகளைத் தயாரித்து ஆஸ்திரிய நாட்டுத் தொழிலாளி கின்னஸ் சாதனை

வியன்னா, மே 8

ஆஸ்திரியாவைச் சேர்ந்த தச்சுத் தொழிலாளி வெப்பர், கடந்த 30 ஆண்டுகளில், 7 லட்சத்து 7 ஆயிரத்து 335 சவப்பெட்டிகளைத் தயாரித்து சாதனை படைத்துள்ளார். இவரது சாதனை கின்னஸ் சாதனைப் புத்தகத்திலும் இடம்பெற்று விட்டது.

1978 ஆம் ஆண்டு முதல் வெப்பர் சவப்பெட்டித் தயாரிப்புத் தொழிலில் ஈடுபட்டுவருகிறார். இவர் இதுவரை 7 இலட்சத்து 7 ஆயிரத்து 335 சவப்பெட்டிகளை செய்து கொடுத்துள்ளார்.

''நான் சவப்பெட்டிகளைத் தயாரித்து வருகிறேன். கடந்த 30 ஆண்டுகளில் கேட்டுக்கொள்ளப்பட்டதற்கிணங்க பெட்டிகளைச் செய்து கொடுத்துள்ளேன். மரண எண்ணிக்கை அதிகரித்திருக்குமானால், பெட்டிகளின் எண்ணிக்கையும் இன்னும் அதிகரித்திருக்கும்'' என இவர் கூறுகிறார்.

''உலகிலேயே இந்தளவு எண்ணிக்கையில் சவப்பெட்டிகளைத் தயாரித்துள்ள ஒரே நபர் வெப்பர்தான். இது ஒரு சாதனை. இவர் ஒரு சாதனையாளர்'' என இவர் கணிப்பீடு செய்யப்பட்டுள்ளார்.

# வன்னியில் கனரக ஆயுத பாவனை; சர்ச்சை குறித்து ரணில் விளக்கம்

வன்னியில் தாக்குதல் தவிர்ப்புப் பிரதேசத்தின் மீது கனரக ஆயுதங்கள் பாவிக்கப்படமாட்டாது என்ற அரசின் அறிவிப்பை தமது அனுமதியின்றி விமர்சிக்கும் அதிகாரம் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் யாருக்கும் வழங்கப்படவில்லை என அக் கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கின்றார்.

கடந்த செவ்வாய்க்கிழமை மாலை நடைபெற்ற ஐ.தே.கட்சியின் செயற்குழுக் கூட்டத்திலேயே கட்சித் தலைவர் இதனை அறிவித்தார் என கட்சியின் பொருளாளர் டி.எம். சுவாமிநாதன் தெரிவித்தார்.

தாக்குதல் தவிர்ப்புப் பிரதேசம் மீது கனரக ஆயுதப் பாவனையை நிறுத்துவது என்ற அரசின் அறிவிப்பை விமர்சித்தும், கனரக ஆயுதங்களைத் தொடர்ந்து பயன்படுத்தி புலிகளை முற்றாக அழித்தொழிக்க வேண்டும் எனக் கோரும் விதத்திலும் ஐ.தே.கட்சியின் எம்.பியான ரங்க பண்டார கருத்து வெளியிட்டார் என சில தினங்களுக்கு முன்னர் செய்திகள் வெளியாகியிருந்தன.

இதனை ஐ.தே.க. செயற்குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டி, இந்தக் கருத்து ஐ.தே. கட்சி தொடர்பாகத் தமிழர்கள் மனதில் பெரும் விசனத்தை ஏற்படுத்தியிருப்பதாகத் தாம் அங்கு கருத்து வெளியிட்டார் என டி.எம்.சுவாமிநாதன் சொன்னார்.

இவ்விடயத்தை ஒட்டிய தமது கரிசனை தொடர்பாகக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அங்கு கருத்து வெளியிட்டார்என்றும் இந்த விவகாரத்தில் தமது முன் அனுமதியின்றி கட்சி சார்பில் கருத்துக்களைப் பிரதிபலிக்கும் அதிகாரம் ரங்க பண்டார எம்.பிக்கோ அல்லது வேறு யாருக்குமோ வழங்கப்படவில்லை என்று அவர் அங்கு குறிப்பிட்டார் எனவும் சுவாமிநாதன் மேலும் தெரிவித்தார்.

மேற்படி தாக்குதல் தவிர்ப்புப் பிரதேசம் மீது தொடர்ந்து கனரக ஆயுதங்கள் கொண்டு தாக்குதல் நடத்தப்பட வேண்டும் என்ற சாரப்படத் தாம் கருத்து ஏதும் வெளியிடவேயில்லை என செயற்குழுவுக்கு ரங்க பண்டார தெரிவித்துள்ளார் என்றும் சுவாமிநாதன் மேலும் குறிப்பிட்டார்.

## புலமைப்பரிசில் வினாப்பத்திரங்கள் 4 நிலையங்களில் விநியோகம்

நாளை நடைபெறவிருக்கும் மாகாண மட்ட புலமைப்பரிசில் பயிற்சி பரீட்சையில் தோற்றவுள்ள தென்மராட்சி மாணவர்களுக்கான வினாப்பத்திரங்கள்ள வலயப் பணிமனை, கைதடி முத்துக்குமாரசாமி ம.வி,வீரசிங்கம் ம.வி, வரணி ம.வி, ஆகிய மத்திய நிலையங்களில் பெற்றுக்கொள்ளலாம் என வலய கல்விப்பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார். (1-207)

# தமிழ் மக்களுக்காகப் பேசும் எம்.பிக்கள் மீது புலி முத்திரை

## சபையில் ஜே.வி.பி. விசனம்

கொழும்பு, மே 8

தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாகப் பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது அரசு புலி முத்திரை குத்துகிறது என்று ஜே.வி.பியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

நாடாளுமன்றில் ஜே.வி.பியின் எம்.பியான ஆர். சந்திரசேகரன் சிறப்புரிமை மீறல் பிரச்சினை ஒன்றைக் கிளப்பி உரையாற்றியமையைத் தொடர்ந்தே அவர் இவ்வாறு கூறினார். அநுரகுமார திஸாநாயக்கா மேலும் கூறியவை வருமாறு:-

சந்திரசேகரன் எம்.பி. 5 ஆம் திகதி நாடாளுமன்றில் ஆற்றிய உரையில் சிறிதளவை எடுத்து, அதைத் திரிவுபடுத்தி, அமைச்சர்களின் கருத்துக்களையும் பெற்று அரச தொலைக்காட்சிகள் ஒளிபரப்பின.

நாம் ஊடகங்கள் தொடர்பாக பல சிறப்புரிமை மீறல் பிரச்சினைகளைமுன் வைத்த போதும் அவை தொடர்பாக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று எமக்குத் தெரியாது.

தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பாக தமிழ் மக்களால் பேச முடியாதா? அமைச்சர்கள் தொடர்பாக யார் பேசினாலும் அவர்கள் மீது புலி முத்திரை குத்தப்படுகின்றது.

அத்தோடு அரச ஊடகங்களில் ஜே.வி.பிக்கு இடமளிக்கப்படுவதில்லை. மாதத்தில் 5 நிமிடங்களாவது அரச ஊடகங்களில் எமக்கு ஒதுக்கித் தர முடியுமா? அந்த நேரத்தைப் பயன்படுத்தி நாம் இந்த நாட்டு மக்களுக்கு உண்மைகளைச் சொல்வோம் - என்றார். (சி)

## ஐ.தே.கவின் எம்.பி.சுட்டிக்காட்டுகிறார்:

# மக்கள் ஒவ்வொருவரது தலையிலும் 2 லட்சத்து 16 ஆயிரம் ரூபா கடன்!

## சர்வதேச நாடுகளுடன் அரசு சண்டித்தனம்

இலங்கை பெற்றிருக்கும் உள்நாட்டு மற்றும் சர்வதேச கடன்கள் காரணமாக இலங்கை மக்கள் ஒவ்வொருவ ரும் 2 லட்சத்து 16 ஆயிரம் ரூபாவுக்குக் கடனாளிகளாகியுள்ளனர் என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்திடம் கடன்கேட்டு அந்நிதியத்துக்கு அனுப்பி வைத்திருக்கும் கடிதத்தைப் பகிரங்கப்படுத்துமாறும் அக்கட்சி அரசிடம் வேண்டு கோள்விடுத்துள்ளது.

நேற்று நாடாளுமன்றில் வாழ்க்கைச் செலவின அதிகரிப்புத் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையை சமர்ப்பித்து அது மீதான விவாதத்தைத் தொடக்கிவைத்து உரையாற்றிய ஐ.தே.கட்சியின் உறுப்பினர் ரவி கருணாநாயக்கவே இவ்வாறு கூறினார். அவர் மேலும் கூறியவை வருமாறு:-

அரசின் பிழையான பொருளாதாரக் கொள்கை காரணமாக நாட்டின் பொருளாதாரம் மிகவும் வீழ்ச்சியடைந்துள்ளது. அதிக எண்ணிக்கையிலான மக்கள் தொழில் வாய்ப்பை இழந்துள்ளனர். வறுமை தலைதூக்கியுள்ளது.

கல்வி அறிவே இல்லாதவர்கள் இந்த அரசில் உள்ளனர். அவர்கள்சும்மாபேசிப்பேசியே இந்த நாட்டை அழித்துவிட்டனர்.

கடந்த நான்கரை வருடங்களில் இந்த அரசு 4 லட்சத்து 52 ஆயிரம் கோடி ரூபாவைக் கடனுதவியாகப் பெற்றுள்ளது. இந்த நிலைமை காரணமாக இந்நாட்டு மக்களே கடனாளிகளாகியுள்ளனர். ஒவ்வொருவரும் 2 லட்சத்து 16 ஆயிரம் ரூபாவுக்குக் கடனாளிகளாகியுள்ளனர்.

அப்படி இருந்தும் இந்த அரசு சர்வதேச நாடுகளுடன் சண்டித்தனம் காட்டுகிறது. அனைத்து நாடுகளும் மஹிந்த சிந்தனையைக் கும்பிட வேண்டும் என்று அரசு விரும்புகிறது. இலங்கைக்குள் உலகமில்லை. உலகத்தில்தான் இலங்கை உண்டு. சர்வதேசத்துடன் சிநேகிதபூர்வ உறவை வளர்ப்பதே எமக்கு நல்லது.

நாட்டின் மீது அன்புகொண்டு நாம் இந்த அரசிடம் எதைச் சொன்னாலும் நாம் அரசுக்கு எதிராக சதித்திட்டத்தில் ஈடுபடுகிறோம் என்று அரசு சொல்கிறது.

யுத்தத்தால் மாத்திரம் இந்த நாட்டை நிர்வகிக்க [illegible] வேண்டும். அப்போதுதான் [illegible] கட்டியெழுப்ப முடியும் - என்றார். (அ-சி)

## மரண அறிவித்தல்

### செல்லத்துரை பாக்கியம்

இராசாவின்தோட்டம் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை பாக்கியம் நேற்று (07.05.2009) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாபதிப்பிள்ளை - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற செல்லத்துரையின் (முன்னாள் உரிமையாளர், செல்வன் கபே, கண்டி) பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - குஞ்சரம் ஆகியோரின் மருமகளும் சாந்தகுமாரி (கொழும்பு), சந்திரகுமார் (பிரான்ஸ்), சர்வேஸ்வரி, செல்வக்குமார் (கனடா), சிறீக்குமார் (ஜேர்மனி), காலஞ்சென்ற சிவகுமார்(பிரான்ஸ்), செந்தில்குமார்(பிரான்ஸ்), சூரியகுமாரி (ஹொலன்ட்) ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற அரியரட்ணம் மற்றும் கௌரி (பிரான்ஸ்), சிவகுமாரன் (வர்த்தகர், திருநெல்வேலி), லதாதேவி (கனடா), சகானா (ஜேர்மனி), நிர்மலா(பிரான்ஸ்), ஜெயகௌரி(பிரான்ஸ்), கனகராஜா (ஹொலன்ட்) ஆகியோரின் பாசமிகு மாமியும் வீரசிங்கம், காலஞ்சென்றவர்களான சிவஞான், சின்னத்துரை, இரத்தினம், இராசதுரை, தியாகராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும் முகுந்தன் (அவுஸ்திரேலியா), சஞ்சீவவிமலன் (அவுஸ்திரேலியா), தாட்சாயினி, கார்த்தியாயினி(பிரான்ஸ்), ராதிகா(பிரான்ஸ்), பிரபு (பிரான்ஸ்), பிரகாஷ்(பிரான்ஸ்), சிவப்பிரியா, ஜெகப்பிரியன் (லண்டன்), ஜெசிந்தன்,சாயிப்பிரியன்,கௌசிகன், துஷாந் (கனடா), நிஷாந் (கனடா), கெவின் (ஜேர்மனி), ஸ்ரீபன்(ஜேர்மனி), ஒலிபர் (ஜேர்மனி), நிவேதா (பிரான்ஸ்), கஸ்தூரி (பிரான்ஸ்), கபிலன்(பிரான்ஸ்), மயூரி (பிரான்ஸ்), சுஜானி (ஹொலன்ட்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் கர்ஷனின் (அவுஸ்திரேலியா) அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(08.05.2009) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

68/6, இராசாவின் தோட்டம் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
சு.சிவகுமாரன்.
(மருமகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் இனப்பிரச்சினைக்கு சமஷ்டித் தீர்வே ஒரே சிறந்த வழி!

## நோர்வே அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் சொல்கிறார்



கொழும்பு, மே 8

இலங்கை இனப்பிரச்சினைக்கு சமஷ்டித் தீர்வே ஒரேயொரு வழிமுறையாகவுள்ளது.

- இவ்வாறு நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

வடக்கு - கிழக்குப் பகுதியில் தமிழர்களின் சுயாட்சி என்பதற்கு சர்வதேச சமூகத்தின் பரந்துபட்ட ஆதரவு உள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

''அல் ஜசீரா'' தொலைக்காட்சிக்கு அளித்துள்ள பேட்டியில் இதனைத் தெரிவித்துள்ள எரிக் சொல்ஹெய்ம் வன்னியில் மோதல் நடைபெறும் பகுதிகளில் உள்ள நிலை மிகவும் பரிதாபகரமானதாகவும், அபாயகரமானதாகவும் உள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து மேலும் அவர் தெரிவித்துள்ளவை வருமாறு:-

வன்னியில் மோதல் நடைபெறும் பகுதிகளில் உள்ள மக்களின் நிலை மிகவும் பரிதாபகரமானதாகவும், மோசமானதாகவுமுள்ளது.

அப்பகுதியில் சர்வதேச ஊடகங்கள் இல்லாதமையாலும் வெளிநாட்டவர்கள் எவரும் அனுமதிக்கப்படாதமையாலும் மட்டுப்படுத்தப்பட்ட தகவல்களே உள்ளன. எதனையும் உறுதிப்படுத்த முடியாதுள்ளது. எனினும், அங்கு நிலைமை மிகவும் அபாயகரமானதாகவுள்ளது என்ற சரியான தகவல் எமக்குக் கிடைத்துள்ளது.

சிறுவர்களும், முதியவர்களும் போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஐக்கிய நாடுகளின் புள்ளி விவரங்கள் 6 ஆயிரம் முதல் 7 ஆயிரம் வரையிலான பொதுமக்கள் கொல்லப்பட்டனர் எனத் தெரிவிக்கின்றன.

### சமஷ்டி முறையிலான தேர்வுக்கு அனைவரது ஆதரவும் உண்டு

இலங்கை இனப்பிரச்சினைக்கு உரிய தீர்வு காண்பதாயின் அது சமஷ்டி முறையிலான அரசியல் தீர்வு மூலமே எட்ட முடியும்.

இதனைப் பெரும்பாலான தமிழர்கள் ஏற்றுக்கொண்டிருப்பார்கள். சிங்களவர்கள் மற்றும் முஸ்லிம்களும் இதற்கு இணங்குவார்கள். சர்வதேச சமூகத்தின் பரந்துபட்ட ஆதரவும் அதற்குக் கிடைத்திருக்கும். அனைவரும் அதற்கு ஆதரவளிப்பார்கள்.

இன்னும் இது சாத்தியமே. தமிழ் மக்களின் அபிலாஷைகளை ஏற்றுக் கொள்வதற்கான வழிமுறையாக இது அமையும். எனினும், ஐக்கிய இலங்கைக்குள் இது அமையவேண்டும். இது சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயமாகும்.

ஐக்கிய இலங்கைக்குள் தமிழர்களுக்கு சுயாட்சி வழங்கப்பட வேண்டும் என்ற விடயத்துக்கு சர்வதேச ஆதரவுள்ளது. எனினும், பிரிவினைக்கான ஆதரவு இல்லை. சர்வதேச ரீதியில் பிரிவினைக்கான ஆதரவு தற்போது இல்லை.

### தாம் எங்கு இருப்பது என்ற முடிவை அவர்களே செய்ய வேண்டும்

பாதுகாப்பு வலயத்தில் உள்ள மக்கள் தாம் அங்கு இருப்பதா அல்லது வெளியேறுவதா என்ற முடிவைத் தாமே எடுப்பதற்கான சுதந்திரத்தை விடுதலைப் புலிகள் வழங்க வேண்டும்.

மேலும் அவர்கள் அந்த மக்களை மனித கேடயங்களாகப் பயன்படுத்துவதற்கான சான்றுகளும் உள்ளன.

அரசு பாதுகாப்பு வலயத்தின் மீது கனரக ஆயுதத் தாக்குதல்களை மேற்கொள்ளக் கூடாது.

அப்பகுதிக்கு மக்களைச் செல்லுமாறு கூறிவிட்டு தாக்குதலை நடத்தக் கூடாது.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டிய கடப்பாடு இரு தரப்பினருக்கும் உள்ளது.

நோர்வே, ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா, ஜப்பான் ஆகிய அனைத்தும் அப்பாவிப் பொதுமக்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற ஒரு விடயம் குறித்தே முக்கிய கவனம் செலுத்துகின்றன. சர்வதேச மனிதாபிமான சட்டங்களைக் கடைப்பிடிக்க வேண்டும்.

முகாமில் உள்ள இடம்பெயர்ந்தவர்கள் பாதுகாக்கப்பட வேண்டும். எவரும் கொலை செய்யப்படக்கூடாது. காணாமற் போகக் கூடாது - என்றார். அமைச்சர் சொல்ஹெய்ம். (அ)

---

## சரண் அடைந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி மாளிகையில் நேற்றுக் காலை கொழும்பில் உள்ள இராஜதந்திரிகளுடனான விசேட சந்திப்பு நடைபெற்றது.

அங்கு ஜனாதிபதி மேலும் கூறிய முக்கிய கருத்துக்கள் வருமாறு:-

மூன்று தசாப்த காலங்களாக நாங்கள் பயங்கரவாதத்தினால் பாதிக்கப்பட்டுள்ளோம். அதனை நாம் தோற்கடித்து சமாதானத்தையும் பாதுகாப்பையும் வழங்கும் தறுவாயிலுள்ளோம். தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக இறுதியாகவே நாம் இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்திற் குள்ளானோம்.

புலிகளை பேச்சுகளில் ஈடுபடுத்த பல தடவைகள் முயற்சித்தோம். ஆனால் அவை அனைத்தும் தோல்வியடைந்தன.

விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்க முடியாது என நினைத்தோம். தற்போது எமது படையினர் 6 கிலோமீற்றர் பரப்புக்குள் அவர்களை முடக்கியுள்ளனர்.

### பாதுகாப்பு வலயத்தில் உள்ள மக்களின் நிலை குறித்து கவலைப் படுகிறேன்

எனது உத்தரவின் படி பொதுமக்களுக்கு எந்தவிதப் பாதிப்பும் இல்லாமல் விடுதலைப் புலிகளிடமிருந்து அவர்களைப் படையினர் மீட்டு வருகின்றனர். நான் இடம்பெயர்ந்த, பாதுகாப்பு வலயத்திலுள்ள மக்களின் நிலை குறித்துத்தான் கவலையடைகிறேன்.

நாம் இரண்டு தடவைகள் மனிதாபிமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக யுத்த நிறுத்தம் செய்தோம். ஆனால் விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்த காலப்பகுதியை தமது நலன்களுக்காகப் பயன்படுத்தினர்.

ஒரு லட்சத்து 80 ஆயிரம் மக்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்து வெளி வந்தமை இராணுவத்தின் மீது மேற்கொண்ட நம்பிக்கையை உறுதிப்படுத்துகிறது.

விடுதலைப் புலிகளுக்கு பயங்கரவாத மொழியே புரியும். அவர்களுக்கு இராணுவ நடவடிக்கை மூலம் பதில் சொல்வதுதான் சரியான முறை.

சர்வதேச சமூகம் உண்மை நிலைவரத்தை இத்தருணத்தில் அறிந்துகொள்வதே மிக முக்கியமான விடயம். சர்வதேச நாடுகளில் விடுதலைப்புலிகள் பல சர்வதேச வலையமைப் புகளை ஏற்படுத்தியுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் முன்னணி அமைப்புகளுக்கு எதிராக சர்வதேச சமூகம் நடவடிக்கை எடுக்கவேண்டும். அதேவேளை, விடுதலைப் புலிகள் பணயக் கைதிகளாக வைத்திருக்கும் பொதுமக்களை விடுவிக்க வேண்டும் என சர்வதேச நாடுகள் அழுத்தம் கொடுக்க வேண்டும்.

### பயங்கரவாதம் நீக்கப்பட்ட பின்னர் அரசியல் தீர்வு

பயங்கரவாதத்தை இராணுவ ரீதியாக ஒழித்துக்கட்டும் அதேவேளை, நாட்டில் இருந்து பயங்கரவாதம் முற்றாக நீக்கப்பட்ட சூழ்நிலையை எய்தியதும் அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகளால் தயாரிக்கப்பட்டுவரும் அரசியல் தீர்வுக்கான பிரேரணைகள் சமர்ப்பிக்கப்படும்.

கலந்தாலோசனை மூலம் அரசியல் தீர்வு ஒன்றை கொண்டு வருவதற்கான பலம் எங்களிடம் உண்டு என்று நான் நம்புகிறேன்.

எமது நாட்டு மக்கள் எல்லோரும் - எல்லா இனத்தவர்களும் - அச்சமின்றியும், அவநம்பிக்கை இன்றியும் ஒன்றுபட்ட, ஜனநாயக இலங்கையில் வாழ்வதற்கு வகை செய்ய வேண்டியது எனது பொறுப்பும் கடமையுமாகும்.

அண்மையில் தமிழ்க் கட்சிகளுடன் பேச்சுகளை மேற்கொண்டேன். ஆனால் கவலை அளிக்கும் விதத்தில் முக்கிய கட்சியொன்று கலந்துகொள்ளவில்லை. முதல் தடவை அழைப்பு விடுத்தவேளை வரமாட்டோம் என்று சொன்னார்கள். இரண்டாம் தடவை அழைப்பு விடுத்தபோது வருவோம் எனக் கூறி வரவில்லை - என்றார். (அ)

---

## முல்லைத்தீவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொறுப்பான ஜேக்கீஸ் டி மைஜோ மேற் கண்ட தகவலைத் தெரிவித்தார்.

இதே வேளை மத்திய பகுதியான முள்ளிவாய்க்காலுக்குச் சமீபமாக இப்போது கடும் சண்டை நடைபெறுவதால் அங்கு தங்கியுள்ளோர் பெரும் ஆபத்தான நிலையில் உள்ளனர்.

அங்குள்ள தற்போதைய நிலைமை குறித்து ஜேக்கீஸ் டி மைஜோ மேலும் தெரி வித்ததாவது:-

சிகிச்சை தேவைப்பட்ட 495 பேரை நேற்று பாதுகாப்பு வலயத்தில் இருந்து வெளியேற்றினோம் அங்கு இன்னமும் பெரும் எண்ணிக்கை யானவர்கள் சிகிச்சை பெறுவதற்காக வெளியேற காத்திருக்கிறார்கள்.

நோயாளர்கள், வைத்திய அதிகாரிகள் செஞ்சிலுவை சர்வதேச குழுப் பணியாளர்கள் தங்கியுள்ள மத்திய பகுதியான முள்ளி வாய்க் காலுக்குச் சமீபமாக கடும் சண்டை நடைபெறு கின்றது. அதனால் அங்குள்ள எல்லோரும் பெரும் அபாய நிலையில் உள்ளனர்.

அங்கு தங்கியுள்ள நோயாளர்கள் மற்றும் காயமடைந்தோரை வெளியேற்றும் நட வடிக்கை தொடர்ந்து இடம் பெறும் - என்றார்.

அரச படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் தொடர்ந்த கடும் சண்டை காரணமாக கடந்த 28 ஆம் திக திக் குப் பின்னர் கப்பல் முல்லைத்தீவுக்குச் செல்ல வில்லை என்பது தெரிந்ததே. அதன் கார ணமாக அங்கிருந்து நோயாளர் மற்றும் காயமடைந்தவர்களை அங்கிருந்து அப்புறப் படுத்த முடியாத நிலையும் தோன்றியது. உணவுப் பொருள்களையும் எடுத்துச் செல்ல முடியாத நிலை நீடித்தது.

மோதலில் சம்பந்தப்பட்ட இரு தரப்பினருடனும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு கலந்துரையாடியதன் பயனாக ஒரு வாரத்தின் பின்னர் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் வழித்துணையுடன் நேற்று கப்பல் முல்லைதீவுக்குச் சென்றது. (அ-1)

---

## கொழும்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டு பொலிஸ் நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் எனக் கூறப்படுகிறது.

படையினரும் பொலிஸாரும் இணைந்து கொச்சிக்கடை, மட்டக்குளி, கிராண்ட்பாஸ், கோட்டை, புறக்கோட்டை மற்றும் கொழும்பு நகரின் பல்வேறு பகுதிகளிலும் நேற்றுச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

விடுதலைப் புலிகள் ஊடுருவியுள்ளனர் எனக் கிடைத்த தகவல் ஒன்றை அடுத்தே தேடுதல் நடவடிக்கைகள் இடம்பெற்றன எனப் பொலி ஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட 22 இளைஞர்களும் அந்தந்தப் பகுதி பொலிஸ் நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

---

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சண்டையை தொடர்ந்து இந்தக் காவலரண் கைப்பற்றப்பட்டுள்ளது.

இன்னமும் 800 மீற்றர் தூரத்தைப் படையினர் கைப்பற்றினால் விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ள பொது மக்களை மீட்க முடியும் என்றும் படைத்தரப்பு தெரிவித்தது. முள்ளிவாய்க்கால் சுரங்கக் காவலரண் கைப்பற்றப்பட்ட பின்னர் தேடுதல் நடத்திய படையினர் ஆயுத தளபாடங்களை மீட்டுள்ளனர் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

---

## பயணிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இத் தகவலைத் தெரிவித்தார்.

யாழ். மாவட்டச் செயலகத்தில் மே மாத 2 ஆவது, 3 ஆவது கப்பலிற்கான அனுமதிச் சீட்டினை பெற்றுக்கொண்டவர்களும் அவசர தேவையின் நிமித்தம் செல்ல இருப்பவர்களும் இன்று காலை 8 மணிக்கு யாழ். ரயில் நிலையத்துக்கு சமுகமளிக்கு மாறும் பயணிகள் தங்களுடன் 10 கிலோ எடையுள்ள பொருள் களை மட்டும் எடுத்துச் செல்ல முடியும் என்றும் அரசாங்க அதிபர் அறிவித்தார்.

---

## வன்னியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்கொலைத் தாக்குதல்களை எதிர்கொள்கின்றனர் எனத் தெரிவித்துள்ள இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதயநாணயக்கார, இதனால் ஏற்பட்டுள்ள உயிரிழப்புகள் குறித்த விவரங்களை வெளியிட மறுத்துள்ளார்.

இதேவேளை தொடரும் மோதல்களில் படையினர் பாதுகாப்பு வலயத்திலுள்ள முள்ளிவாய்க்கால் பகுதியில் உள்ள விடுதலைப் புலிகளின் மண்ணரணை கைப்பற்றியுள்ளனர் என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (அ-சி)

---

## எமது கட்டுப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகள் எழுதிய கடிதத்திலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளதென இணையத்தள தகவல் தெரிவித்தன.

எமது கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் செயற் பாடுகளுக்கு நாம் பூரண பாதுகாப்பளிப்போம். அதற்கு நாம் உத்தரவாதம் அளிக்கிறோம்.

செஞ்சிலுவைக் குழுவின் பணியாளர்களுக்கு உரிய பாதுகாப்பை நாம் வழங்குவோம் - என்று அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-சி)

---

## புல்மோட்டையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியா செட்டிக்குளம் மெனிக்பாம் நிலைய மக்களுக்கென இங்கு ஏற்கனவே தள வைத்தியசாலை ஒன்று இயங்குகிறது. அதற்கு பிரான்ஸ் உதவி வருகிறது. அடுத்த சில நாள்களில் 100 படுக்கை வசதி கொண்ட இன்னொரு தள வைத்தியசாலை பிரான்ஸ் அரசினால் அமைக்கப்படவுள்ளது எனவும் மெனிக்பாமில் தாய், சேய் சுகாதார மேம் பாட்டுத் திட்டமும் அமுலாக்கப் படுவதாக வும் சுகாதார அமைச்சுத் தெரி வித்துள்ளது.

இதற்கிடையில் அமைச்சின் செயலாளரும், இந்தியத் தூதரகத்தின் உயரதிகா ரிகள் சிலரும் வவுனியாவுக்கு நேற்றுச் சென்று இடம்பெயர்ந்து வந்த மக்களின் குறைநிறைகளைக் கேட்டறிந்தார்கள். அப்போது சுமார் 30 லட்சம் ரூபா பெறுமதி வாய்ந்த மருந்துப் பொருள்கள், உலர் உணவுப்பொருள்கள் என்பவற்றை அவர்களுக்கு வழங்கினர். (அ-சி)

---

## இலங்கைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றுவதற்கு அங்கு செல்லவேண்டியது அவசியம் என நினைத்தால் பான்- கீ- மூன் அங்கு செல்வார் என்றும் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

பான்- கீ- மூன் இலங்கை நிலவரத்தை தொடர்ந்தும் உன்னிப்பாக அவதானிப்பார் என்றும் பேச்சாளர் மேலும் சொன்னார்.

இதேவேளை, இலங்கையில் மோதலில் சிக்குண்டுள்ள மக்களைப் பாதுகாப்பது குறித்த விடயத்தில் ஐக்கிய நாடுகள் சபை எவ்வித அவசரத்தையும் வெளிப்படுத்தவில்லையென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான விவகாரங்களுக்கான ஆணையாளர் ஜோன் ஹோம்ஸ் இலங்கை நிலவரம் குறித்த மதிப்பீட்டுக் குழுவை நியமிக்காமல் வேறொரு நாட்டிற்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளார். பான் - கீ- மூன் இலங்கைக்கு செல்வது குறித்து இன்ன மும் தீர்மானிக்கப் பட வில்லையென அவரது பேச்சாளர் தெரிவித்துள்ளார். இந்த விடயங்களைப் பார்க்கும் போது இலங்கை விவகாரத்தில் ஐ. நா. சபை இன்னமும் ஆழமான செயற்பாட்டை வெளிப்படுத்த வில்லை - அவசரம் காட்டவில்லை - என்றே தெரிகிறது என சர்வதேச விவகார அவதானிகள் கருத்துத் தெரிவித்தனர். (அ)

---

## யாழ்ப்பாணம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இத்தகவலைச் சொன்னார்.

இரு மாவட்டங்களிலும் உள்ள உள்ளூராட்சிச் சபைகளுக்கு மிக விரைவில் தேர் தல்களை நடத்தத் திட்டமிட்டுள்ளோம். அதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப் பட்டுவிட்டன - என்றும் ஜனாதிபதி கூறினார். (அ-1)

---

## மரண அறிவித்தல்

### நடராஜா யோகாம்பிகை

பளை, வேம்பொடுகேணியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி நடராஜா யோகாம்பிகை நேற்று (07.05.2009) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் புத்திரியும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - கதிராசிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும் நடராஜாவின் அன்பு மனைவியும் யசோதரா, வதனா, நியூதா (கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம், A/L 2010 மாணவி) ஆகியோரின் பாசமிகு தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.05.2009) வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரின் தற்காலிக வதிவிடமான தவசிக்குள வீதியில் அமைந்துள்ள இல்லத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மிருசுவில்,
கொடிகாமம்.

தகவல்:
ஆ.நடராஜா (கணவர்).

G.A.Q பேராதனைப்பல்கலைக்கழகம் (வெளிவாரி)
- புதிய ஆண்டிற்கான பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பதிவுகள் நடைபெறுகின்றன.
- எமது நிறுவனத்தினால் பதிவுத் திகதி நீடிக்கப்பட்டுள்ளது.
- பதிவு முடிவு திகதி 15.05.2009
குறிப்பு:- 1St in Com G.A.Q. யாழ்ப்பாணம், பல்கலைக்கழகத்தின் புதிய ஆண்டிற்கான விரிவுரைகள் ஆரம்பமாகி நடைபெறுகின்றன.
★ பதிவு முடிவுத் திகதி: 15.05.2009 என்பதை மாணவர்கள் கவனத்தில் கொள்ளவும்.
விபரங்களுக்கு:- S.அருள்நங்கை நிர்வாகி புதிய உயர்கல்லூரி, ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

பௌதிகவியல்
S.R.Bala B.A.(Hons) Dip in Ed.
A/L 2010
மாணிப் பௌதிகவியல்
[Sat, Sun 9 - 10 a.m]
A/L 2011
செய்முறைப் பௌதிகவியல்
[Sat, Sun 12 - 1 p.m]
ஆரம்பம்: 09.05.2009

துரித மீட்டல் வகுப்பு
இந்து நாகரிகம் பகுதி - II
By:S.ஜெயக்குமார்
ஆரம்பம் : 09.05.2009
சனி 8 a.m
யுனிவேர்சல்

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.05.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org